# மொரிசியசில் தமிழ்ப் பண்பாடு



முனைவர் சா. உதயசூரியன்

UG 7233

# மொரிசியசில் தமிழ்ப் பண்பாடு

தமிழக அரசு நல்கையின் கீழ் நிறைவு செய்யப்பட்ட
ஆய்வுத்திட்டம் (2013 - 2014)

முனைவர் சா. உதயசூரியன்

அயல்நாட்டுத்தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 10.
2014

ISBN : 978-81 -7090-465-6

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 422
திருவள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி செப்டம்பர் - 2016.

| | | |
|---|---|---|
| நூல் | : | மொரிசியசில் தமிழ்ப் பண்பாடு |
| ஆசிரியர் | : | முனைவர். சா. உதயசூரியன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2016 |
| பக்கம் | : | 174 |
| தாள் | : | TNPL மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | : | டெம்மி 1 x 4 |
| நூற்கட்டு | : | சாதாகட்டு |
| விலை | : | ரூ. 360.00 |
| படிகள் | : | 500 |
| வெளியீடு | : | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |
| அச்சு | : | குழந்தை இயேசு அச்சகம், தஞ்சாவூர். |

முனைவர் க. பாஸ்கரன்
துணைவேந்தர்

மின் அஞ்சல்: rg.bhaskaran@gmail.com
இணையதளம் : www.tamiluniversity.ac.in

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்–613010 – தமிழ்நாடு, இந்தியா
அலுவலகம் : 04362–227040
இல்லம் : 04362–226741
நிகரி : 04362 226159

## அணிந்துரை

உலகமெங்கும் பரவிக் கிடக்கும் தமிழ் மக்களின் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டுத் தேவையை நிறைவு செய்யும் நோக்கிலேயே தமிழ்ப் பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது. இந்த நோக்கினை நன்குணர்ந்த முனைவர் சா.உதயசூரியன் "மொரிசியசில் தமிழ்ப் பண்பாடு" எனும் சிறந்த ஆய்வைப் படைத்துள்ளார்.

மொரிசியசு வாழ் தமிழ் மக்கள் தங்கள் சமயப் பண்பாட்டை மட்டுமே காப்பாற்றிக் கொண்டு மொழி வளர்ச்சி மீது ஆர்வங்காட்டாத நிலையை இந்த ஆய்வு சரியாக இனங் காட்டுகிறது.

இத்தீவில் வாழும் தமிழாசிரியர்கள் தமிழைக் கூட கிரியோல் மொழி மூலம் சொல்லித் தரும் அவலம் தொடர்கிறது. உயர் கல்வி பெற்றிட்ட தமிழர்கள் பேசும் தமிழிலும் எழுத்துத் தமிழே இருந்து வருகிறது. தமிழை வீட்டுமொழியாகக் கூட அங்குள்ள தமிழர்கள் பேச மறந்து விட்டனர். இதுபோன்ற கசப்பான உண்மைகளை இந்த ஆய்வு வெளிச்சப்படுத்திக் காட்டுகிறது.

கரும்புத் தோட்டங்களில் கூலிகளாக இருந்த காலத்தில் வளர்ந்திருந்த தமிழ் இன்று தமிழர்கள் பொருள் வளம் பெற்ற நிலையில் தேய்ந்த தமிழாய் மாறியிருப்பது ஒரு வரலாற்றுச் சோகமாகும்.

பண்பாட்டு நிலையிலும் தலைமுறை இடைவெளி ஏற்பட்டு மெல்ல மெல்ல தமிழ்ச் சமூகத்தில் சரிவுகள் ஏற்படத் தொடங்கிவிட்டன. எனவே மொழித் தக்கவைப்பும் பண்பாட்டு மீட்டுருவாக்கமும் இன்றைய மொரிசியசு தமிழர்களுக்கான அவசரத் தேவைகளாக மாறியுள்ளன என்பதை இந்த ஆய்வு நன்கு வெளிப்படுத்திக் காட்டுகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நோக்கத்திற்கேற்ற சிறந்த ஆய்வைப் படைத்தளித்த முனைவர் சா.உதயசூரியன் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

(க. பாஸ்கரன்)

## நன்றியுரை

தமிழ்ப்பல்கலைக்கழகம் ஓர் உயராய்வு நிறுவனம் என்பதை உலகம் உணர ஆய்வுத்திட்டங்களுக்கெனச் சிறப்பு நிதிநல்கை அளித்து தமிழாராய்ச்சிக்கு முன்கை தந்துகொண்டிருக்கும் தமிழக அரசுக்கு முதல் நன்றியைப் பதிவு செய்கிறேன்.

திட்டமிடுதலை அறிவியல் பார்வையோடு அணுகி ஆய்வின் ஒவ்வொரு படிநிலை வளர்ச்சியையும் கூர்ந்து கவனித்து, குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஆய்வுரைகள் அனைத்தும் நிறைவடைய ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அள்ளித் தந்த மாண்பமை துணைவேந்தர் பெருந்தகை **பேராசிரியர்** முனைவர் ம.திருமலை அவர்களுக்கு என்றென்றும் நன்றி பாராட்டுவேன்.

மொரிசியசு நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டபோது தரவுகள் சேகரிப்பு முதல் தங்கும் வசதி வரை அனைத்தையும் செய்து தந்த உயரிய தமிழ் உள்ளம் படைத்த மகாத்மா காந்தி நிறுவனத்தின் இந்திய மொழிகள் புலத்தலைவர் **பேராசிரியர் முனைவர் கேசவன் சொர்ணம்** அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மொரிசியசில் வாழ்ந்தாலும் தமிழ்நாட்டுத் தமிழ்க் குடும்பம் போலவே குடும்பத்தினர் அனைவரையும் பேச்சுத்தமிழில் இயல்பாகப் பேசவைத்து, தமிழ்ப் பண்பாட்டினைக் கண்ணுங் கருத்துமாய் வளர்த்து வருபவர் **பேராசிரியர் முனைவர் பொன்.திருமலைச்செட்டி அவர்கள்**. என் ஆய்வுத்திட்டம் சிறப்பாக நிறைவேற ஆலோசனைகள் நல்கியதோடு அனைத்துலகப் புலம்பெயர்ந்த தமிழர் ஒருமைப்பாடு மாநாட்டுக்கு என்னை அழைத்துச் சென்று அன்பு பாராட்டிய இவரின் பண்பையும் பாசத்தினையும் என்றும் நெஞ்சில் ஏந்தி நிற்பேன்.

மொரிசியசுத் தீவின் அழகையெல்லாம் அள்ளிப் பருக துணைநின்றவர் **திரு.தேவன் குருப்தாசு** அவர்கள். இடைவிடாத பணிநெருக்கடிகளுக்கு நடுவேயும் எனக்காக நேரம் ஒதுக்கி, வீட்டில் தங்க வைத்து, பல இடங்களுக்கும் அழைத்துச் சென்ற இவருக்கு என் அன்பார்ந்த நன்றி.

மொரிசியசின் தமிழ்ப் பாண்பாட்டு வரலாற்றை முழுமையாக உள்வாங்கி வைத்திருக்கும் ஆற்றல் வாய்ந்தவர் திருமிகு **கதிர்வேல் சொர்ணம்**. இவர் தொலைக்காட்சி, வானொலி என ஊடகங்களில் என்னை அறிமுகப்படுத்தி ஆய்வுக்கான தரவுகள் பலவற்றைச் சேகரித்து தந்தார். இவருக்கு என் தனித்த நன்றி.

மொரிசியசு நாட்டில் தமிழ் வளர்க்கும் நிறுவனமாக விளங்கும் மகாத்மா காந்தி நிறுவனத்தின் வழி பல ஆய்வுக் குறிப்புகளைத் திரட்ட உதவியவர் தமிழ்த்துறை விரிவுரையாளர் திருமதி கிருட்டிணம்மாள் முனிகாடு. மேலும் தூர தேசத்தில் உணவுச்சிக்கல் எதுவும் எனக்கு ஏற்படாமல், நாள்தோறும் மகாத்மா காந்தி நிறுவன விருந்தினர் விடுதிக்குச் சுவையான தமிழர் உணவுகளைத் தம் வீட்டிலேயே தயாரித்து எடுத்து வந்து தந்து அன்பு பாராட்டிய அவருக்கு என் இனிய நன்றியை வழங்கி மகிழ்கிறேன்.

நெய்வேலி ஈரோடு எனப்புத்தகக் கண்காட்சிகளில் நூல்கள் வாங்குவது முதல் தரவுகள் சேகரிப்பு வரை ஓயாது உழைத்து உதவிய என் பிரியமுள்ள ஆய்வு மாணவன் க.அருள்முருகனுக்கு என் இதயத்தில் எப்போதும் இடமுண்டு.

இந்த ஆய்வுரையைக் கணினி வழி தட்டச்சு செய்து மீண்டும் மீண்டும் திருத்தங்கள் செய்தாலும் மகிழ்ச்சியோடு அவற்றைச் சரிசெய்து அழகிய ஆய்வேடாக ஆக்கித் தந்த திருமதி சுமதி அவர்களுக்கும் மற்றும் அட்டைப்படத்தினை வடிவமைத்துக் கொடுத்த திருமதி உஷா அவர்களுக்கும் என் நன்றிகள்.

சா.உதயசூரியன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 1 - 3 |
| இயல் 1 | தமிழர் புலம்பெயர்வு | 4 - 21 |
| இயல் 2 | வாழ்க்கை முறையில் பண்பாடு | 22 - 49 |
| இயல் 3 | வழிபாட்டு முறையில் பண்பாடு | 50 - 93 |
| இயல் 4 | மாறி வரும் பண்பாடும் மீட்டுருவாக்கமும் | 94 - 139 |
| | பரிந்துரை | 140 - 142 |
| | துணைநூற்பட்டியல் | 143 - 148 |
| | பின்னிணைப்புகள் | |

# முன்னுரை

கவிக்கோ அப்துல்ரகுமான் ஐக்கூவின் ஆழத்தையும் அடர்த்தியையும் கண்டு அதைச் "சின்னதாக இருக்கும் பெரிய அற்புதம்" என்று வியந்து எழுதுவார். இந்த வியப்பு மொரிசியசுக்கும் பொருந்தும். எழில் தவழும் மொரிசியசுத் தீவைத் தரிசிக்கும் எவரும் அந்தச் சின்னஞ்சிறு தீவின் அற்புத அழகில் மயங்கித் திளைக்காமல் இருக்க முடியாது.

மொரிசியசைத் தமிழ் மண்ணுக்கு அறிமுகப்படுத்தியதில் இரண்டு இலக்கியப் படைப்புகள் முழுவெற்றி கண்டவை.

முதல் இலக்கியம் சுத்தானந்த பாரதியாரின் கவிதை இலக்கியம். மொரிசியசு நாட்டைக் குறித்து இவர் பாடிய பாடலை அங்குள்ள தமிழ்மக்கள் அந்நாட்டு வாழ்த்தாகவே போற்றிப் புகழ்கின்றனர்.

## நாட்டு வாழ்த்து

வாழியவே வாழியவே மோரிசு
வளங்குலுங்கும் இளம்பொழிலார் மோரிசு
ஆழியலை கும்மிதட்டும் மோரிசு
அழகுமலை சூழுமெங்கள் மோரிசு

முருகநகர் மூரிநகர் மோரிசு
முத்துநகர் பத்திநகர் மோரிசு
வருகவென்றே உருகியழை மோரிசு
வண்ணமயில் தோகையெனும் தோரிசு

பச்சைவளம் பளபளக்கும் மோரிசு
பறவையினம் பாடுகின்ற மோரிசு
உச்சமலை ஓங்கிவளர் மோரிசு
உலகினிலே சிறந்ததுநம் மோரிசு

மண்ணெல்லாம் கரும்புரசம் ஊறுமே
மணமெல்லாம் மாணிக்கத்தேன் பாருமே
எண்ணஎண்ணக் கவலையெல்லாம் மாறுமே
எல்லாரும் நல்லதெனத் தேறுமே

தமிழர்களின் உழைப்பினிலே தழைத்ததே
சைவசமயத்தினிலே செழித்ததே
பழகியதும் பாலமுதம் போலுமே
பண்பாட்டால் அருளுவது நாளுமே
- சுத்தானந்த பாரதியார்

இரண்டாவது இலக்கியம் 'நீலக்கடல்' நாவல். பிரான்சு நாட்டில் வாழும் தமிழ்ப் படைப்பாளி நாகரத்தினம் கிருஷ்ணா எழுதியுள்ள இவ்வரலாற்று நாவலில் மொரிசியசின் ஒட்டுமொத்த அழகையும் நம் கண்முன் நிறுத்தி விடுகிறார். அதில் ஒரு பகுதி :

"இந்தியப் பெருங்கடலின் தொப்புளாக மொரிசியஸ் தீவு. சுற்றிலும் மலைத் தொடர்கள், அவற்றைத் தழுவி, பிரிவதற்கு மனமின்றி சுற்றிவரும் வெண்மையும் கருமையும் கலந்த மேகம்... வடமேற்கில் கடல் - நீலக்கடல், கடல் நோக்கிக் காதலுடன் இறங்கிவரும் நிலம் - நெய்தல் நிலம், பெயர் போர் லூயி (Port Louis - லூயி துறைமுகம்), நீலக்கடல் அலைகளின் நிறுத்தாத நடனம். நட்டுவாங்கமாகக் கிறீச்சிடும் கடல் நாரைகள், கரையும் நீர்க்காகங்கள். இடைக்கிடையே கரையின் திசையிற் பாய்ந்து மீண்டும், புறப்பட்ட இடத்தினை ஞாபகத்தில் வைத்துத் திரும்புகின்ற அவற்றின் தீராத விளையாட்டு. தெளிந்த கடல் நீரில், தெரிந்த இருட்டுப் படலம். அவற்றில் வெள்ளியும் தங்கமுமாய் உயிர்பெற்று அலைகின்ற மீன்படலம். வெள்ளியைப் பொடிசெய்து கரையெங்கும் பரப்பியது போன்று கடலோர மணல். முடிந்த மட்டும் அவற்றைக் கொள்ளை அடித்துக் கடலிற் சேர்ப்பதில் கவனமாயிருக்கும் அலைகள். அலைகளின் பிடியிலிருந்து தப்பித்து மணற் பறித்து முகம் புதைக்கும் இல்லி நண்டுகள், மென்சிவப்புக் கடலோர நண்டுகள். நீரும் காற்றுக் குமிழ்களுமாய் வெடித்து அடங்கும் அவற்றின் சுவாசம். மேற்கே தன் கதிர்களை, அடர்ந்திருந்த வேம்பு, மா, இலவு, வாதுமை, புன்னை, மூங்கில் அடர்ந்த மரங்களுக்கிடையே நிறுத்தித் தன்னை அடையாளப் படுத்தியவாறு வீடு திரும்பிக் கொண்டிருக்கும் சூரியன். தெளிந்த வானத்தில் திடுமென்று கறுத்த மேகம். மலைப்பகுதிகளிலிருந்து எப்போதும் போலச் சிலுசிலுவென்ற சீதளக் காற்று."

மேற்கண்ட இந்த இரண்டு இலக்கியங்களைப் படிக்க நேரும் ஒவ்வொருவருக்கும் மொரிசியசு மீதான கனவும் காதலும் வளர்வது நிச்சயம்.

ஆய்வுப் பார்வையில் மொரிசியசில் வாழும் தமிழ்மக்களின் புலம்பெயர்ந்த வரலாற்றையும் அவர்களின் தமிழ்க்கல்வி நிலமைகளையும் விரிவாக முன்வைத்த முதல் பெரும்நூல் பேராசிரியர் முனைவர் சு.இராசாராம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியபோது வெளியிட்ட “மொரீசியஸ் தமிழரும் தமிழும்” எனும் நூலாகும். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மக்களையும் அவர்களுடைய மொழியையும் ஆராய இந்நூல் இலக்கணம் வகுத்துத் தருவதுபோல அமைந்து சிறக்கிறது.

மொரிசியசு மண்ணில் தலைமுறைத் தலைமுறையாக வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் தங்களின் தாய்மொழியைத் தக்கவைத்துக் கொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர். தமிழ்ப் பண்பாட்டை மட்டும் விடாப்பிடியாகப் பின்பற்றித் தங்கள் இன அடையாளத்தைக் காத்து வருகின்றனர். இவர்களின் இந்தப் பண்பாட்டுத் தக்கவைப்பு முயற்சிகளை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

ஒரு முறைப்படியான நடத்தை முறைக்கு மக்கள் தங்களைத் தாங்களே உட்படுத்திக் கொள்ளும் தொடர் செயல்பாடே பண்பாடு எனப்படும். ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கு எவை எவை அவசியமென்று கருதப்படுகிறதோ அவையே அப்பண்பாட்டினரின் விழுமியங்கள் ஆகும். மொரிசியசு தமிழர்களிடையே நிலவும் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை அடையாளப்படுத்துவதாகவும் இவ்வாய்வு அமையும்.

# இயல் ஒன்று
# தமிழர் புலம்பெயர்வு



# இயல் 1
# தமிழர் புலம்பெயர்வு

## முன்னுரை

காணுமிடமெல்லாம் கரும்பு வயல்களாய்க் காட்சியளிக்கும் பசுமையழகால் மொரிசியசு கரும்புத்தீவு என அழைக்கப்பட்டாலும் உண்மையில் இந்நாட்டை 'டோடோ பறவைகளின் தேசம்' என்றே குறிக்க வேண்டும். அமைதி நிறைந்த அந்த எழில் பறவை இன்று முற்றிலும் அழிந்துபட்டாலும் மொரிசியசு மக்களின் நெஞ்சில் நிலைத்திருக்கும் பறவையாய் விளங்கி வருகிறது. எனவேதான் மொரிசியசு நாட்டு இலச்சினையில் இடம்பிடித்து வாழ்ந்து வருகிறது.

## இயற்கையழகு

ஆரவாரமில்லாத நீலக்கடலும் ஆர்ப்பாட்டமில்லா மனிதர்களும் நிறைந்த மொரிசியசு தீவை உலகின் மிக அழகான தீவு எனச் சொல்லலாம். தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைகளை நினைவூட்டும் உயரிய மலைகள் அத்தீவின் எழிலுக்கு ஏற்றம் தருகின்றன. சுற்றுலா தரும் இன்பம் முழுவதையும் பெறவிரும்பும் எவரும் மொரிசியசுக்குப் போயாக வேண்டும். போதுமான மழை, மெல்லிய பூங்காற்று, நீண்டு செல்லும் கடற்கரை எனச் சுகமான சுற்றுச்சூழல் இத்தீவெங்கும் பரவியிருக்கிறது.

## திராவிடர் கண்ட தீவு

திரைகடல் ஓடி திரவியம் தேடுவதில் வல்லமை பெற்ற இனம் தமிழினம். தமிழகத்தின் மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருந்ததால் தமிழர்கள் இயற்கையாகவே கடல்பயணத்தில் ஈடுபாடு நிறைந்தவர்களாக இருந்தனர். கடலில் நெடுந்தொலைவு செல்லக்கூடிய நாவாய்களைக் கட்டமைப்பதில் தொழில்நுட்பத்திறன் கொண்டவர்களாக விளங்கினர்.

தமிழ்நாட்டுக்குக் கிழக்கே வெகுதூரத்தில் ஆயிரம் மைலுக்கு அப்பால் இருந்த சாவகம் (கிழக்கிந்திய தீவுகள்), காழகம் (மியான்மர்), கடாரம் (மலேசியா) முதலான கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று வந்த வரலாறு நம் கடலியல் அறிவின் தொன்மையைக் காட்டுகிறது. நடுக்கடலில் காற்றினாலும் மழையினாலும் புயலினாலும் பெருந்துன்பங்கள் நேர்ந்தும் அவற்றை எதிர்கொண்டு நாவாய்களை ஓட்டிச் செல்லும் திறம் பழந்தமிழருக்கிருந்தது.[1] இயற்கையாக ஏற்படுகிற இன்னல்கள் மட்டுமன்றி கடல் கொள்ளையர்களாலும் பல இடர்ப்பாடுகள் இந்நாளைப் போலவே அந்நாளிலும் நேர்ந்துள்ளன.

துளுநாட்டின் எழில் மலைக்கு நேரே கடலில் இருந்த ஒரு தீவில் கடற்குறும்பர் தங்கியிருந்து கடற்கொள்ளையில் ஈடுபட்டு வந்ததை யவனர் குறிப்புகளின் மூலம் அறியலாம். இந்தக் கடற்குறும்பரைச் சேரன் செங்குட்டுவன் அழித்த வரலாற்றைப் பதிற்றுப்பத்து பதிவு செய்துள்ளது.

"இனியார் உளரோ நின் முன்னும் இல்லை
மழை கொளக் குறையாது, புனல்புக நிறையாது
விலங்குவளி கடவும் துளங்கு இருங் கமஞ்சூல்
வயங்கு மணி இமைப்பின் வேல்இடுபு
முழங்கு திரைப் பனிக்கடல் மறுத்திசினோரே?" [2]

- பரணர்

செங்குட்டுவன் கடல்துருத்திக் குறும்பரை வென்றதால் 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' எனப் பெயர் பெற்றான்.

இவ்வாறு பருவக்காற்றின் உதவியினால் வெகுவிரைவில் நடுக்கடலில் பயணஞ் செய்ய அறிந்த இனமாகத் தமிழினம் இருந்தமையால் பல நாடுகளுக்கும் தீவுகளுக்கும் முதன்முதலாகச் சென்று வந்த வரலாற்றைப் பழந்தமிழர் படைத்துள்ளனர். மொரிசியசு தீவும் இதற்கு விதிவிலக்கன்று.

மொரிசியசு நாட்டின் தந்தை எனப் போற்றப்படும் சிவுசாகர் இராம்கூலம் அவர்கள் 1968ஆம் ஆண்டு மொரிசியசு நாடு ஐக்கியநாடுகளின் சபையில் 124 வது நாடாகச் சேர்ந்தபோது ஐக்கியநாடுகளின் பொது அவையில் முதன்முதலாக உரை நிகழ்த்தியபோது ஓர் அரிய வரலாற்று உண்மையைப் பதிவு செய்துள்ளார்.

"ஆரிய காலத்துக்கு முன் திராவிடக் கடலோடிகள்தான் முதன்முதலில் மொரிசியசுத் தீவைக் கண்டுபிடித்துள்ளனர்." [3]

என்று உலகநாட்டுத் தலைவர்களின் முன்னிலையில் அவர் எடுத்துரைத்த கருத்து தமிழ்ச் சமுதாயத்தின் அற்றைநாள் கடலியல் அறிவுக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

மேலும் அண்மையில் மொரிசியசில் நடந்த தொல்லியல் ஆய்வில் ஏழு பிரமிடு கோபுரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கி.பி 10 ஆம் நூற்றாண்டில் அராபியர்கள் இத்தீவைக் கண்டுபிடிக்கும் முன்னரே அங்கு வேறு மனிதர்கள் இருந்திருப்பதை இப்பிரமிடுகள் உறுதிப்படுத்தியுள்ளன. [4] இந்த ஆய்வு மேலும் தொடர்ந்து செழுமைப்படும்போது மொரிசியசு நாட்டில் முதலில் குடியேறியவர்கள் திராவிடர்கள்

என்பது உறுதிப்படும். எனவே மொரிசியசு நாட்டில் பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழரின் முதல் குடியேற்றம் நடந்தது எனலாம்.

**தமிழரின் இரண்டாம் குடியேற்றம்**

கிழக்காப்பிரிக்கக் கடற்கரைப் பகுதிகளில் வணிகத்தில் ஈடுபட்டு வந்த அரேபியர்கள் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் மொரிசியசு தீவைக் கண்டடைந்துள்ளனர். அவர்கள் இத்தீவுக்குள் காலெடுத்து வைக்கும்போது கடும்புயலால் அத்தீவு உருக்குலைந்திருந்தது. எனவே அதற்குக் "கைவிடப்பட்ட தீவு" என்று பொருள் தரும் "தினா அராபி" எனப் பெயர் சூட்டினர். மொரிசியசின் கடற்கரைப் பகுதியில் பின்னாளில் கண்டெடுக்கப்பட்ட அரபு எழுத்துக்கள் அரேபியர்களின் தொடர்பை உறுதி செய்தன.

அரேபியர்களுக்குப் பின் போர்ச்சுக்கீசியர்கள் இத்தீவினைக் கண்டறிந்துள்ளனர். கி.பி. 1507 ஆம் ஆண்டு டொமிங்கோ பெர்னாண்டஸ் பெரைரா எனும் போர்ச்சுக்கீசியர் அன்னத்தீவு (Island of Swan) எனப் பெயரிட்டுள்ளார். இவர்கள் போர்ச்சுக்கலிலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் கப்பல்கள் உணவு நிரப்பும் இடமாகவுடம் இளைப்பாறும் இடமாகவும் மொரிசியசைப் பயன்படுத்தி வந்தனர்.

கி.பி. 1598 ஆம் ஆண்டு டச்சுக்காரர்களின் ஆளுமையின் கீழ் இத்தீவு வந்தது. அப்போது ஹாலந்து நாட்டின் இளவரசனாக விளங்கிய நாசாவின் மோரீஸ் (Prince Maurice of Nassau) அவர்களின் நினைவாக இத்தீவுக்கு 'மொரிசியசு' எனப் பெயர் சூட்டப்பட்டது. இவர்கள் காலத்தில்தான் இத்தீவில் நிரந்தரக் குடியேற்றம் நிகழ்ந்தது.

கி.பி.1663 ஆம் ஆண்டு மொரிசியசுக்கு டச்சுக்காரர்கள். தமிழகத்தின் துறைமுகப் பகுதிகளிலிருந்து (சென்னை, பாண்டிச்சேரி, காரைக்கால்) தமிழர்களை அழைத்து வந்தனர். இவர்கள்தாம் மொரிசியசு நாட்டில் கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தவர்கள்.

டச்சுக்காரர்களால் மடகாசுகரிலிருந்து கொண்டுவரப்பட்ட அடிமைகள் மூலம் கரும்புப் பயிரைப் பயிர்செய்து பொருளாதார நிலையை மேம்படுத்தத் தொடங்கினர். ஆனால் காலப்போக்கில் மொரிசியசு இலாபம் தரும் நாடாக இவர்களுக்குத் தோன்றவில்லை. ஒன்றன்பின் ஒன்றாக நடந்த காலநிலைச் சீற்றங்களும், எலி போன்ற உயிரினங்கள் கரும்புப் பயிரைக் காப்பாற்ற முடியாத அளவு அழித்து வந்ததாலும் அடிமைகளின் தொல்லைகளாலும் மொரிசியசில் நிலையான குடியிருப்பை ஏற்படுத்தும் எண்ணத்தைக் கைவிட்டனர். மீண்டும் இத்தீவுக்குத் திரும்பும் எண்ணத்தைக்

கைவிட்டு விட்டதால் தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் உருவாக்கிய கட்டடங்களை எல்லாவற்றையும் தரைமட்டமாக்கிவிட்டு நாடு திரும்பினர். கி.பி.1710 ஆம் ஆண்டு இவர்கள் வெளியேறிய பின் பிரெஞ்சுக்காரர்கள் இத்தீவின் மீது ஆர்வங்காட்டத் தொடங்கினர்.

## தமிழரின் மூன்றாம் குடியேற்றம்

கி.பி.1710 க்குப் பின் மொரிசியசு பிரெஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டுக்கு வந்தது. தொடக்கத்தில் டச்சுக்காரர்களைப் போலவே இவர்களும் பல சிக்கல்களை எதிர்கொள்ள நேர்ந்தது. தமிழ் நெசவாளர் சிலர் கி.பி.1719ஆம் ஆண்டு பிரெஞ்சுக்காரர்களின் துணையோடு இத்தீவில் குடியேறியதாக ராம்பீத் எனும் ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகிறார்.[5]

கி.பி.1728 ஆம் ஆண்டு தூய்மா என்பவர் ஆளுநராகப் பதவியேற்றார். இவர் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியில் சேருவதற்கு முன்னர் பாண்டிச்சேரியில் இருந்தவர். தமிழர்களின் கைத்திறன் மற்றும் உழைப்பாற்றலை நன்கு உணர்ந்தவர். இதனால் பாண்டிச்சேரியிலிருந்து தமிழர்களை மொரிசியசுக்குக் கொண்டுவர முடிவு செய்தார். கி.பி.1728 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் கப்பல் மூலம் 275 தமிழர்கள் இத்தீவுக்குக் கொண்டுவரப்பட்டனர். இவர்களுள் 108 பேர் இளைஞர்கள் 95 பேர் கைவினைக் கலைஞர்கள்.

கி.பி.1735ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் லெபோர்தெனே கட்டுமானப் பணிகளுக்காகச் சென்னை மற்றும் பாண்டிச்சேரி பகுதிகளிலிருந்து தமிழர்களை அழைத்து வந்தார். தமிழர்களைக் கொண்டு போர்ட்லூயிசை நேர்த்தியான துறைமுகமாக வடிவமைத்தார். மேலும் போர்ட்லூயிசில் உள்ள அரசாங்க மாளிகையும் பம்பின்மூசில் உள்ள ஆளுநர் மாளிகையும், தமிழர்களின் கலைநுட்பத்தில் உருவாயின.

பிரெஞ்சுக்காரர்களின் காலத்தில் போர்ட்லூயி நகரம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு கிழக்குப் பகுதியில் **'மலபாரிகள்'** என்று அழைக்கப்பட்ட தமிழர்களும் பிற தென்னிந்தியர்களும் வாழ்ந்தனர்.

போர்ட்லூயிசின் வடக்குப் பகுதியில் பாண்டிச்சேரியிலிருந்து வந்த தமிழ்க் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் குடியமர்த்தப்பட்டனர். இப்பகுதியில் வாழ்ந்த தமிழ்க் கிறித்தவர்கள், சமயத்தால் பிரெஞ்சுக்காரர்களோடு இணக்கமாக இருந்தாலும் கலை

மற்றும் பண்பாட்டுத் தொடர்பால் மற்ற சமயத்தைச் சேர்ந்த தமிழர்களோடு இணக்கமாகப் பழகி வந்தனர். பிரெஞ்சு முறையிலான இறைவழிபாட்டை மறுத்து தமிழ்வழிபாட்டையும் மரபையும் பின்பற்றினர். திருமணச் சடங்குகளில் வெற்றிலை, பாக்கு, தேங்காய் போன்றவற்றைத் தவறாது இடம்பெறச் செய்தனர். வாழையிலையில் விருந்து பரிமாறுதல் போன்றவற்றையும் கடைப்பிடித்தனர். வீடுகளில் தமிழில் பேசியும் குழந்தைகளுக்குத் தமிழ்ப்பெயர்களைச் சூட்டியும் தமிழ் அடையாளம் காத்தனர். இன்றும்கூட கல்லறைத் தோட்டங்களில் உள்ள கல்லறைகளில் தமிழ்ப் பெயர்களைக் காணமுடிகிறது.[6]

ஒரு பக்கம் கைவினைக் கலைஞர்களாகத் தமிழர்கள் இங்கு குடியேறிய அதேநேரத்தில் அடிமைகளாகவும் தமிழகத்திலிருந்து தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டதையும் பிரெஞ்சுக் கிழக்கிந்தியப் பதிவேடுகள் சுட்டுகின்றன. அடிமைகளில் பலர் கிறித்தவர்களாக மதமாற்றம் செய்யப்பட்டு தனிச்சலுகைகள் வழங்கப்பட்டன. அடிமைகள் மட்டுமன்றி கடும் குற்றங்களுக்காகத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழர்களையும் பிரெஞ்சு ஆட்சியாளர்கள் மொரிசியசுக்கு நாடு கடத்தினர். போர்ட்லூயி நகர உருவாக்கத்தில் இக்கைதிகளின் பங்கு மிகப்பெரிது.

பிரெஞ்சு ஆட்சிக்காலத்தில் மொரிசியசில் தமிழ் வணிகர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். போர்ட்லூயி நகர உருவாக்கத்தை மேற்கொண்ட தமிழ்த் தொழிலாளிகள் ஒருபுறமும் போர்ட்லூயி நகரப் பொருளாதாரத்தை மேம்படுத்த தமிழ் வணிகர்கள் இன்னொரு புறமும் அயராது உழைத்தனர். அங்கு வணிகம் செய்திட தமிழர்கள் விரும்பி அழைக்கப்பட்டனர். தமிழ் வணிகர்களுக்குப் போர்ட்லூயிசில் பெரும் பொருட்செலவில் வணிக வளாகங்களை அமைத்துக் கொடுத்தனர். அரசாங்கத்தின் பல சலுகைகள் இவர்களுக்குக் கிடைத்தன. அடிமைகளைப் போன்றோ மற்ற தொழிலாளர்களைப் போன்றோ இல்லாமல் இவ்வணிகர்கள் அடிக்கடி தமிழ்நாட்டுக்குச் சென்றுவரும் உரிமையும் பெற்றிருந்தனர்.

இவ்வாறு பிரெஞ்சு ஆட்சிக்காலத்தில் தமிழர் குடியேற்றம் கணிசமாக உயர்ந்தது. அடிமைகளாகவும் தொழிலாளிகளாகவும் மட்டுமே இல்லாமல் வணிகர்களாகவும் அரசு உயர்பதவி வகிப்பவர்களாகவும் தமிழர்கள் இவர்கள் காலத்தில் இருந்தனர் என்பது மொரிசியசு தமிழர் வரலாற்றில் ஒரு வளர்ச்சிநிலை எனக் கொள்ள முடிகிறது.

தமிழரின் நான்காம் குடியேற்றம்

இந்தியாவின் பெரும்பகுதியை ஆளத்தொடங்கிய ஆங்கிலேயர்கள் தொடக்கத்தில் மொரிசியசின் முக்கியத்துவத்தை உணரத் தவறினர். பிரெஞ்சுக்காரர்களின் பல வெற்றிகளுக்குப் பின்புலத்தில் மொரிசியசு இருந்து வந்தது. இந்தியப் பெருங்கடலில் சக்திவாய்ந்த படைத்தளமாக மொரிசியசை மாற்றி வைத்திருந்ததே அவ்வெற்றிகளுக்கு மூலகாரணமாகும். இதை உணர்ந்த ஆங்கிலேயர்கள் இந்தியாவில் இடையூறில்லாத ஆட்சியைத் தொடர மொரிசியசைக் கைப்பற்ற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள். கடுமையான போருக்குப் பின் 1810 ஆம் ஆண்டு மொரிசியசு ஆங்கிலேயர் வசமானது. இப்போரில் ஆங்கிலேயர் படையில் 9000 தமிழ் வீரர்களைக் கொண்ட காலாட்படை இருந்தது. இவர்களின் வீரஞ்செறிந்த போர்மூலமே மொரிசியசை ஆங்கிலேயர் கைப்பற்ற முடிந்தது.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்தவுடன் இடையில் **'பிரான்சு தீவு'** என அழைக்கப்பட்ட இத்தீவுக்கு மீண்டும் மொரிசியசு எனப் பெயர் சூட்டினர். ஆங்கிலேயர் ஆட்சியில் மொரிசியசின் முதல் ஆளுநராக சர் இராபர்ட் டவுன்சென்ட் ஃபர்குவார் நியமிக்கப்பட்டார். இவர்தான் கரும்பை மையப்படுத்திய புதிய பொருளாதாரக் கொள்கையை உருவாக்கி இத்தீவின் செல்வவளத்துக்கு அடித்தளமிட்டவர்.

கி.பி.1833 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் அடிமை முறை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது கரும்புத் தோட்டங்களில் கடுமையாக உழைத்துவந்த அடிமைகள் வேலை செய்ய மறுத்தனர். கரும்புத் தோட்டங்களை அடிமையின் சின்னமாகக் கருதினர். இதனால் தோட்டங்களில் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டது. எனவே இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை ஒப்பந்தக் கூலிமுறையில் அமர்த்த முடிவு செய்தனர். இந்த முடிவால்தான் தமிழர் குடியேற்றம் உச்சநிலையை அடைந்தது.

கொல்கத்தா, மும்பை, சென்னை நகரங்களில் இயங்கி வந்த **'வணிகர் சங்கம்'** எனும் நிறுவனம் ஒப்பந்தக் கூலி அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களை மொரிசியசுக்கு அனுப்பி வந்தது.

கி.பி.1874 முதல் கி.பி.1884 வரை சென்னையிலிருந்து மொரிசியசு மற்றும் யூனியன் சென்றோர் விவரத்தை ஆவணக் காப்பகப் பதிவேடுகள் பின்வருமாறு குறிப்பிடுகின்றன.[7]

## புலம் பெயர்ந்தோர் எண்ணிக்கை

ஆண்டு வாரியாக

| ஆண்டு | கல்கத்தா | சென்னை | பம்பாய் |
|---|---|---|---|
| 1862 | 215 | 134 | 35 |
| 1863 | 114 | 102 | 27 |
| 1864 | 360 | 162 | 64 |
| 1865 | 540 | 135 | 35 |
| 1866 | 321 | 216 | -- |
| கூடுதல் | 1550 | 749 | 161 |

மாநகர் வாரியாக

| ஆண்டு | புலம்பெயர்ந்தோர் |
|---|---|
| 1874-75 | 5844 |
| 1875-76 | 2507 |
| 1876-77 | 2525 |
| 1877-78 | 3707 |
| 1878-79 | 3697 |
| 1879-80 | 6548 |
| 1880-81 | 3182 |
| 1881-82 | 996 |
| 1882-83 | 2598 |
| 1883-84 | 2322 |
| கூடுதல் | 33926 |

## பயண வலிகள்

தமிழ்நாட்டில் நிலவி வந்த சாதிய ஒடுக்கு முறைகளும் கடுமையான பஞ்சமும் உழைக்கும் தமிழர்களைப் புலம்பெயர வைத்தன. புதிய கனவுகளோடு கப்பலேறிய அவர்கள் ஏராளமான இன்னல்களை எதிர்கொண்டனர். கப்பலில் கீழ்த்தளத்தில் அடுக்கு வைக்கப்பட்டிருந்த உணவு மூட்டைகளோடு மூட்டைகளாய் அவர்கள் அடைக்கப்பட்டனர். பெரும்பாலோர் கடல் நோய்க்கு ஆளானார்கள். உணவுப் பற்றாக் குறையால் உடல்மெலிந்தார்கள். சுகாதார வசதியில்லாத கப்பல்களில் மருத்துவ வசதியும் இல்லாததால் பலர் மரணத்தைச் சந்தித்தனர்.

பாண்டிச்சேரியிலிருந்து புறப்பட்ட கப்பல்களில் நெரிசல் காரணமாகவே பல தொழிலாளர்கள் மாண்டுவிட்டதாகக் குறிப்புகள் புலப்படுத்துகின்றன. போதுமான கழிவறைகள் இல்லாமையாலும் கலாரா, டைபாய்டு போன்ற தொற்றுநோய்கள் பரவின. மேலும் பயணத்தின் நடுவே புயல், சூறாவளி போன்ற இயற்கைச் சீற்றங்களாலும் தொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளாயினர். இதனால் பயணநாட்களும் அதிகரித்தன. சில கப்பல்கள் 40 நாட்களும் சில கப்பல்கள் 60 நாட்களும் பயணித்தன.

## தோட்டப்புறச் சிக்கல்கள்

ஆங்கிலேயர் அடிமைமுறை ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டு அதற்கு மாற்றாக ஒப்பந்தக் கூலி முறையைக் கொண்டுவந்தனர். இந்த ஒப்பந்தம் தொழிலாளிகளுக்குச் சார்பான பல கூறுகளைக் கொண்டிருந்தது.[8] அவற்றுள் சில:

- ❖ ஒப்பந்தத் தொழிலாளியாகத் தான் செல்ல விரும்புவதை வெளிப்படையாக நீதிபதியின் முன் ஒப்பந்தத் தொழிலாளி வாக்குமூலம் வழங்கவேண்டும்.
- ❖ ஆசை வார்த்தைகள் கூறி ஏமாற்றித் தொழிலாளர்கள் ஒப்பந்தத்தில் ஈடுபடுத்தக்கூடாது.
- ❖ ஒவ்வொரு ஒப்பந்தத் தொழிலாளிக்கும் ஆறுமாதச் சம்பளம் முன்பணமாகத் தரப்படவேண்டும்.
- ❖ ஒவ்வொரு ஆண்டும் ஒரு வேட்டி, ஒரு சட்டை, இரண்டு கம்பளிப் போர்வைகள், குளிர்காலக் கோட்டு, இரண்டு தொப்பிகள் ஆகியவை கொடுக்கப்படவேண்டும்.

ஒப்பந்த முறையில் இடம் பெற்றிருந்த மேற்கண்ட விதிகளை நம்பி கப்பல் ஏறிய தமிழர்கள் மொரிசியசு வந்து சேர்ந்ததும் தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தனர். ஒப்பந்தப்படி அல்லாமல் எல்லா வேலைகளையும் செய்யுமாறு தோட்டத் தொழிலாளர்கள் பணிக்கப்பட்டனர்.

தோட்ட உரிமையாளர்கள் தொழிலாளிகளிடம் இரக்கம் சிறிதுமின்றிக் கடுமையாக நடந்து கொண்டனர். போதுமான கூலியும் தர மறுத்தார்கள். தேவையான அளவு உணவு தரவும் மறுத்தனர். விடியற்காலை 4 மணி முதல் அந்திமாலை 6 மணி வரை தொடர்ந்து உழைக்குமாறு கட்டாயப்படுத்தினர். தோட்டப்புறங்களில் காற்றோட்டம் சிறிதுமில்லாத லயன் குடியிருப்புகளில் விலங்குகளைப் போல அடைக்கப்பட்டனர். அங்கிருந்து எவரும் தப்பிச் செல்ல முடியாதவாறு காவல் போடப்பட்டிருந்தது. மீறிச் சென்றால் கசைபடியும் சாட்டையடியும் தண்டனைகளாய் வழங்கப்பட்டன. உடல்நலக் குறைவால் பணிக்குச் செல்ல இயலாதபோது அவர்களுக்கு ஊதியம் மறுக்கப்பட்டது. ஊதியம் தொடர்பாக வழக்குகள் தொடர்ந்தால் குற்றம் செய்த முதலாளிகளுக்குத் தண்டனை வழங்காமல் குற்றஞ்சாட்டிய தொழிலாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்ட அநீதிகள் அரங்கேறின.

தோட்ட உரிமையாளர்களின் கொடுமைகள் நாளுக்கு நாள் மிகுதியான சூழலில் தோட்டப்புறத் தொழிலாளர்கள் பலர் தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொண்டனர். பெண் தொழிலாளர்கள் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகி உயிரிழக்கும் நிகழ்வுகளும் அடிக்கடி நடைபெறத் தொடங்கின.

இந்தத் துயரங்களிலிருந்து மீள முடியாமல் தொழிலாளர்கள் அவதியுற்று வந்த சூழலில் இயற்கையின் சீற்றமும் இணைந்து கொண்டு உழைப்பாளிகளைப் பலி கொள்ளத் தொடங்கியது. வரலாறு காணாத புயலாலும் மழையாலும் மொரிசியசு தீவு நிலை குலைந்தது. தோட்டப் பயிர்கள் அனைத்தும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டன. கி.பி.1866 ஆம் ஆண்டு தீவெங்கும் மலேரியா நோய் பரவியது. இதனால் 32,000 தொழிலாளிகள் உயிரிழந்தனர்.

தொழிலாளர்கள் சிக்கல்களைத் தீர்க்க இராயல் கமிஷன் உட்பட பல்வேறு குழுக்கள் அவ்வப்போது அமைக்கப்பட்டும் அவர்களின் அவல வாழ்வுக்கு முற்றுப்புள்ளி கிடைக்கவில்லை. அவர்களுக்கு ஆதரவாக இந்தியாவில் நிகழ்ந்த தீவிரப் போராட்டங்களின் விளைவாக 1925 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் முறைக்கு நிரந்தரத் தடை விதிக்கப்பட்டது.

### வளர்நிலை மாற்றங்கள்

கி.பி,1925 இல் ஒப்பந்தத் தொழிலாளர் முறை முடிவுக்கு வந்ததால் தமிழர் குடியேற்றமும் முடிவுக்கு வந்தது. இதன் பின்னர் மொரிசியசில் வாழ்ந்த தமிழரிடையே ஒரு மறுமலர்ச்சி தோன்றத் தொடங்கியது. "கூலிகள்" என ஏளனப்படுத்தப்பட்டு வந்த தொழிலாளர்கள் ஒருங்கிணைந்து விழித்தெழத் தொடங்கினர். மொரிசியசு மண்ணின் மீது பற்றுக் கொண்டு நாட்டுப்பற்றை வளர்த்துக் கொண்டனர்.

பெரும்பாலான தமிழர்கள் தோட்டப் புறங்களிலிருந்து படிப்படியாக வெளியேறி வேறு பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

கல்வியறிவின் தேவையை உணர்ந்து தமிழோடு பிரெஞ்சு, கிரியோல் மொழிகளைக் கற்கத் தொடங்கினர். இதன் விளைவாக தமிழர்களில் சிறந்த வணிகர்களும், தோட்ட முதலாளிகளும் உருவாயினர். அரசாங்க உயர் பதவிகளை அலங்கரித்தனர்.

### விடுதலை அடைந்த மொரிசியசு

ஆங்கிலேயர்கள் ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுக் காலம் மொரிசியசில் தங்கள் ஆட்சியை நடத்தினர். இவர்கள் ஆட்சியில் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தரப்பட்டன. மண்ணின் மைந்தர்கள் என யாரும் சொந்தம் கொண்டாட முடியாத இத்தீவில் குடியேறிய இனங்களுக்கிடையே எழுந்த பூசல்களை நீக்கி அனைவரையும் ஒன்றிணைத்தனர். ஆனாலும் விடுதலை உணர்வு இந்திய விடுதலைப் போரின் தாக்கத்தாலும் காந்தியடிகளின் மொரிசியசு வருகையாலும் இவர்களிடம் பரவியது.

விடுதலையை முன்வைத்த அரசியல் இயக்கங்கள் கட்டமைக்கப்பட்டன. 1936 ஆம் ஆண்டு மொரிசியசு தொழிலாளர் கட்சி தோன்றியது. அதன் பின்னர் இசுலாமியக் கட்சி, சுதந்திர பார்வர்ட் பிளாக், மொரிசியன் சமூக ஜனநாயகக் கட்சி ஆகிய கட்சிகள் தோன்றின.[9]

உலகமெங்கும் காலனி நாடுகள் விடுதலை அடைந்ததன் தொடர்ச்சியாக மொரிசியசு நாட்டுக்கு 1968 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு விடுதலையை வழங்கியது.[10] மொரிசியசின் முதல் பிரதமராக சிவுசாகர் இராம்கூலம் என்ற மக்கள் செல்வாக்குப் பெற்ற தலைவர் பதவியேற்றார். விடுதலை அடைந்த புத்துணர்வோடு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இத்தீவு வளர்ச்சியடைந்தது.

மொரிசியசின் விடுதலைக்குப்பின் அந்நாட்டுக்கான அரச இலச்சினை (Emblem) உருவாக்கப்பட்டது.




மொரிசியசின் அழகிய அடையாளப் பறவையாகிய டோடோ பறவையுடன் கூடிய இந்த இலச்சினையில் "இந்தியப் பெருங்கடலின் நட்சத்திரமும் சாவியும்" எனும் பொருள்தரும் வாசகம் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டுள்ளது. டச்சுக்காரர்களின் ஆட்சியில் உணவுக்காக வேட்டையாடப்பட்ட டோடோ பறவைகள் கி.பி.1681இல் முற்றிலுமாக அழிந்துவிட்டன.



ஒவ்வொரு மொரிசியசு குடிமகனின் நெஞ்சிலும் இப்பறவையினம் அழிந்த சோகம் இன்னும் இருந்து வருகிறது.

1863 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்டது மொரிசியசு. மொத்தம் 1,322,238 மக்கள் (2013 கணக்கெடுப்பின்படி) வாழும் இத்தீவில் தமிழர்களின் எண்ணிக்கை 1,15,000 ஆகும். இந்தியர்கள், ஆப்பிரிக்கர்கள், ஐரோப்பியர்கள், சீனர்கள் எனப் பல இனமக்கள் ஒற்றுமையோடு பல நூற்றாண்டுகளாகப் பன்மைச் சமூகமாக இணைந்து வாழ்வது இந்நாட்டின் தனித்துவமாகும்.

ஏழுகோடி ஆண்டுகளுக்குமுன் இங்கு வெடித்த எரிமலைகளின் குழம்புகள் குளிர்ச்சியடைந்து வளமான மண்ணை இத்தீவுக்குக் கொடையாகத் தந்துள்ளன.

நாட்டின் நடுப்பகுதியில் தொடர்ச்சியாக மூன்று உயர்ந்த மலைகள் அமைந்து இத்தீவுக்குக் கூடுதல் அழகை ஏற்படுத்துகின்றன. நீலக்கடல் பின்னணியில் பனிமேகம் சூழ பசுமையான மரங்கள் அடர்ந்த இம்மலைகள் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்கின்றன.



**இயற்கை சூழ்ந்த மலைகள்**




**பனி மேகம் சூழ்ந்த நீலக்கடல்**

## மொரிசியசின் வரைபடம்




பட உதவி : மகாத்மா காந்தி நிறுவனத்தில் இளங்கலைத் தமிழ் பயிலும் மாணவன் ஸ்திவன் நாராயணப்பிள்ளை நூலாசிரியர் மொரிசியசு சென்றபோது வரைந்து தந்த படம்

1. போர்ட் லூயி (தலைநகர்)
2. பாம்பிளெமுசு
3. ரிவியர் டியு ரம்பார்ட்
4. ஃபிலாக்
5. மோக்கா
6. பிலன் விலியம்
7. கிராண்ட் போர்ட்
8. சாவான்
9. பிளாக்ரிவர்

ஒன்பது மாவட்டங்களாக இத்தீவு பிரிக்கப்பட்டு ஆட்சி நடத்தப்படுகிறது. இங்கு வாழும் பல்வேறு இனமக்களின் தொடர்பு மொழியாகக் கிரியோல் விளங்கி வருகிறது. இன்று இந்நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் பேசிவரும் பொது மொழியாக இது இருந்து வருகிறது. இந்த நாடு ஆட்சிமொழி என எந்த மொழியையும் சட்டப்பூர்வமாக அறிவிக்க வில்லையென்றாலும் பிரெஞ்சுமொழி ஊடகங்களிலும் ஆங்கிலமொழி ஆட்சித் துறையிலும் பெரிதும் பயன்கொள்ளப்பட்டு வருவதைப் பார்க்க முடிகிறது. இங்கு அனைவரும் தங்கள் மூதாதையர் மொழியோடு கிரியோல், பிரெஞ்சு, ஆங்கிலம் எனும் மும்மொழிகளிலும் வல்லவர்களாக விளங்கி வருகின்றனர்.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தங்கள் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் முறை இங்கு நிலவுகிறது. மொரிசியசிலுள்ள 20 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் மொரிசியசுக் குடியரசிலுள்ள பிற தீவுகளிலிருந்தும் மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதிபர், துணை அதிபர், பிரதமர், துணைப்பிரதமர், இணைப் பிரதமர்கள், மூத்த அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் என ஆட்சி நிர்வாகம் நடத்தப் பெறுகிறது.

கி.பி.1968 ஆம் ஆண்டு விடுதலைக்குப் பின் மொரிசியசு காமன்வெல்த் நாடுகளோடு இணைந்து ஐக்கிய நாட்டுச் சபையில் உறுப்பினர் ஆனது. இந்தியாவின் நேச நாடுகளுள் ஒன்றாக விளங்குகிறது. தென்னாப்பிரிக்க வளர்ச்சி அமைப்பு, இந்தியப் பெருங்கடல் குழு, பிரெஞ்சுமொழி பேசும் நாடுகளின் கூட்டமைப்பு போன்ற பன்னாட்டு அமைப்புகளில் மொரிசியசு இடம்பெற்று வருகிறது.

ஆப்பிரிக்க நாடுகளில் மனித உரிமைகளைப் பெரிதும் மதித்துச் செயல்படும் நாடு மொரிசியசு எனப் பாராட்டி ஆப்பிரிக்க நாடுகளுக்கான மேலாண்மை அமைப்பு 2009 ஆம் ஆண்டு சிறப்பு விருது வழங்கியுள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு உரத்த குரல் கொடுக்கும் நாடாகவும் இந்நாடு இருந்து வருகிறது.

**தமிழ்க்கல்வி**

ஒரு குடியரசு நாட்டில் ஒவ்வொரு தனி மனிதனும் தன் நாட்டுக்காவும், மொழிக்காகவும், பண்பாட்டு உயர்வுக்காகவும் சில பொறுப்புகளை மேற்கொள்கிறான். இப் பொறுப்புகள் அவன் நாட்டையும், மொழியையும், பண்பாட்டையும் வளர்க்க உதவுகின்றன. இப் பொறுப்புகளை அவன் ஏற்காவிட்டால் நாடு அவனை மறந்து விடும். மொழி செத்துவிடும். பண்பாடு உருக்குலைந்து விடும் எனப் பேராசிரியர் சு.இராசாராம் எச்சரிப்பதை இங்கு நினைவு கூர்தல் பொருத்தமாகும்.[11]

மொரிசியசு பல இனமக்கள் வாழும் நாடு. இங்குப் பல மொழிகள் பேசப்படுகின்றன. இப்பன்மைச் சமுதாயத்தில் தனிமனிதனின் பொறுப்புகள் மிகுதி. இப்பொறுப்புகளைப் பிற இனத்தவர் மனம் நோகாமல் பிறமொழிகள் பாதிக்கப்படாமல் பிற சமய நெறிகள் இழிவுபடுத்தப்படாமல் செயலுருவாக்கம் செய்வது அவசியம். இந்தோ மொரிசியர்கள் மட்டுமன்றி மொரிசியசு மக்கள் அனைவருமே இம்முயற்சியில் வெற்றி கண்டுள்ளனர். இனம், மொழி, சமயக் காழ்ப்புகளுக்கு அப்பாற்பட்ட ஒரு பன்மைச் சமுதாயம் இன்று மொரிசியசில் உருவாகியுள்ளது. தனித் தனிப் பண்பாட்டு நிலைகளிலிருந்து பொதுவான மொரிசியப் பண்பாட்டு நிலைக்கு அவர்கள் இன்று மாறியுள்ளனர். இப்பன்மைச் சமுதாயத்தில் மொழிக்கல்வி எல்லா மொழியினர்க்கும் அவரவர் விரும்புகின்ற வகையில் கிடைப்பதற்கு மொரிசியசு அரசு வழி வகுத்துள்ளது.

மொரிசியசில் 1860களிலேயே தமிழ்க்கல்வி வரலாறு தொடங்கி விடுகிறது. தொடக்கத்தில் தமிழார்வம் கொண்டோர் மாலை நேரங்களில் திண்ணைப் பள்ளிகளில் தமிழைக் கற்பித்து வந்தனர். கி.பி.1872 இல் வெளிவந்த இராயல் கமிசனின் அறிக்கையில் இத்திண்ணைப் பள்ளிகளைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

கி.பி.1954இல் மொரிசியசை ஆண்டுவந்த ஆங்கிலேய அரசு கீழைமொழிகள் அனைத்திற்கும் ஆதரவு அளிக்க திட்டமிட்டது. போர்ட்லூயியில் மூன்று பள்ளிகளில் முழுநேரத் தமிழ் வகுப்புகள் முதன் முதலாகத் தொடங்கப் பெற்றன. அடுத்த மூன்றாண்டுகளில் ஏறத்தாழ 14 பள்ளிகளில் தமிழ்க்கல்வி அளிக்கப்பட்டது. ஏறத்தாழ 1500 குழந்தைகள் **“பாலர் தமிழ் வாசகம்”** என்ற தமிழ் நூலின் வழி தமிழைக் கற்றனர்.

கி.பி.1966 ஆம் ஆண்டு முறையான ஓராண்டு முழுநேரப் பயிற்சி வகுப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தொடங்கப்பட்டது. அதற்கெனத் தமிழ்நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து பேராசிரியர் உ.பழனி அவர்கள் வரவழைக்கப்பட்டார்.

கி.பி.1968ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம்நாள் மொரிசியசு விடுதலையடைந்ததை அடுத்து தமிழ்க்கல்வி புத்துயிர் பெற்று வளரத் தொடங்கியது. திருவாளர் புட்பரதம், முனைவர் பொன்.திருமலைச்செட்டி, முனைவர் கேசவன் சொர்ணம் போன்றோரின் முயற்சியால் தமிழ்க்கல்வி வளர்ந்து வருகிறது.

அகில மொரிசியசு தமிழ்த் தேர்வுக்குழு அமைக்கப்பட்ட பிறகு தமிழ்க்கல்வி முறையாகவும் முழுமையாகவும் திட்டமிடப்பட்டு உரிய பாடநூல்கள் தயாரிக்கப்பட்டு கால மாற்றங்களை உள்வாங்கியவாறு வளர்நிலையில் இருந்து வருகிறது. இக்குழு

ஏறத்தாழ ஐம்பது தமிழ்ப் பள்ளிகளுக்கான பாடத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. குழுவின் உறுப்பினர்களும் சில பள்ளிகளில் பாடங்களை நடத்தி வருவதோடு தேர்வுப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். கி.பி.2013இல் 275 தொடக்கப் பள்ளிகளில் 275 தமிழாசிரியர்கள் தமிழைக் கற்பித்து வருகின்றனர். உயர் கல்வியில் மொரிசியசு பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் மகாத்மா காந்தி நிறுவனம் இளங்கலைத்தமிழ் வகுப்புகளை நடத்தி வருகிறது. இந்நிறுவனத்தில் தமிழ்த்துறையில் பணிபுரியும் விரிவுரையாளர் கிருட்டிணம்மாள் முனிகாடு தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டு வருகிறார்.

**வேளாண்மை**

இந்த வளமான மண்ணில் நான்கில் மூன்று பகுதியில் கரும்பு பயிரிடப்படுகிறது. 12 மாதங்களில் கரும்பு அறுவடை செய்யப்படுகிறது. ஒருமுறை பயிரிடப்பட்ட கரும்பு நடவுகள் 10 முறை அதாவது பத்தாண்டுகள் பலன் தருகின்றன. அதன்பின் நிலம் உழுது செப்பனிடப்பட்டு மீண்டும் புதிய கரும்புப் பயிர்கள் நடப்படுகின்றன. கரும்பு உற்பத்தியின் பெருக்கத்தினால் இங்கு சர்க்கரை உற்பத்தியும் கொடிகட்டிப் பறக்கிறது. ஏறத்தாழ நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சர்க்கரை ஆலைகளைக் காண முடிகிறது. எனவேதான் **'சர்க்கரைத் தீவு'** என்ற பெயரையும் மொரிசியசு பெற்றுள்ளது.

பெரும் நீர்த் தேக்கங்கள் இந்நாட்டில் இல்லையென்றாலும் போதுமான மழைப்பொழிவு ஆண்டுதோறும் இருந்து வருவதால் இத்தீவுக்குத் தேவையான காய், கனி, பயறு, கீரை, கிழங்கு வகைகளும் பயிரிடப்படுகின்றன. அதிகமான மலையடிவாரங்கள் இருப்பதால் மக்கள் அதைப் பயன்படுத்தி தேயிலை, சோளம் போன்றவற்றையும் பயிர் செய்து வருகின்றனர்.[12]

**தொழில் வளம்**

விடுதலைக்குப் பின் வேளாண்மையை மட்டும் நம்பியிராமல் பல்வேறு தொழில்களுக்கும் அரசாங்கம் முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியது. நீண்ட கடற்கரைகளைப் கொண்டிருப்பதால் மீன்பிடித் தொழிலுக்கு முதன்மை தரப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கடல் உணவுப் பதனிடும் தொழிலிலும் மொரிசியசு ஆர்வங்காட்டி வளரத் தொடங்கியது. இதன் மூலம் வெளிநாடுகளுக்கு மீன் ஏற்றுமதி செய்தல், உணவு பதனிடுதல் போன்றவற்றில் வேகமாக வளர்ந்து நாட்டின் வருமானத்தைப் பெருக்கியது. துணி நெசவாலைகளும் இப்போது மிகுதியான வண்ணம் உள்ளன.

இன்று மொரிசியசு நாட்டின் சிறப்புத் தொழிலாகச் சுற்றுலா மாறியுள்ளது. கூடுதலான நீலநிறத்துடன் காணப்படும் மொரிசியசைச் சூழ்ந்த கடல் கூடுதலான அழகை அள்ளித் தருகிறது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் அணிகலன்களும் வண்ண விளக்குகளும் இங்கு தயாரித்து விற்கப்படுகின்றன. இத்தகைய பொருட்களுக்கு அந்நாட்டு அரசாங்கம் சுங்க வரிவிலக்கு அளித்திருப்பதால் சுற்றுலாத்தொழில் மிகப் பெரிய வருமானத்தை வழங்கும் தொழிலாக இன்று மாறி மொரிசியசை வளர்ச்சியடையும் நாடுகளின் பட்டியலில் இடம் பெற வைத்துள்ளது.

சான்றெண் விளக்கம்

1. மயிலை சீனி வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம், ப.28.
2. பத்துப்பாட்டு, 5 : 18-22
3. உலகநாதன் சொர்ணம், மொரிசியசில் தமிழும் தமிழரும், ப.15
4. பரமசிவம் முத்துசாமி, மொரிசியஸ் தமிழர் : மொழி - பண்பாடு - சமூகம், ப.18
5. மேலது, ப.34
6. மேலது, ப.36
7. The Manual of the Administration of the Madras Presidency, Vol-I, P.507
8. சு. இராசாராம், மொரீசியஸ் தமிழரும் தமிழும், ப.166
9. S. Bissoondoyal, A Concise History of Mauritius, P.134
10. Monique Dinan, The Mauritioan Kaleidoscope, P.67
11. சு. இராசாராம், மொரீசியஸ் தமிழுரும் தமிழும், ப.736.
12. வி.சுதர்மன், நினைவலைகள் (மொரிசியசு ஏழாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு), ப.40.

# இயல் இரண்டு

# வாழ்க்கை முறையில் பண்பாடு



# இயல் 2

# வாழ்க்கை முறையில் பண்பாடு

## முன்னுரை

மொரிசியசில் வாழும் தமிழ் மக்கள் மொழியைக் காட்டிலும் பண்பாட்டுக்கே சிறப்பிடம் தந்து வருகின்றனர். தங்கள் வாழ்க்கை முறையின் விதிகளாகவே இவர்கள் பண்பாட்டைக் கொள்கின்றனர். குடும்பத்தின் அன்றாட நிகழ்வுகள் அனைத்திலும் பண்பாட்டின் நிழலைக் காண முடிகிறது.

## வாழ்க்கையும் பண்பாடும்

குடும்பம் எனும் அமைப்பின் கீழ்தான் பெரும்பாலானவர்களின் வாழ்க்கை கட்டமைக்கப்படுகிறது. பிறந்தநாள் தொடங்கி மறையும் நாள் வரை இந்த அமைப்பினூடாகத்தான் மனிதன் நகர நேர்கிறது. எனவே குடும்பம் என்பது இடம், காலம் அனைத்தையும் கடந்து எல்லாப் பண்பாடுகளுக்கும் பொதுவான ஓர் உலகளாவியப் பண்பாகத் திகழ்கிறது.

குடும்பம் என்பது ஒரு சிறு குழுவாக அல்லது பெருங்குழுவாக இருக்கலாம். இதில் குறைந்த அளவு ஓர் ஆணும் பெண்ணும் இடம்பெறவேண்டும். இவ்விருவரும் அவர்களுடைய சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள திருமண முறைப்படி மணம் செய்து கொண்டவர்களாக இருக்கவேண்டும். அவ்வாறு ஓர் ஆணும் பெண்ணும் கணவன்-மனைவி என்ற உறவை ஏற்படுத்திக் கொள்வதிலிருந்துதான் வாழ்வியல் தொடங்குகிறது. எனவே வாழ்க்கையில் திருமணம் என்பதே அனைத்துச் சமுதாயத்திலும் முதன்மையான பண்பாட்டு நடவடிக்கையாக அமைகிறது எனலாம்.

## மொரிசியசில் தமிழர் திருமணம்

மனித இனம் தன் பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும். திருமண நிகழ்வு உலகம் தழுவிய நிலையில் ஒரே வகையாக நடைபெறவில்லை. ஒருவன் எவரை மணந்து கொள்கிறான் என்பதைப் பொறுத்தும் எத்தனைப் பேரை மணந்து கொள்கிறான் என்பதைப் பொறுத்தும் திருமண வகைகள் மாறுபடுகின்றன. இவற்றுள் ஒரு துணை மணம், பல துணை மணம், குழு மணம் எனப் பலவகைப்பாடுகளை மானிடவியலார் பேசுகின்றனர்.[1] தமிழர் திருமணமுறை **'ஒருவனுக்கு ஒருத்தி'** எனும் அடிப்படையில் நிகழ்வதால் இதனை **'ஒரு துணை மணம்'** எனும் வகைப்பாட்டுக்குள் அடக்குவர்.

மொரிசியசு மண்ணில் தலைமுறைத் தலைமுறையாக வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் தம் முன்னோர்கள் வழியில் நின்று தமிழ்ப்பண்பாட்டைக் கண்ணுங் கருத்துமாய்ப் பேணி வளர்த்து வருகின்றனர். தமிழ்ப் பண்பாட்டில் திருமணம் முக்கியமான இடம் கொண்டுள்ளது.

**மொரிசியசு திருமண முறைகள்**

- ❋ பெண் பார்த்தல்
- ❋ பெண் பிடித்திருந்தால் பெண் வீடு பார்க்கும் நிகழ்வு
- ❋ மாப்பிள்ளை வீடு பார்க்கும் நிகழ்வு
- ❋ பரிசம் போடுதல்
- ❋ திருமணநாள், இடம், நேரம் முடிவு செய்தல்
- ❋ கஞ்சி வழிபாடு
- ❋ அழைப்பிதழ் ஏற்பாடு
- ❋ பந்தக்கால் நடுதல்
- ❋ மணநாளுக்கு முந்தைய நாள் இரவு விருந்து
- ❋ மணநாள் காலையில் நலுங்கு
- ❋ மணமகளை மேடைக்கு அழைத்துவரல்
- ❋ திருமணச் சடங்குகள்
- ❋ மாமன் பரிசம்
- ❋ மணமகன் மேடைக்கு வருதல்
- ❋ அரசாணிக்கால் நடுதல்
- ❋ கங்கணம் கட்டுதல்
- ❋ மணமகளுக்குச் செய்யும் சடங்குகள்

* மணமகனுக்கு மிஞ்சி அணிவித்தல்
* பாதபூசை
* கன்னிகாதானம்
* தாலிப்பூசை
* தாலிகட்டுதல்
* மாலை மாற்றுதல்
* தீவலம் வருதல்
* கங்கணம் கட்டுதல்
* பட்டம் கட்டுதல்
* பால்பழம் கொடுத்தல்
* மணமகள் மணமகன் வீட்டுக்குச் செல்லல்
* மஞ்சள்நீர் ஆட்டம்
* விருந்து
* முதலிரவு

தமிழ்நாட்டு மரபைச் சிறிதும் சிதைக்காமல் மொரிசியசு திருமணவிழாக்கள் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

காதல் மணம்

மொரிசியசு நாட்டில் தொடக்கக் காலத்தில் வயது வந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் வாழ்க்கைத் துணையைத் தேடுவது பெற்றோரின் கடமையாக இருந்தது. பருவம் அடைந்த பெண்ணை வீட்டில் வைத்திருக்கும் பெற்றோர்கள் மணமகனைத் தேடும்போது குடும்பநிலை, குணம், ஒழுக்கம், தொழிற் பொருத்தம், பழக்க வழக்கங்கள் போன்றவற்றைப் பார்ப்பர். அதே போல பெண்ணைப் பற்றி விசாரித்த பிறகு மணமகன் பெற்றோர் முடிவு எடுப்பர். ஆனால் இன்று ஆண்களும் பெண்களும் தம் துணைகளைத் தாமே தேடிக்கொள்கின்றனர். படிக்கும் இடங்களில் அல்லது பணிபுரியும் இடங்களில் ஒருவரையொருவர் சந்தித்த பிறகு காதல் திருமணம் செய்து கொள்கிறார்கள். இக்காலத்தில் 95 விழுக்காடு மணமக்கள் தம் வாழ்க்கைத் துணையைத் தாமே தேடிக் கொள்கின்றனர்.

### கலப்பு மணம்

இன்றைய தலைமுறையினர் சுதந்திரமாகச் சிந்தித்துச் சுயமாக எதையும் முடிவு செய்வதில் ஆர்வங்கொண்டவர்கள். முன்பு கலப்புத் திருமணம் தமிழ்ச் சமுதாயத்தில் அரிதாக இருந்தது. பெரும்பாலான குடும்பங்களில் சாதி பார்ப்பது ஒரு வழக்கமாக இருந்தது. ஆனால் இன்றைய நவீன உலகத்தில் இதற்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை. இக்காலத்தில் தமிழர்கள் பலர் கலப்பு மணம் செய்கிறார்கள். தொடக்கக் காலத்தில் பெண்கள் கல்விக் கற்பதற்குத் தடையிருந்தது. பெரும்பாலான பெண்கள் வீட்டில் மனித இயந்திரங்களாய் வேலைகளைச் செய்து வந்தனர். காலஞ் செல்லச் செல்ல பெண்களுக்குக் கல்வி அளிக்கப்பட்டது. இன்று பெண்கள் பிற இனமக்களோடு ஒற்றுமையாக இருந்து வேலை செய்கிறார்கள். இந்தச் சூழலில் வேற்று இனத்தார்களைச் சந்தித்து, காதலித்து, கலப்பு மணம் செய்வதற்கு வாய்ப்பு அதிகம். சில இளைஞர்கள் பெற்றோர் இசைவின்றி அவசர கதியில் திருமணத்தை முடிவு செய்து விடுகிறார்கள். இதனால் நாளுக்கு நாள் மணவிலக்குத் தொகை அதிகரித்து வருகிறது; குடும்ப வாழ்வும் சீர்குலைகிறது.

### நிச்சயத்தாம்பூலம்

நிச்சயத்தாம்பூலம் என்ற நிகழ்ச்சி தொடக்கத்தில் பெண் வீட்டில் நடந்தது. அந்நாளில் இரு வீட்டாருடன் உறவினர்களும் சுற்றத்தார் சிலரும் கூடுவர். முன்னோர்கள் நிச்சயத்தாம்பூல நாளில் அர்ச்சகர் ஒருவரை வரவழைப்பர். சில சமயங்களில் அர்ச்சகர் இல்லாத இடங்களில் பெரியோர் ஒருவர் இறை வணக்கம் செய்து, சில மங்கலச் சொற்களையும் கூறுவார். அந் நிகழ்ச்சி மூலம் மாப்பிள்ளையையும் பெண்ணையும் அனைவரும் அறிந்து கொள்வர். மாப்பிள்ளை கொண்டு வந்த பரிசப் புடவையைப் பெண் உடுத்தி வந்து எல்லாருக்கும் வணக்கம் செலுத்தி நிற்பாள். அந் நிகழ்ச்சிக்குப் பிறகு நாள்குறிக்கப்பட்டுத் திருமணம் நடைபெறும். இப்போது நிச்சயத்தாம்பூல நிகழ்ச்சியை பெரும்பாலான தமிழர்கள் தனி மண்டபத்தில் நடத்துகின்றனர். மேலும் மேல் நாட்டுப் பண்பாட்டின் தாக்கத்தினால் பரிசப் புடவையுடன் ஒரு தங்க மோதிரமும் பரிசாக அளிக்கின்றனர். பெரிய பலகாரம் ஒன்றை அறுத்துப் பரிமாறும் தமிழ் மரபில் இல்லாத பழக்கத்தைத் தமிழர்கள் பரவலாக ஏற்றுப் பின்பற்றி வருகின்றனர். மேலும் வசதி படைத்தவர்கள் சிலர் அறுசுவை விருந்தோடு மதுவகைகளையும் பரிமாறி இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர்.

மொரிசியசில் நிச்சயத்தாம்பூலச் சடங்கு மிகவும் முக்கியமானது. இச்சடங்குக்குப்பின் மாப்பிள்ளை பெண்ணை அடிக்கடி வந்து சந்திக்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது. நிச்சயத்தாம்பூலத்துக்குப் பிறகு பெண் மாப்பிள்ளை வீட்டுக்குப் போய்ச் சில சமயத்தில் தங்குவதும் உண்டு. முன்பு இச்சடங்கு முடிந்ததும் விரைவில் திருமணம் நடந்தது. ஆனால் இன்று இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கூட திருமணம் நிகழ்கிறது. தனி வீடு கட்டுதல், வெளிநாட்டிற்குப் படிப்புக்காகச் செல்லுதல், திருமண செலவுக்கான ஏற்பாடுகள் செய்தல் போன்ற காரணங்களால் இந்த நீண்ட இடைவெளி தரப்படுகிறது.

### திருமண அழைப்பிதழ்

பழங்காலத்தில் திருமண அழைப்பிதழ் தமிழில் அச்சடிக்கப்பட்டது. ஆனால் இக்காலத்தில் தமிழர்கள் பெரும்பாலோர் ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சு மொழியில் திருமண அழைப்பிதழை அச்சடித்து வருகின்றனர். தமிழ்ப் பற்று மிகுந்தோர் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சடிப்பர். தொடக்கக் காலத்தில் திருமணத்திற்கு உறவினர்களையும் ஊரார்களையும் அழைக்க தமிழ் மொழிப் பற்று உடைய பெரியோர் ஒருவரைக் கூப்பிட்டுக் கொண்டு வீடு வீடாகச் சென்று திருமணம் நடைபெறும் இடம், நேரம், தேதி ஆகியவற்றை அறிவித்தனர். அது மட்டுமல்லாமல் நெருங்கிய உறவினரான மாமன், மைத்துனன், சம்பந்தி போன்றோரைப் பாக்கோடு பணமும் சேர்த்து வைத்து வெற்றிலையில் இட்டு அழைப்பது வழக்கம். இக்காலத்தில் இவ் வழக்கம் மறைந்து வருகிறது. அஞ்சல் மூலமாக திருமண அழைப்பை அனுப்புவது பெருகி வருகிறது. அழைப்பிதழில் சிலர் பெட்டிப் பரிசு வேண்டாம் (No Gift BoX) என்று அழைப்பிதழில் குறிப்பிடுவர். பரிசைப் பொருளாகத் தராமல் பணமாகத் தரவேண்டும் என்பதே இதன் நோக்கம். பணம் பரிசாகக் கிடைத்தால் மணமக்கள் தம் விருப்பப்படி வேண்டிய பொருள்களை வாங்கிக்கொள்ளும் வசதி ஏற்படுகிறது.

### பாத பூசை

மணமேடையில் நடைபெறும் முக்கிய சடங்குகளுள் பாத பூசை ஒன்றாகும். இது பெற்றோர்க்கு நன்றி செலுத்தும் சடங்கு ஆகும். தந்தை இல்லாதவருக்கு மூத்த அண்ணனோ தந்தை முறையில் உள்ள உறவினரோ தந்தையாக நிற்பார். விதவையாக இருக்கும் தாயாருக்கும் பாத பூசை செய்யும் வழக்கம் சிலரிடம் உள்ளது.

### திருமண இடம், நேரம், நாள்

தொடக்கக் காலத்தில் திருமணம் மாப்பிள்ளை வீட்டில் நடைபெற்றது; வேறு சிலர் கோயிலின் மண்டபத்தில் அதிகாலையில் திருமணம் செய்தனர். திருமணத்தைக் காலை நேரத்தில் நடத்துவது நல்லது என்பது தமிழர் நம்பிக்கையாகும். அது மட்டுமல்லாமல் நல்ல நாளைப் பார்ப்பது தமிழர் மரபு. ஆனால் இன்று பெரும்பாலான திருமணங்கள் தனி மண்டபத்தில் காலை, எட்டு மணிக்கு அல்லது பத்து மணிக்கு நடைபெறுகின்றன. வேறு சிலர் பிற்பகலில் ஒரு மணிக்குத் திருமணம் செய்கின்றனர். மொரிசியசு நாட்டில் தமிழர்கள் பெரும்பாலும் ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடத்த விரும்புவர். காரணம், அது எல்லா உறவினர்க்கும் நண்பர்க்கும் கலந்து கொள்ள வசதியான விடுமுறை நாளாகும்.

மொரிசியசு நாட்டில் பொதுவாக தமிழர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் திருமணம் செய்வார்கள்; சிலர் புதன்கிழமையில் அல்லது வேறு நாட்களில் திருமணம் செய்வர். விரும்பிய மண்டபம் கிடைக்காதபோது இப்படி வேறுகிழமைகளில் மணநாளைக் குறித்து நடத்துவர்.

### திருமணத்திற்கு முந்தைய நாள்

திருமண முந்தைய நாள் நிகழ்ச்சி பெண்ணின் வீட்டிலோ மாப்பிள்ளை வீட்டிலோ நடைபெறுவது வழக்கம். ஆனால் இக்காலத்தில் பெரும்பாலான குடும்பங்களில் இந்நிகழ்ச்சி மண்டபத்தில் நடைபெறுகிறது. மணவிழா நாளில் வாழைமரங்கள் கட்டும் வழக்கம் அங்கும் உள்ளது.

உணவு மூலமாகவும் ஒருவனின் பண்பாட்டினை அறிந்து கொள்ளலாம். மொரிசியசு நாட்டில் வாழ்கின்ற தமிழர்கள் வாழையடி வாழையெனப் போற்றி வரும் அறுசுவை உணவு விருந்து திருமணத்துக்கு முதல் நாளில் பரிமாறப்படும். சைவ உணவே பரிமாறுவது வழக்கம். ஏனென்றால் இந்நன்னாளில் விரதம் இருக்க வேண்டும். ஆனால் காலப் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சிலர் அசைவ உணவு வகையையும் அளிக்கின்றனர். வேறு சிலர் அந்நிய உணவு வகைகளையும் கொடுப்பதுண்டு. அதுமட்டுமல்லாமல் வாழை இலையில் சாப்பிடுவது தமிழர்ப் பண்பாடு. ஆனால் இன்று காகித வாழை இலையில் அல்லது தட்டுகளில் உணவு அளிக்கும் வழக்கம் பெருகி வருகிறது. இரவு நேரத்தில் மெல்லிசைக் கச்சேரி வைக்கும் வழக்கம் நீண்ட காலமாக இருந்து வந்தது. ஆனால் இப்போது பெரும்பாலான தமிழர் வீடுகளில் மேல் நாட்டு இசைப் பாடல்களும் நடனமும் இடம்பெறுகின்றன.

## திருமண முந்தைய நாளில் உணவு வகைகள்




மொரிசியசு நாட்டில் 60 விழுக்காடு தமிழர்கள் அறுசுவை உணவைத் திருமணத்திற்கு முந்தைய நாளில் அளிப்பார்கள். ஆனால் 20 விழுக்காடு தமிழர்கள் அசைவ உணவை அளிக்கிறார்கள். மீதமுள்ள 20 விழுக்காடு தமிழர்கள் பிற உணவு வகைகளை விருந்துணவாக வழங்குகின்றனர்.

### தாலி கட்டுதல்

தாலி பெண்ணுக்கு வேலி என்ற நம்பிக்கையில், கழுத்தில் தாலிக் கயிறு கட்டும் வழக்கம் தோன்றியது. நிமிர்ந்து நடந்து வரும் ஆடவனுக்கு எதிரே நடந்துவரும் பெண் கழுத்தில் மாங்கல்யம் இருப்பது தெரிய வேண்டும். அவள் திருமணமானவள் என்று தெரிந்து அவன் விலகிச் செல்ல வேண்டும் என்றெல்லாம் விளக்கம் தருவர். பெரியார் மட்டுமே தாலி பெண் அடிமையின் சின்னம் என வலியுறுத்தி வந்தார். இக்காலத்தில் தங்கச் சங்கிலியில் தாலி போடும் வழக்கம் பெருகி வருகிறது.

## தாலி அணிவிக்கும் முறை




மொரிசியசு நாட்டில் 60 விழுக்காடு தமிழர்கள் தாலியை மஞ்சள் கயிற்றிலிட்டு அணிகிறார்கள். அங்கு 2 வகையான தாலிகள் வழக்கத்தில் உள்ளன. 1. பிள்ளையார் தாலி 2. பொட்டுத்தாலி. 40 விழுக்காட்டினர் இம் மங்கல அணியைச் சங்கிலியில் இணைத்து அணிகின்றனர்.

சில குடும்பத்தார் சாதி அடிப்படையில் சில சடங்குகளைச் செய்வதும் உண்டு. திருமண நாளில் தாலி கட்டும் சடங்கு நிகழும்போது ஒரு திரை மணமக்களுக்கு முன்பு வைக்கப்படும். இது ஒரு குறிப்பிட்ட சாதிக்கு உரியதாகக் கருதப்படுகிறது.

ஆனால் இன்று **'சாதி'** எனும் பிரிவு பெரும்பாலும் மறைந்துவிட்டது. தரையில் அமர்ந்து மணமகன் மணமகளுக்குத் தாலியைக் கட்டும் மரபு மாறி நாற்காலியில் தாலியைக் கட்டும் வழக்கம் மிகுதியாகியுள்ளது.

### மணவிழாவும் மகளிரும்

தமிழர்ப் பண்பாட்டில் திருமணத்திற்குத் தனிப்பட்ட ஓர் இடம் உண்டு. தமிழ்த் திருமணச் சடங்குளில் மாதர்களுடைய பங்குதான் மிகுதி. மணமக்களுடைய அத்தை, அண்ணி, தாயார், சகோதரி என மகளிர் எல்லாரும் அச்சடங்குகளில் ஈடுபடுவர்.

தமிழ்த் திருமணத்திற்கு மூன்று அல்லது ஐந்து நாட்களுக்கு முன் இடம் பெறும் பந்தக்கால் நாட்டும் சடங்கில் திருமணமான பெண்டிர் மூவர் புடவை உடுத்தி சடங்குகளை மேற்கொள்வர். தேவையான ஆழத்துக்குக் குழியைத் தோண்டிக் கொள்வர். பின்பு, மரத்தூண் ஒன்றைச் சுத்தம் செய்து அத்தூணின் மேல் மஞ்சள், சந்தனம், குங்குமம் முதலியவற்றைப் பூசி, மலர்களும் மாவிலைகளும் கட்டுவர். அதே நேரத்தில் தோண்டிய குழிக்குள் குங்குமம், மஞ்சள், பணம் முதலியவற்றையும்

இடுவதுண்டு. அடுத்துக் குழியின் வாயருகில் மண் விளக்கு ஒன்றை ஏற்றி மஞ்சள் பிடித்து அருகம்புல் சொருகி, வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் ஆகியவற்றைப் படைத்து, தூப தீபங்காட்டி, திருமணம் நல்லதொரு முறையில் நடைபெறுமாறு பிள்ளையாரைத் துதித்து வணங்குவர்.

மாப்பிள்ளை, பெண் ஆகிய இருவருக்கும் மங்கலப் பெண்டிர் மட்டும் நலுங்கு மஞ்சள் பூசும் வழக்கமுண்டு. நலங்குச் சடங்கு நாளன்று ஐந்து அல்லது ஏழு மங்கலப் பெண்மணிகள் பங்கு கொள்வர். அவர்கள் பட்டுப்புடவை அணிந்து மஞ்சள், குங்குமம், சந்தனம், வெள்ளைத் துணியால் சுற்றப்பட்ட குழவிக்கல், மலர்கள், வேப்பிலை, மஞ்சள் அரிசி முதலியவற்றைத் தட்டுகளில் ஏந்தி வருவர். மூன்று நாட்கள் மணமகளுக்கு நடத்தும் இந்த நலுங்குச் சடங்குகளைப் பொதுவாக அத்தைமார்கள் தொடங்குவார்கள்.

திருமண நாளில் தாம்பாளத் தட்டுகளை ஏந்தியவாறு பெண்கள் திருமண மண்டபத்தின் வாசலின் இரு பக்கங்களிலும் நின்று வருகை தருபவர்களை வரவேற்பது வழக்கம். தட்டுகளில் வெற்றிலை, பாக்கு, சந்தனம், திருநீறு, குங்குமம், பன்னீர் செம்பு ஆகியவை வைக்கப்படும். திருமணத்திற்கு வருவோருக்குத் திருநீறு பூசி, குங்குமப் பொட்டு இட்டு, பெண்டிர் பன்னீர் தெளிப்பர். திருமண நாளில் இடம்பெறும் அரசாணிக்கால் என்ற சடங்கு மாங்கல்யப் பெண்மணிகளால் நடத்தப்படுகின்றது. இந்தச் சடங்கில் பெண்டிர் மூவர் கலந்து கொள்வர். அரசாணிக்கால் நடுவதற்கு முன்னரே தயார் செய்து வைத்துள்ள மாவிலைக் கொம்பு அல்லது மூங்கில் கொம்பைப் பிடித்து அரசாணிக்கால் ஊன்றிக்கொள்வர். அதற்குத் தீபதூபம் காட்டி தண்ணீர் ஊற்றுவர். பின்பு அம் மங்கலப் பெண்டிர் மஞ்சள் கட்டிய நூலை மங்கல ஒலியான கெட்டி மேளம் முழங்க அரசாணிக்காலைச் சுற்றிக் கட்டுவர். மேலும், மண்டபத்தில் மணமகனின் சகோதரி முறையிலுள்ள பெண்மணியே மணப்பெண்ணுக்குத் தோழியாக இருப்பது வழக்கம். தோழி மணமகளை அலங்காரம் செய்து நன்றாகக் கவனித்துக் கொள்வார். பின்னர் பெண்டிர் சிலர் வரிசைப் பொருள்களைச் சுமந்து கொண்டு வருவர். தமிழர் திருமணத்தில் இடம் பெறும் தாலி கட்டும் சடங்கிலும் பெண்டிருக்குப் பங்கு உண்டு. தாலி கட்டும் நேரத்தில் மணப்பெண்ணின் தோழி விளக்கு ஏந்தி, மணமகளின் பின்புறத்தில் சாட்சியாக நிற்பார். இவ்வாறாக, முன்னோர்கள் பின்பற்றிய திருமணச் சடங்குகளை இன்று வரை பின்பற்றி மகளிர் தமிழ்ப் பண்பாட்டை நிலைக்கச் செய்து வருகின்றனர்.

## திருமணப் படம்



தமிழர்ப்பண்பாட்டில் திருமணச் சடங்குகளுள் நலுங்கு இன்றியமையாதது. மொரிசியசு நாட்டில் பெரும்பாலான தமிழர்கள் திருமண நாள் காலையில் மணமக்களுக்கு நலுங்கு வைப்பர். சிலர் மூன்று நாட்கள் நலுங்கு வைப்பதுண்டு.

முன்பெல்லாம் திருமண நாளன்று மணமக்களை வாழ்த்திட அவையோருக்குப் பூக்களைக் கொடுத்தனர். காலப் போக்கில் அந்தப் பழக்கம் மறைந்து விட்டது. இன்று மேடையில் உள்ள மணமக்களின் பெற்றோர்கள், மாமன்மார்கள் பூவைத் தூவி மணமக்களை வாழ்த்துகின்றனர். மணவிழாவை நடத்துபவர் மலரால் சூரியனைப் பின்வரும் பாடல்பாடி வழிபடுகிறார்.

**ஓங்கார வடிவுள்ள ஒளியும் நீ**
**ஓமென்றெழுத்தின் பெருமையும் நீ**
**உயிர்க்குயிராய் நிற்பவனும் நீ**
**ஒளிக்கொளியாய் ஆள்பவனும் நீ**

**ஒப்புவமை இல்லாத உருள்பொருளும் நீ**
**உலகுய்ய ஒளிதந்து ஆள்பவனும் நீ**
**ஐந்தெழுத்தாய் ஓதப்படும் மந்திரமும் நீ**
**ஆதிபொருளான பேரொளியும் நீ**

ஆற்றலதில் மிஞ்சியுளப் பகலவனும் நீ
அயராது உருள்கின்ற நிலவும் நீ
விண்ணிலே மின்னிவரும் மீன்களும் நீ
வீசுகின்ற பல்வகை வாடையும் நீ

தவழ்ந்து வரும் பரந்த முகிலும் நீ
சலியாது வருகின்ற பகலிரவும் நீ
வழிகாட்ட எழுகின்ற பல்லொளியும் நீ
வல்லிடியும் மின்னலும் மழையும் நீ

சுற்றிவரும் உயிர்தாங்கும் மண்ணுலகும் நீ
சுற்றிலும் அடிக்கின்ற பெருங்கடலும் நீ
எழிலியற்கை வளங்களொடு தந்தவனும் நீ
ஏனைய சிற்றுயிரும் பேருயிரும் நீ

பழந்தமிழ் யாழ்க்கின்னிசை பயப்பவனும் நீ
பல்கருவிக் கோசைதரும் பண்ணரசே நீ
குழலுக்கு மெல்லிசையைக் கொடுத்தவனும் நீ
கூவியழை மணியொளிக்குக் கோனவனும் நீ

எரிமலையும் நீ
இடிமழையும் நீ

நில அதிர்ச்சியும் நீ
நிசி விலக்குவதும் நீ

விண்லெர்த்தவும் நீ
வெடியாகவும் நீ

வற்றச்செயலும் நீ
வளத்துக் கூறாகவும் நீ

எழிலையழிப்பதும் நீ
இளமையைக் கெடுப்பதும் நீ

வலிமையை முறிப்பதும் நீ
வாடச்செய்யவும் நீ

படச் செய்வதும் நீ

பாலை யாக்கவும் நீ

இயலை மாற்றவும் நீ

செயலைத் தாக்கவும் நீ

உடல் அழிப்பதும் நீ

சாம்பல் ஆக்கவும் நீ

அண்ணலே வணக்கம்

அப்பனே வணக்கம்

அருமணியே வணக்கம்

அருளொளியே வணக்கம்

ஆதவனே வணக்கம்

ஆதிமுதலே வணக்கம்

ஆதியுருவே வணக்கம்

ஆண்டவனே வணக்கம்

ஆதிபொருளே வணக்கம்

ஆதி ஆளனே வணக்கம்

ஈறிலனே வணக்கம்

எல்லரசே வணக்கம்

எழிலொளியே வணக்கம்

எழிலுருவே வணக்கம்

ஏந்தலே வணக்கம்

எண்குணமே வணக்கம்

ஒளியே வணக்கம்

ஓங்காரமே வணக்கம்

ஒளிமணியே வணக்கம்

ஒப்பிலியே வணக்கம் [2]

இவ்வாறு தமிழ்ப் பாடல்வழி மணவிழா நடத்தும் மரபோடு தமிழகத்திலிருந்து கோயில்களுக்குப் பூசை செய்ய குடிபெயர்ந்த அர்ச்சகர்களைக் கொண்டு வடமொழி வழி மணவிழா நடத்தும் வழக்கமும் நிலவி வருகிறது.

### மங்கள இசை

திருமணம் என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் ஒரு முறை மட்டுமே இடம் பெறும் அரும்பெரும் மங்கல நிகழ்ச்சி ஆகும். எனவே, திருமணத்தின் போது மங்கள இசை வழங்குவது என்பது முன்னோர்கள் போற்றிக் கையாண்ட முறைகளில் ஒன்றாகும். திருமணம் நடைபெறுவதற்கு முன்னும், நடந்த பின்னும் வருகை தரும் உற்றார் உறவினரை வரவேற்கும் முறையிலும் அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் வகையிலும் மேள வாத்தியம் இசைப்பது தமிழர்களின் பண்பாடாக இருந்து வருகிறது. இக்காலத்தில் திருமண நாளில் மெல்லிசை நிகழ்ச்சியை நடத்தும் வழக்கமும் பெருகி வருகிறது.

### விருந்து

தமிழர்கள் திருமணத்தை நடத்தும்போது விருந்து அளிப்பது மரபாகும். மொரிசியசு நாட்டில் முன்காலத்தில், விருந்து என்று சொன்னால் ஒரு கட்டுப்பாடு இருந்தது. மணமக்களின் வீட்டிலேயே விருந்து நிகழ்ந்தது. சிலர் திருமண நாளில் மாப்பிள்ளை வீட்டிலும் மறுநாள் பெண்ணின் வீட்டிலும் விருந்து வைத்தனர். வேறு சிலர் திங்கட்கிழமை மணமகனின் வீட்டிலும் புதன்கிழமை மணமகள் வீட்டிலும் சிறந்த விருந்துகள் நடத்தினர். இப்போது பெரும்பாலான குடும்பங்களில் திருமண விருந்தை மண்டபங்களில் செய்கின்றனர். மணமகன் வீட்டாரும் மணமகள் வீட்டாரும் சேர்ந்து பணம் கொடுத்து ஒரே நாளில் திருமண விருந்தை நடத்தி விடுகின்றனர். திருமணத்திற்குப் பிறகு மணமக்கள் தேனிலவுக்குப் பயணித்து வெளிநாடு போகும் வழக்கம் அதிகரித்து விட்டது. தொடக்கக்காலத்தில் விருந்து குடும்ப நிலையில்தான் நடைபெற்றது ஆனால் இன்று உறவினர்கள், நண்பர்கள், ஊரார்கள் எனக் கூட்டமாக வந்து விருந்தில் பங்கேற்கின்றனர்.

பொதுவாக கிராமங்களில் இரண்டு நாட்கள் விருந்து செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. விருந்து நாளில் மணமக்கள் சாப்பிடுவதற்கு முன்பாக தத்தம் இலையின் கீழ் காசு போட வேண்டும் என்னும் பழக்கம் இருந்தது. இக்காலத்தில் இச் சடங்கு மறைந்து போனது. மணமக்கள் வீட்டினுள்ளே நுழைவதற்கு முன் தோழிக்குப் பணம் கொடுக்கும் வழக்கம் இன்றும் நீடிக்கிறது. [3]

### முதலிரவு மரபு

உற்றார் உறவினர் முன்னிலையில் திருமணம் முடித்துக் கொண்ட மணமக்கள் முதன்முதலாக கூடிப் பெறும் உடலின்ப வாய்ப்பையே முதலிரவு என்று கூறுவர். இதனை

சாந்தி முகூர்த்தம் என்றும் கூறுவார்கள். இளமை உணர்ச்சிகள், திருமணத்திற்கு முன் சமூகக் கட்டுப்பாடுகள் காரணமாக அடங்கி இருக்கின்றன. அவற்றிற்கு விடுதலை அளித்து, முறையான இல்லற வாழ்வில் அவற்றிற்கு சாந்தி அளித்தல், சாந்தி முகூர்த்தம் எனப்படும். பழங்காலத்தில் மணமக்கள் ஒருவரையொருவர் முன்னரே பார்க்கும் வாய்ப்பு இல்லை. அதனால் அவர்களுக்கிடையே அமைதி தருகிற மண நிகழ்ச்சியாக முதலிரவு அமையும். இன்று மொரிசியசு சமுதாயத்தில் பெரும்பாலோர் காதல் திருமணம் செய்கிறார்கள். ஆகவே, திருமணத்திற்கு முன்பாக ஆணும் பெண்ணும் சந்தித்து ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு. முன்பு பெரியோர்கள் குறிப்பிட்ட நாள், நேரம் பார்த்து அதற்குப் பிறகு சாந்தி முகூர்த்தம் நடைபெறும். ஆனால் இன்று சாந்தி முகூர்த்தம் எனும் சடங்கிற்குப் பெரும்பாலான தமிழர்கள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

## கோலம்

மனிதனுக்கு இயல்பாக அமைந்த கலையுணர்வின் அடிப்படையில் தோன்றிய கலைகளுள் முதன்மையானது கோலம். இதன் பழைமை கருதியே இதனை ‘நாடோடிக்கலை’ எனவும் அழைப்பர்.[4] தமிழ்ப் பண்பாட்டில் இது தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

புள்ளியாய் இருந்து கோடாய் வளர்ந்து அழகுணர்வுடன் தமிழ்ப் பண்பாட்டின் மேன்மையைச் சொல்லும் கலையான கோலக்கலை மொரிசியசு தமிழர்களிடமும் வாழ்ந்து வருகிறது. மொரிசியசு நாட்டில் குடியேறிய பழைய நூற்றாண்டுகளில் ஒவ்வொரு தமிழரும் கரும்பு வயல்களின் அருகில் அமைந்த தம் குடில்களின்முன் கோலமிட்டு வந்தனர். ஆனால் கல்வியும் வேலைவாய்ப்பும் பெருகிவிட்ட இந்த நாளில் அன்றாடம் கோலமிடும் வழக்கம் அங்கு அருகிவிட்டது.



திருமணவிழா நாட்களிலும் திருவிழா நாட்களிலும் மட்டுமே கோலமிடும் வழக்கம் இப்போது மொரிசியசில் நிலவுகிறது. குறிப்பாக திருவிழா நாட்களில் கோயில்களில் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் ஒன்று கூடிக் கோலமிடுகின்றனர். ஒவ்வொரு நாளும் வீடுகள்தோறும் கோலமிட விருப்பமிருந்தும் ஆண் பெண் இருவருமே பணிக்குச் செல்லும் மொரிசியசு சூழலில் இது சாத்தியமில்லை என்கிறார் கிருஷ்ணம்மாள் முனிகாடு.[5]

## பிறப்புச் சடங்குகள்

இயற்கையோடு பொருந்திய வாழ்வு தமிழர் வாழ்வு. பண்டிதரும் பாமர மக்களும் அவரவர் சூழ்நிலைக் கேற்பப் பாடல்களைப் பாடி மகிழ்தல் மரபு. இந்த மரபில் எழுந்த ஓர் இலக்கிய வகை **'தாலாட்டு'** எனப்படுகிறது.

குழந்தைப் பிறப்பு விழாவில் தமிழ்மரபு போற்றும் சடங்குகள் செய்யப்படுகின்றன. குழந்தை பிறந்த ஏழாம் நாளில் அல்லது ஒன்பதாம் நாளில் நொச்சி இலை இட்ட நீரில் குழந்தையை நீராட்டுகின்றனர். சாம்பிராணி முதலிய புகைகளும் காட்டி குழந்தைகளுக்குக் கருகமணி, பால்மணி, வசம்புக்காப்பு உள்ளிட்டவற்றைச் சூட்டும் நிகழ்வுகள் நடக்கும்.

பின்னர் தொட்டிலில் குழந்தையைப் போட்டுத் தாலாட்டும் பழக்கமுண்டு. தலைமுறைத் தலைமுறையாக ஒவ்வொரு தாயும் தாலாட்டுப் பாடுவது தமிழ்மரபு. தாலாட்டின் வழியாகத் தாய் தன் குழந்தைகளுக்குப் பண்பாட்டையும் மொழி இனிமையையும் கற்றுத் தருகிறாள். தாலாட்டுப் பாடலின் பொருள் குழந்தைக்குப் புரிகிறதோ இல்லையோ தாலாட்டின் இசை குழந்தையை உறங்க வைக்கப் பயன்படும் மாமருந்தாகும். ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் தனித்தனித் தாலாட்டுப்பாடல் மொரிசியசில் இருந்தது என்பதைப் பொன்.திருமலைச்செட்டி சுட்டுகிறார்.[6]

பழைய தலைமுறையினரிடம் விருப்பமான இலக்கிய வடிவமாய் இருந்து வந்த தாலாட்டு இன்றைய தலைமுறையினரிடம் ஏறத்தாழ மறைந்தே விட்டது. ஆனால் இலக்கியப் படைப்புகளில் குறிப்பாக கவிதைகளில் தாலாட்டு எனும் சொல்லாட்சி இடம்பெற்று வருகிறது. மொரிசியசையே குழந்தையாய் எண்ணித் தாலாட்டும் ஒரு பாடலை மொரிசியசு தமிழ்க் கவிஞர் தீ.வி.பொன்னுசாமி பின்வருமாறு பாடியுள்ளார்.

## தாலாட்டும் தொட்டிலில் தலையாட்டும் குழந்தை மொரிசியசு

தண்ணீர் நடுவிலே
தாமரைப் பூ போல
கண்ணீர் பெருங்கடலில்
கடுகைப் போல் மொரிசியசு

தாலாட்டும் தொட்டிலில்
தலையாட்டும் குழந்தைக்குப்
பாலூட்டும் அன்னையாம்
பனிபெய்யும் மொரிசியசு

பலமலரின் பூந்தோட்டம்
பலமொழியின் தாய்வீடு
கலைதவழும் மொரிசியசு
கண்சிமிட்டும் விண்மீன்!

உதிக்கும் கதிரவனின்
ஒளிபட்டு மின்னும்,
மிதக்கும் சிறுபந்து
உலகப் பெருங்கடலில்!

தென்றல் விளையாடும்
தீவில் நாள்தோறும்
அன்பு விளையாடும்
அழகு மொரிசியசு!

வணக்கம் எல்லார்க்கும்!
வாழ்த்துக்கள் அனைவர்க்கும்
இணைக்கும் தமிழுக்கு
என்றும் தாள்பணிவோம்!

குன்றுகள் தொடர்ந்துவரும்
கூடவே மேகம்வரும்
நின்று பார்க்குமிடம்
நீலக் கடல் தெரியும்!

இந்துப் பெருங்கடலில்
இருக்கும் தமிழர்கள்
எங்கள் இனத்தவர்கள்
என்றே மகிழ்கின்றோம்

காவடி ஊர்வலங்கள்
கார்த்திகைத் தீபங்கள்
பூவடி தெய்வத்திற்குப்
பூபாள ராகங்கள்!

நான் தமிழன் எனச்சொல்ல
நாகூச லாமா?
வான் இடிந்து வீழ்ந்தாலும்
வழிமாற லாமா?

வந்த சமயத்தில்
வரலாறை நினைத்தவர்கள்
இந்து சமயத்தை
இங்கேயும் வளர்த்தார்கள்!

காலம் மாறிவரும்!
கல்விச் சாலைக்குப்
பாலம் அமைக்கும்
பணியில் சிலதமிழர்

அல்லும் பகலும்
அயரா தமிழ்த்தொண்டில்
செல்லத் துவங்கிவிட்டார்!
சிறிது கைகொடுங்கள்![7]

மொரிசியசு எனும் குழந்தையின் அழகில் மெய் மறந்த கவிஞர் தன் மண்ணைப் பலவாறு போற்றி மகிழ்கிறார். மொரிசியசின் மொத்த அழகையும் இப்பாடல் வெளிப்படுத்தி விடுகிறது. அமைதி தவழும் இயற்கையின் இருப்பிடமாய்த் திகழும் இத்தீவினைக் குழந்தையாய்ப் பார்த்து பூரிக்கும் தாய்மையின் நேசத்தையும் தாலாட்டின் சிறப்பையும் கவிஞர் உணர்த்தி விடுகிறார்.

## குழந்தைகளுக்குப் பெயரிடல்

ஒரு சமூகத்தின் ஆசைகளும் கடந்தகால நினைவுகளும், எதிர்பார்ப்புகளும், அழகுணர்ச்சியும், நம்பிக்கையும் மனிதனுக்குப் பெயரிடும் வழக்கத்தில் பொதிந்து கிடப்பதைக் காணலாம். மொரிசியசில் தமிழர்கள் தோட்டப்புறத் தொழிலாளிகளாக இருந்து வந்த காலங்களில் தமிழ்நாட்டுப் பெயரிடும் மரபை முழுவதுமாகப் பின்பற்றி வந்தனர். ஒவ்வொரு ஆணின் பெயரிலும் சாதிய அடையாளங்கள் இருந்து வந்ததைக்

காணமுடிகிறது. ஆனால் தமிழ்நாட்டில் சாதியப் பெயர்களைத் தங்கள் பெயர்களுடன் இணைத்து எழுதும் போக்கு திராவிட இயக்க மறுமலர்ச்சியால் முற்றிலும் அழிந்து விட்டது.

தலைமுறை இடைவெளிகளில் மொரிசியசு தமிழர்கள் சாதிகளைக் கடந்து தமிழர் என்ற அடிப்படையில் தங்கள் திருமண உறவுகளை அமைத்துக் கொள்ளும் பக்குவத்தை அடைந்துவிட்டனர். வேற்று இன மக்களோடும் கலப்பு மணம் செய்து கொள்ளும் நிலையும் பரவி வருகிறது. ஆனால் தங்கள் முன்னோர்களின் பெயர் மரபை விட்டுவிடலாகாது என்ற உணர்வில் செட்டி, படையாச்சி, பிள்ளை எனும் சாதிப் பெயர்களை இணைத்துப் பெயரிடும் முறை இருந்து வருகிறது. இச்சொற்கள் சாதியின் பெயர்கள் என்று மொரிசியசு தமிழர்கள் அறியவில்லை.

**உறவு முறைகள்**

மனித உறவுகளின் அடிப்படையில் எழும் உறவுமுறை அமைப்பு, பிறப்பு மற்றும் திருமணம் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறுபட்ட உறவுமுறைச் சொற்களைப் பெற்று நிற்கின்றது. இவ்வுறவு முறைச் சொற்கள் உறவுமுறை அமைப்பின் ஒரு பகுதியாக மட்டும் செயல்படாமல் சமுதாயக் குழுக்களின் ஆக்கத்திலும் அவற்றை முறைப்படுத்துவதிலும் தலையாயப் பங்காற்றுகின்றன.

மொரிசியசு தமிழ்க் குடும்பங்களில் அன்பும் நெருக்கமும் மிகுதி. புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும்போது இந்த நெருக்கம் கூடுதலாக இருக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அன்பின் அடிப்படையில் எழும் குடும் வாழ்க்கையில் மதிப்பும் மரியாதையும் நிலைக்கின்றது. பெயரைச் சொல்லி அழைக்காமல் முறைப் பெயர்களைச் சொல்லி அழைப்பதில் அன்பின் ஆழத்தை உணர முடியும். எனவேதான் தமிழ்ப் பண்பாட்டில் இந்த உறவுப்பெயர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருந்து வருகின்றன. உறவுமுறைப் பெயர்களைப் பொதுநிலையில் இரண்டு வகைப்பாட்டில் அடக்குவர்.[8]



உறவுமுறைப் பெயர்களைப் பயன்படுத்துவதில் தமிழ் மரபைச் சிறிதும் மாற்றாமல் மொரிசியசு தமிழர்கள் பின்பற்றி வருகின்றனர்.

அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, அத்தை, மாமா போன்ற இரத்த உறவுப் பெயர்களையும் கணவன், மனைவி, மாமனார், மாமியார், மைத்துனன், மைத்துனி, கொழுந்தன், கொழுந்தி போன்ற மணஉறவு முறைப் பெயர்களையும் மொரிசியசு தமிழ்க் குடும்பங்களில் காணலாம்.

கிரியோல்மொழி பேசும் தமிழ்க் குடும்பங்களில் கூட உறவுமுறைப் பெயர்கள் தமிழில்தான் இருந்து வருகின்றன. கிராமப்புறங்களில் பிற இனத்தவர் தமிழரிடம் பேசும்போது தமிழ் உறவு முறைப் பெயர்களைப் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

**உணவு முறைகள்**

உணவுப் பழக்க வழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை, வாழ்நிலத்தில் விளைபொருள்கள், சமூகப் படிநிலைகள், உற்பத்திமுறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொருத்து அமையும். எனவேதான் உணவு உடல் சார்ந்தது மட்டுமன்றி சமூகம் சார்ந்ததுமாகும் என்பர்.

தமிழ்க் குடும்பங்களில் உணவு ஊட்டுதல், உணவு உண்ணுதல், சாப்பாடு போடுதல், கஞ்சி வார்த்தல் என எல்லா செயல்களிலுமே சமூகவயமாக்கம் நிகழ்கிறது. தமிழர்ப் பண்பாட்டில் பிறந்த குழந்தைக்கு முதன்முதலில் உணவினை ஊட்டுதல் என்பதைப் பண்பாட்டு வயப்பட்ட சடங்காக மொரிசியசிலும் தமிழர்கள் பின்பற்றி வருகின்றனர்.[9]

கைக்குழந்தைகள் முதல் மழலையர் வரை அவர்களுக்கு உணவு ஊட்டுதலின் போது அம்மாக்கள் நிலவைக் காட்டுதல், கதை சொல்லுதல், விளையாட்டு காட்டுதல், பயமுறுத்தல் எனப் பல்வேறு உத்திமுறைகளை மொரிசியசு தாய்மார்களும் கையாண்டு வருகின்றனர்.

தமிழ்ச் சமுதாயத்தில் உணவு உண்ணுதல் என்பது குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து உண்ணுவதையே குறிக்கும். இது குடும்ப உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டது. குடும்பத்தில் அனைவரும் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளவும் இந்த முறை துணைநிற்கிறது.

மொரிசியசிலும் தமிழர் சமையல் தனித்தன்மை வாய்ந்தது. அறுசுவை உணவு, பொங்கல், கஞ்சி, தயிர்ச்சாதம், புளிச்சோறு போன்றவை தமிழர்களுக்குரிய உணவு வகைகளாகும். தமிழ் மொழி மற்றும் சமயத்தின் மூலமாக மட்டுமல்லாமல் மகளிர் தமிழர் சமையலின் வழியாகவும் தம் பண்பாட்டை நிலைக்க வைக்கின்றனர். பல்வகை மரக்கறிகளுக்குச் சுவையூட்டும் நறுமணப் பொருள்கள் தமிழர் சமையலில் இன்றியமையாத இடம் பெறுகின்றன.

பொங்கல் தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளில் ஒன்று. இனிப்புப் பொங்கல் என்றும் உப்புப் பொங்கல் என்றும் இருவகை பொங்கல் உண்டு. வீட்டிலோ, கோவிலிலோ வழிபாடு நடைபெறும்போது மகளிர் பொங்கல் பொங்குவதைத் தங்கள் கடமையாகக் கொள்கின்றனர். இவ்வகையில் பெண்மணிகள் தமிழர் சமையலின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழ் உணவு வகைகளைச் சமைத்துத் தங்கள் பண்பாட்டைத் தக்க வைக்கின்றனர்.

மொரிசியசு தமிழர் உணவில் அரிசி உணவுக்குத் தனிச் சிறப்புண்டு. தமிழர்கள் இரவு உணவாக சோறு விளங்கி வருகிறது. பயணங்களின்போது கூட தமிழர் உணவு விடுதிகளில் தமிழ் உணவைச் சாப்பிடுவதையே அந்நாட்டுத் தமிழர் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இட்லி, தோசை போன்ற அரிசி உணவுகளைச் சாப்பிடுவதில் அவர்கள் ஈடுபாடு காட்டுகின்றனர்.

விரதச் சாப்பாடு என்ற சாப்பாட்டு வகையைத் தமிழர் மட்டுமல்லாமல் பிறரும் விரும்பி உண்பர். விரதச் சாப்பாடு திருவிழா நாட்களிலும் வேறு விசேட நாட்களிலும் திருமணத்துக்கு முந்தையநாள் விருந்திலும் இடம் பெறும். சோற்றோடு சாம்பார், இரசம், காய்கறிக் கூட்டுகளை வாழையிலையில் படைக்கும் வழக்கம் அங்குமுள்ளது. அதன்பின் பாயசமும் அளித்து விருந்தை நிறைவு செய்வர்.

சமையலில் தமிழர் பயன்படுத்தும் பல பொருள்கட்கும் காய்கறி வகைகட்கும் தமிழ்ப் பெயர்களே அந்நாட்டில் வழங்கப்படுகின்றன. பிற இனத்தவரும் கொத்தமல்லி, கறிவேப்பிலை, பீர்க்கங்காய், புடலங்காய், அவரைக்காய் என்றே கூறுகின்றனர். பிட்டு, உருண்டை, தோசை, முருக்கு, கறி, இரசம், வடை, மோர்த்தண்ணீர், பானகம், அப்பளம், பாயசம், கஞ்சி, பாக்கு, வெற்றிலை, பொன்னாங்கனி, முருங்கை, வெட்டிவேர் போன்ற உணவு சார்ந்த தமிழ்ச் சொற்களை வேற்று இனத்தவரும் பயன்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் தமிழர் உணவின் செல்வாக்கை உணரலாம்.

**ஆடை மரபு**

தமிழர்கள் ஆடைக்கு மிகுந்த முக்கியத்துவம் தருபவர்கள். **'ஆள்பாதி, ஆடைபாதி'** எனும் பழமொழி தமிழரின் வாழ்வில் ஆடைபெறுமிடத்தை உணர்த்தி நிற்கிறது. காலந்தோறும் தமிழரின் ஆடை மரபு பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி இன்று தமிழரின் அடையாளமாக வேட்டியும் புடவையும் மாறியிருக்கின்றன. பழந்தமிழ் ஆடையின் சிறப்பான பகுதி ஆடைகளுக்குக் கரையிடும் வழக்கமாகும். பெண்களின் புடவையின் மதிப்பை அதன் கரைதான் தீர்மானிக்கிறது. ஆண்களின் வேட்டிக் கரையும் இன்று வரை மக்களிடம் சிறப்பிடம் பெற்றிருப்பதைப் பார்க்க முடிகிறது. [10]

மொரிசியசில் திருமணவிழாவில் தமிழரின் ஆடை மரபு தவறாமல் பின்பற்றப்படுகிறது. திருமண நாளன்று மணமகன் வேட்டி கட்டிக் கொண்டு தோளில் துண்டு அணிவான். மணமகள் பட்டுப்புடவை கட்டித் தமிழர்க்குரிய நகைகளை அணிவாள். உற்றார் உறவினர் அனைவரும் புத்தாடை அணிந்தே விழாவில் பங்கேற்பர்.

திருவிழா நாட்களிலும் வேட்டியும் புடவையும் தமிழச் சமுதாயத்தின் முதன்மையான அடையாளங்களாகக் கொள்ளப்படுகிறன்றன. கோயில்களுக்குச் செல்லும்போது பெரும்பாலான ஆண்களும் பெண்களும் வேட்டி, புடவை அணிந்து செல்வது வழக்கமாகும். கீழே இடம் பெறும் படம் கோயில்களுக்குப் பெண்கள் அனைவரும் பட்டுப்புடவை அணிந்து செல்லும் காட்சியைக் காட்டுகிறது.



**கோவில் திருவிழாவில் புடவை உடுத்திய மொரிசியசு பெண்கள்**

தமிழர்கள் தனிப்பட்ட முறையில் பிற ஆடைகளை அணிவதுண்டு. ஆனால் ஒரு புனிதமான சடங்கு அல்லது ஒரு திருவிழா நடைபெறும்போது தமிழ் மகளிர் கூந்தலில் அழகிய நறுமணப் பூக்களைச் சூடி, நெற்றியில் திலகம் இட்டு, பாவாடையையும் புடவையையும் உடுத்தி அருமையான அணிகலன்களை அணிவர். ஆண்கள் பட்டு வேட்டியும் சட்டையும் அணிவர். இது பழங்காலத் தொட்டு வருகின்ற ஒரு பழக்கம்.

மொரிசியசில் மகளிர் ஆடைப் பண்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். முன்னோர் கற்பித்த தமிழ்ப் பண்பாட்டு நெறிகளை மொரிசியசுப் பெண்டிர் இன்றுவரை பின்பற்றிக் கொண்டு வருகின்றனர். அவர்கள் தம் ஆடைகளின் வழியாகவும் அடையாளமாகக் கருதுகின்ற பொட்டு மற்றும் தாலியின் மூலமாகவும் தம் பண்பாட்டை நிலைக்கச் செய்கின்றனர்.

**பழங்கலை மரபு**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்தீவில் குடியேறிய தமிழர்கள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். கூத்து, கும்மி போன்ற நாட்டுப்புற நாட்டியத்தோடு நாட்டுப்புறப் பாடல்களும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தெம்மாங்குப் பாடல்களில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். நாள் முழுதும் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்த பின்னர் இரவு நேரங்களில் அவர்கள் பாட்டுக்களைப் பாடி ஆடுவார்கள். அது அவர்களின் பொழுதுபோக்காக இருந்தது. அந்நாட்களில் பெரும்பாலும் தமிழகத்தில் தாம் கற்ற நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுவர். மேலும் வறுமையின் கொடுமைகளும், கரும்புத் தோட்ட உரிமையாளர்கள் அவர்களுக்கு இழைத்த தண்டனைகளும் அச்சுறுத்தல்களும் அந்நாட்டுப்புறப்பாடல்களின் பாடுபொருள்களாக அமைந்தன. தமிழ்க் கூத்துகளில் பிரிவுத்துயரைப் பற்றிய பாடல்களை மனவருத்தத்தோடு பாடித் தம் பிரிவுத் துயரை ஆற்றிக் கொண்டனர். வறுமையால் 'நல்லதங்காள்' பட்ட துன்பத்தைக் கதை கூறும் வாத்தியார் மனம் உருகிப்பாடும்போது பலர் புலம்பி அழுவார்கள்.

அக்காலத்தில் நாடகங்கள் **'கூத்து'** என்ற பழைய படிவத்திலேயே நடிக்கப்பட்டு வந்தன. அக்கூத்துகளில் பம்பை, உடுக்கை, தப்பு ஆகிய இசைக்கருவிகளைப் பயன்படுத்தி நல்லதங்காள் கதை, அரிச்சந்திரன் கதை, தேசிங்குராஜன் கதை, மகாபாரம் ஆகியவை இசையோடு ஆடிப்பாடினார்கள். மேலும், தமிழர்கள் பல இடங்களில் காமண்டி விழாவைக் கொண்டாடினார்கள். இவ்விழா மொரிசியசில் குடியேறிய மூன்றாம், நான்காம் தலைமுறையினர் வரை நடந்தது. இரவில்தான்

இவ்விழாவைக் கொண்டாடினார்கள். இவ்விழாவின்போது, பூங்கா, திடல் அல்லது விளையாட்டுத் திடல் நடுவில் தீ மூட்டுவார்கள். ஆண்கள் பெண் வேடமிட்டு நடிப்பார்கள். தப்பும் தாளமும் இந்நிகழ்வின் இசைக்கருவிகளாகும். தற்போது இப்பாடல்கள் வழக்கில் இல்லை.

## நம்பிக்கைகள்

மனிதன் இயற்கையின் பாதிப்பிற்கு மிகுதியாக உட்பட்டிருந்த, அறிவு வளர்ச்சியின் தொடக்கக் காலத்தில் நம்பிக்கைகள் தோன்றியிருக்கலாம். மனித வாழ்வில் நிகழும் இடையூறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையில் மனித மனம் சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவை நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன. எனவே நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டச் சமுதாயத்தால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.[11]

இயற்கையோடு இயைந்த மனிதன் இயற்கையையும் தன் உறவாகக் கொள்கிறான்; உரிமையாகக் கொள்கிறான். காற்று, மழை, தீ, தண்ணீர், மரம், செடி, விலங்கு முதலிய அசையும் பொருள், அசையாப்பொருள் ஆகிய அனைத்தையும் உயிருள்ளவையாகக் கருதினான். அவற்றிற்கும் சினம், மகிழ்ச்சி, துன்பம் ஆகியன இருப்பதாக எண்ணினான். அவற்றிற்குத் தன்னால் ஊறு விளைந்தால் அவையும் தனக்கு ஊறு விளைவிக்கும் என்றும் அவற்றிற்குத் தன்னால் நிறைவு கிட்டினால் அவை தனக்கும் நன்மை தரும் என்று நம்பினான். அந்த நம்புதலின் முடிவாக அச்ச நம்பிக்கையும் மகிழ்வு நம்பிக்கையும் இயற்கை ஆற்றல்கள் மீது அவனுக்கு ஏற்பட்டன என்பர்.[12] தமிழ்ச் சமுதாயத்தில் இத்தகைய நம்பிக்கைகள் நிறைந்திருக்கின்றன.

மொரிசியசு தமிழர்கள் தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்தபோது இந்த நம்பிக்கைகளையும் தங்களுடன் சுமந்து சென்றுள்ளனர். இந்த நம்பிக்கைகள் ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குப் பரவிப் பழகி வந்த வண்ணமுள்ளன. நம்பிக்கைகள் மக்களிடையே இயற்கையாகவும், செவி வழியாகவும் பரவும்போது நன்மை நிகழவேண்டும் என்ற எதிர்பார்ப்பினை உடைய மனித உள்ளம் சோதனைக்கு ஆட்படுத்தாமல் அவற்றை ஏற்றுக் கொள்கிறது. பின்னர் சமுதாயச் செல்வாக்குப் பெற்று காலப்போக்கில் நம்பிக்கைகளாக நிலைபேற்றினைப் பெற்று விடுகின்றன.

மொரிசியசு தமிழர்களிடம் காணப்படும் நம்பிக்கைகள் சிலவற்றைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

- பாத்திரம் ஏதாவது தவறிக் கீழே விழுந்தவிட்டால் அன்று வீட்டிற்கு விருந்தினர்கள் வருவார்கள் என நம்புகின்றனர்.
- விருந்து நாளில் வாழையிலையில் உணவு உண்டபின் இலையைச் சாப்பிட்ட பக்கம் மடிக்கவேண்டும்.
- கனவில் திருமணம் நடப்பதாக வந்தால் தீமை விளையும்
- கனவில் இறப்பு நிகழ்ந்தால் நன்மை கிடைக்கும்
- நாய் ஊளையிட்டால் மரணச் செய்தி வரும்
- பல்லி நமது உடலில் எந்தப் பகுதியில் விழுகிறதோ அதைக் கொண்டு பலவாறு நம்பிக்கைகளை வைத்துள்ளனர்.
- இருவர் பேசிக்கொண்டிருக்கும்போது பல்லி சத்தமிட்டால் அப்போது பேசிக் கொண்டிருந்த காரியம் நிறைவேறும்.
- கண் துடித்தலில் இடதுகண் துடித்தால் நன்மையும் வலதுகண் துடித்தால் தீமையும் ஏற்படும்.

இத்தகைய நம்பிக்கைகள் பலவற்றை மொரிசியசுத்தீவில் காணமுடிகிறது.

### மரணச் சடங்கு முறை

ஒருவருடைய ஆவி உடலைப் பிரிந்தவுடன் அவர் பக்கத்தில் இருப்பவர் உடனே இறந்தவரின் வலதுகாதில் 'ஓம் நமசிவாய' என்ற மந்திரத்தை இயன்ற அளவில் ஓதுவார். இறந்தவரின் உடல் தெற்குப் பக்கமாக இருக்கும்படி வெள்ளைத் துணி மீது கிடத்துவர். கண், வாய் திறந்த நிலையில் இருந்தால் அவற்றை மூடிவிடுவர். இருகைகளை மார்பில் சேர்த்து வெள்ளைத் துணிக்கயிற்றால் கட்டுவர். இறந்தவரின் தலையுச்சிக்கு நேராக விளக்கு ஏற்றி வைத்து திருவாசகப் பாடல்களைப் பாடுவர். தொடக்கத்தில் ஒப்பாரிப் பாடல்களைப் பாடி வந்த மரபும் இருந்தது.[13]

### உறவினர்கள் செலுத்தும் மரியாதை

சைவர்கள் மூன்று வயதுக்கு மேற்பட்டவர்களைத் தகனம் செய்ய வேண்டும் என்பதையும் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் சடலத்தைத் தூக்கிச் செல்லவேண்டும் என்பதையும் மரபாக வைத்துள்ளனர். உறவினர்கள் (மனைவி உட்பட) இறந்தவரின் காலை மட்டும் தொட்டு மரியாதை செலுத்தலாம் என்றும் சடலத்தின் பிற பகுதிகளைத் தொடுவதோ முத்தம் கொடுப்பதோ முறையல்ல என்றும் விதி

வகுத்துள்ளனர். சடலத்தைத் தூக்கிச் செல்வதற்கு முன்பாக அதைக் குளிப்பாட்டுவர். சடலத்தைக் குளிப்பாட்டுவதற்கு அந்த வீட்டில் பயன்படுத்தும் தண்ணீரையே கொண்டு குளிப்பாட்ட வேண்டும். உறவினர்கள் எண்ணெய் சிகைக்காய் பருப்பு முதலியவற்றை வலது கையால் தொட்டு சடலத்தின் தலையில் மட்டும் பூசுவர். சடலத்தைக் குளிப்பாட்டியபின் புது துணியுடுத்தி திருநீறு பூசி பன்னீர் சந்தனம் முதலிய வாசனைப் பொருட்களால் அலங்கரிப்பர். பாடையில் வைப்பதற்கு முன்பாக கொள்ளி வைப்பதற்குரிய சில சடங்குகளைச் செய்வர். (மட்பானையில் கும்பம் வைத்தல், நெய்ப்பந்தங்களைத் தயாரித்தல் முதலியவை) பாடையில் வைத்தபிறகு தாலி பிரிக்கும் சடங்கினை நடத்துவர். இறந்தவரின் ஆத்மாவின் (ஆவியின்) சாந்திக்கான பொதுப் பிரார்த்தனை நடத்துவர். சடலத்தைப் பொருத்தமான நேரத்தில் தூக்கவேண்டும் என்பது நியதி. வீட்டு வெளி வாசலைத் தாண்டியதும் உடல் சுடுகாட்டை நோக்கிச் செல்லும்படிச் செய்வர். சுடுகாட்டை அடைந்ததும் பாடையிலிருந்து சடலத்தை எடுத்துத் தலை தெற்குத் திசையில் இருக்கும்படி மரக்குவியலில் கிடத்துவர். உடனே அந்தப் பாடையை உடைத்து எறிந்து விடுவர்.

### கொள்ளி வைத்தல்

கொள்ளி வைக்க இறந்தோரின் ஆண்பிள்ளைதான் இருத்தல் வேண்டும் என்பர். தந்தைக்குத் தலைமகன் என்பதும், தாய்க்குக் கடைமகன் என்பதும் முறை. இறந்தவருக்கு மகன் இல்லையாயின் மகள் வயிற்றுப் பேரன் கொள்ளி வைக்க உரிமையுடையவனாவான். மகள் வயிற்றுப் பேரன் இல்லையாயின் மகன் வயிற்றுப் பேரன் கொள்ளிவைக்கலாம். பிள்ளை இல்லாதோர் விடையத்தில் மனைவிக்குக் கணவனும், ஏனையோருக்குத் தந்தையோ, சகோதரரோ, இவர்கள் இல்லாதபோது சகோதரர்களின் ஆண்பிள்ளைகள் கொள்ளி வைக்கலாம்.

கொள்ளி வைக்கின்றவர் வீட்டிலிருந்து மட்பானையைச் சுமந்து கொண்டு சுடுகாட்டிற்குச் செல்வார். சுடுகாட்டில் நீர் நிறைந்த மட்பானையை இடது தோளில் சுமந்து இடதுபக்கமாக மரக்குவியலை மூன்று முறை சுற்றிவருவர். நீர்ப் பானையைப் பின்புறமாக கீழே விட்டு எறிந்துடைத்து விடுவர். பிறகு வலது புறமாக வந்து இறந்தவர் மார்பில் கொள்ளி வைப்பார். பிறகு வீட்டுக்குப்போய் தலைமுழுகிவிட்டு விளக்கினைப் பார்க்க வேண்டும். அந்த விளக்கினை அன்று முதல் ஒவ்வொரு நாளும் ஏற்ற வேண்டும் என்பது வழக்கம். கொள்ளி வைத்தவர் பதினைந்து நாட்களுக்கு (அதாவது மோட்சதீபச் சடங்கு முடிகின்ற வரை) விரதம் இருத்தல் வேண்டும் என்பது கட்டாயம்.

மூன்று வயதுக்கு உட்பட்டோருக்கு எந்தச் சடங்கும் கிடையாது. சடலத்தைக் குளிப்பாட்டி அலங்கரித்து இடுகாட்டுக்கு எடுத்துச் சென்று பாலூற்றிப் புதைத்துவிடுவர். பிறகு பதினாறாம் நாளில் மோட்சதீபச்சடங்குகளைத் திருக்கோயிலில் நடத்துவர்.

### மறுநாள்

மறுநாள் காலை சுடுகாட்டுக்குச் சென்று சாம்பலையும் எலும்புகளையும் பால் ஊற்றி எடுத்துச் சென்று நீர் நிலையை அடைந்து அவற்றைத் தண்ணீரில் கரைத்துவிடுவர். பின் வீட்டிற்குத் திரும்பி வந்ததும் விளக்கு ஏற்றி ஒரு சிறு கல்லை எடுத்து அதனைச் சுத்தம் செய்து, ஒரு வெள்ளைத் துணியைக் கட்டி திருநீறு பூசி பூவைத்து கருமாதி நாள் வரைக்கும் விளக்கின் அருகில் வைப்பர். கருமாதியன்று வைத்த படையலோடு அக்கல்லையும் தண்ணீரில் விட்டு விடுவர்.

### மோட்சதீபம்

இது மரணத்தின் பின்பு பதினாறாம் நாள் நடைபெறும். இதற்கு முதல்நாள் இரவு பலகாரம் முதலிய படையல்களை அக்கல்லிற்கு முன்பாக வைத்து திருவாசகப் பாடல்களைப் பாடி (இது இறந்தவரின் ஆன்ம அமைதிக்காகச் செய்யப்படுகிறது) மறுநாள் அதிகாலையில் சூரிய உதயத்துக்கு முன்பாக தண்ணீரில் விட்டுவிடுவர். இதைக் கருமாதி எனவும் சிலர் கூறுவர். பின்னர் வீட்டில் புண்ணியதானம், அக்கினி வழிபாடு, பிண்டதானம் செய்வர். அதன்பின் கோயிலுக்குச் சென்று இறந்தவரின் ஆன்மா மோட்சம் அடைய வேண்டி மோட்ச தீபச் சடங்குகளைச் செய்வர்.

### தீட்டு

விதிமுறைப்படி தீட்டுக்காலத்தில் கோயிலுக்குச் செல்லுதல் கூடாது. மரணத்தினால் ஏற்படுகின்ற தீட்டு விவரத்தை அனைவரும் மனதில் வைத்துக் கொண்டு செயல்படுவர். அர்ச்சகர்களுக்குப் பத்துநாட்கள் என்றும், ஏனையோருக்குப் பதினைந்து நாட்களென்றும் தீட்டு நாட்களைக் கணக்கிடுகின்றனர். மேற்குறிப்பிட்ட நாட்களுக்குப் பிறகு மோட்சதீபச் சடங்குகள் கோயிலில் நடைபெற்றபிறகு வீட்டில் விளக்கு ஏற்றி வழக்கமான வழிபாடுகளைச் செய்யலாம் எனும் நெறியைப் பின்பற்றுகின்றனர்.

### மோட்ச தீபச் சடங்கிற்குப் பிறகு

ஒருவர் இறந்தால் அவருடைய மனைவி அல்லது கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், அண்ணன் தம்பி முதலியோர் கோயிலுக்குத் தாராளமாகச் சென்று

கடவுளை வழிபட்டு ஆறுதல் பெறலாம். ஆனால் ஓர் ஆண்டு வரை காவடி அல்லது பால் குடம் எடுத்தல், தீயில் இறங்குதல், புதுவீடு புகுதல், திருமணம் செய்தல் ஆகிய சடங்குகளைத் தவிர்க்க வேண்டும் என்கின்றனர். ஒருவர் தமிழ் மாதம் எந்தந் திதியில் இறந்தாரோ அடுத்த ஆண்டு அதே தமிழ் மாதம் அதே திதியன்றுதான் ஓர் ஆண்டாகும். ஒவ்வொரு மாதமும் இறந்த திதியன்று கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்வது நன்மை பயக்கும் என நம்புகின்றனர். திவசம் என்ற சடங்கு ஒவ்வொரு ஆண்டும் இறந்தநாளில் செய்யும் சடங்காகும்.

**பஞ்சமிக்குற்றம்**

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் ஒருவர் இறந்தால் பஞ்சமிக்குற்றம் எனப்படும். இந்த நாளில் இறந்தால் பிணத்தோடு வாழைக் கன்று ஒன்றும் சேர்த்து எரித்துவிட்டால் இக்குற்றம் நீங்கிவிடும் என்கின்றனர். இப்படியான நாளில் ஒருவர் இறந்தாலும் பதினாறாம் நாளிலேயே, மேலே கூறிய கருமாதி மோட்சதீபம் போன்ற சடங்குகளைச் செய்து முடித்தாக வேண்டும் என்பது நிபதி.

பஞ்சமிக் குற்றத்துக்காகக் கோழிக் குஞ்சோ வேறு எதுவோ பயன்படுத்துவது அர்த்தமற்றதும் சமய முறைக்குப் புறம்பானதுமான செயலாகும் எனக் கருதுகின்றனர். மேற்குறிப்பிட்ட சடங்குகளை முடித்தபின் பின்வரும் இரங்கல் சிற்றுரையை ஒருவர் வாசிப்பதோடு மரணச்சடங்கு முடிவுக்கு வரும்.

**இரங்கல் சிற்றுரை**

அன்பர்களே! வணக்கம். இந்த நேரத்தில் .......................... என்பவருக்கு ஈமக்கடனைச் செலுத்துகிறோம். மனிதப் பிறவி எடுத்த நாம் அனைவருமே தவிர்க்க முடியாத இறப்பை அனுபவித்தே தீருவோம். இந்த உடல் நிலையில்லாதது என்றும் அழிவுக்குரியது என்றும் நினைவில் கொள்ளத் தக்கது. எங்கள் சமயக் கொள்கையின்படி 'மீண்டும் பிறவாமை' என்பதை இறைவனிடம் வேண்டுகிறோம். ................................ ருடைய உயிர் அமைதி அடையும்படி நாம் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக! நன்றி .

சான்றெண்விளக்கம்


1. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.393
2. பொன். திருமலைச்செட்டி (தொ.ஆ), இராசரத்தினம் சங்கிலி வாழ்க்கை வரலாறும் படைப்புகளும், பக்.107-109
3. கள ஆய்வில் கதிர்வேல் சொர்ணம் அவர்கள் கூறியது (நாள்: 09.11.13)
4. சு. சக்திவேல், தமிழர் பண்பாட்டில் கோலங்கள், ப.83
5. கள ஆய்வில் திருமதி கிருஷ்ணம்மாள் முனிகாடு கூறியது (நாள் :11.11.13)
6. பொன் திருமலைச்செட்டி, "மொரிசியசு தீவில் தமிழ்ப் பண்பாடு", **உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டு மலர்**, ப.52
7. தீ.வி.பொன்னுசாமி, "தாலாட்டும் தொட்டிலில் தலையாட்டும் குழந்தை மொரிசியசு", வசந்தம் (டிசம்பர்,1989), ஏழாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு - சிறப்பு மலர், பக். 54-55.
8. முனைவர் எச். சித்திரபுத்திரன், **சங்கத்தமிழ் உறவுமுறைச் சொற்கள்**, ப.23.
9. பக்தவத்சல பாரதி, **தமிழர் உணவு**, ப.23.
10. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், ப.40
11. அ.இராசேந்திரன், நாட்டுப்புறப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள். ப.1
12. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.489.
13. மரணச்சடங்கு முறை - கையேடு, மொரிசியசு தமிழ்க் கோயில்கள் கூட்டிணைப்பு வெளியீடு, பக் 5-10.

# இயல் 3

# வழிபாட்டு முறையில் பண்பாடு

## முன்னுரை

மொரிசியசு சின்னஞ்சிறு தீவு நாடாக இருந்தாலும் உலக நாடுகளின் கவனத்தைக் கவரும் வகையில் பல்வேறு இன, மொழி, பண்பாடு கொண்ட நாடாக விளங்கிவருகிறது. தமிழர்கள் புலம்பெயர்ந்த உலக நாடுகளுள் ஈழம், மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்கு அடுத்த நிலையில் இந்நாடு வைக்கப்படுகிறது. ஆனாலும் சமயப் பண்பாடு எனும் நோக்கில் பிற நாடுகளைக் காட்டிலும் கூடுதல் ஆர்வத்தோடு வழிபாட்டு முறைகளைப் பின்பற்றித் தமிழர் பண்பாட்டு மரபைத் தக்கவைக்கும் நாடாக மொரிசியசு திகழ்கிறது. தமிழர்கள் வழிபாட்டு முறைகளின் மூலம் எவ்வாறெல்லாம் பண்பாட்டைக் காத்து வருகின்றனர் என்பதை இனி ஆராயலாம்.

## பண்பாடும் வழிபாடும்

ஒரு நாட்டின் பண்பாட்டு வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடைய அந்நாட்டு மக்களின் வழிபாட்டு முறைகளாகும். மக்கள் பல்வேறு காரணங்களுக்காகப் புலம் பெயர்ந்து செல்லும்போது பழைய வழிபாட்டிடங்களிலிருந்து ஒரு பிடி மண்ணை மஞ்சள் துணியில் முடிந்து உடன் எடுத்துச் சென்று அந்தந்த நாடுகளில் வாழுமிடங்களில் கோயில்களை ஏற்படுத்திக் கொள்வர்.[1] இந்த வகையில்தான் தொடக்கக் கால மொரிசியசுக் கோயில்கள் தோன்றியிருக்க முடியும்.

## துதிப்பாடல்கள்

மொரிசியசில் குடியேறிய முன்னோர்கள் முருகனைப் பக்தியுடன் வணங்கினார்கள். இதன் விளைவாக, அவர்கள் கிராமப்புறங்களில் கோயில்களைக் கட்டினார்கள். அக்காலக் கோயில்கள் குடிசைகளாக இருந்தன. ஆயினும், ஆழ்ந்த பக்தியுடன் முருகப் பெருமான் மீது துதிப்பாடல்களையும் அம்மன் மீதும் தாலாட்டுப் பாடல்களையும் பாடினார்கள். அக்காலத்தில் தமிழ் மக்களுக்கு இசைக் கலையில் போதுமான அறிவு இல்லாவிட்டாலும் பொருந்திய தாளத்தை இட்டுப் பாடினார்கள்.

கிராமப்புறக் கோவில்களில் முக்கியமாக முருகக் கடவுளுக்கும் அம்மனுக்கும் வழிவழியாகப் பாடப்பட்ட பாடல்களைத் தொடர்ந்து பாடினார்கள். எனினும், போர்ட்லூயி நகரத்தில் படித்தவர்கள் சிலர் இருந்ததால் புதுவகையில் துதிப்பாடல்களை இயற்றத்

தொடங்கினார்கள். இவ்வாறு 1930 ஆம் ஆண்டிலிருந்து 1950 ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த பெருமாள் சுப்பராயன், சுப்பையா முதலியார், வடிவேல் செல்லன் ஆகியோர் துதிப்பாடல்களை இயற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தார்கள்.

1956 ஆம் ஆண்டில், போர்ட்லூயி நகரத்தைச் சேர்ந்த சாம்பசிவம் குப்புசாமி பிள்ளை என்பவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, வடிவேல் செல்லன் **'ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பதிகம்'** என்றொரு 10 துதிப்பாடல்களைக் கொண்ட சிறிய நூல் எழுதினார். மேலும், **'முருகவேல் மாலை'**, **'வடிவேல் வடிவேலனே'** என்னும் தலைப்பைக் கொண்ட சிறப்பான துதிப்பாடல்களையும் பாடினார். 'பெல் வீ மோரல்' என்னும் ஊரிலுள்ள பால சுப்பிரமணியக் கோவில் நூற்றாண்டை முன்னிட்டு காவடியைப் பற்றிய சில பாடல்களையும் வெளியிட்டுள்ளார்.[2]

சுப்பையா முதலியார் **'பிரார்த்தனை மாலை'** என்னும் நூலில் **'இமய முதல் இலங்கைவரை எங்கும் உமது திருக்கோவில்'** எனத் தொடங்கும் விநாயகர் பாடலும் ; **'வாடிய நாரைக்கு முத்தியைத் தந்த திருவருட் பெருங்கடலே'** எனத் தொடங்கும் சிவபிரான் பாடலும் ; **'மதுரை மீனாட்சி உமையே அன்னபூரணியே கஞ்சன்மால் தங்கையே'** எனத் தொடங்கும் மீனாட்சி அம்மன் பாடலும் ; **'தினையளவு சுகத்திற்கு முனைகின்ற பாழ்மனதைத் திருவருளே'** எனத் தொடங்கும் முருகக் கடவுள் பாடலும் குறிப்பிடத்தக்க துதிப்பாடல்களாகும். இவர் இயற்றிய பாடல்களெல்லாம் திருவிழாக்களில் இன்றும் பாடப்படுகின்றன. திருமுருகன் மீது இப்பெரியார் படைத்த ஒரு துதிப்பாடலைக் கீழே காணலாம்.'

**மங்களம் மங்களம்**
**முருகனுக்கு மங்களம்**
**மங்களம் கந்தனுக்கு மங்களம்**
**மங்களம் வேலனுக்கு மங்களம்**
**மங்களம் வெற்றி வேல் மங்களம்**
**சக்திவேல் முருகா வீரவேல் முருகா**
**வடிவேல் அழகா ஞானவேல் முருகா**
**கந்தா கதம்பா கார்த்திகையா**
**வேல்வேல் முருகா**[3]

காலப் போக்கில் தமிழிசைக்கு ஒரு புதுவளர்ச்சி ஏற்பட்டது. இன்று கோயில்களில் தேவாரம், திருப்புகழ், திருவாசகம் முதலிய பக்திப்பாக்கள் இசையோடு

பாடப்பட்டு வருகின்றன. நாயன்மார்கள் பாடிய திருப்பதிகங்களையும் ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களையும் பாடி வருகின்றனர்.

### வழிபாட்டு மரபு

ஒரு சமூகத்தின் சமய நிறுவனத்திற்குட்பட்ட ஒரு தனிப்பட்ட தெய்வம் அல்லது ஒரு தொகுதியாக அமையும் தெய்வங்கள் அல்லது தனிப்பட்ட ஒரு முனிவர் அல்லது தெய்வீக ஆற்றலால் உந்தப்பட்டோர் போன்றோர்களோடு தொடர்புடைய சமய நம்பிக்கைகளையும் பிற செயல்பாடுகளையும் உள்ளடக்கியதே வழிபாட்டு மரபு என்பர்.[4]

உலகப் போர்களுக்குப் பின்னர் எதிர்ப் பண்பாட்டுப் போக்குகளும், புதிய சமய இயக்கங்களும் பரவலாக உலகந் தழுவி தோன்றிய நிலையில் தொடர்புச் சாதனங்களும் சமயவாதிகளும் பல்வேறு வழிபாட்டு மரபுகளை வெகு சனத்தன்மையோடு சாடும் போக்கு ஒரு நிலையிலும் புதிய வழிபாட்டு மரபுகள் தோன்றிக் கொண்டிருந்தமை மறுநிலையிலும் வளர வழிபாட்டு மரபுகளின் தன்மை பன்முக வேறுபாடுகளாக விரிந்தது.[5] மொரிசியசிலும் தமிழர் தெய்வ உலகம் பன்முகப் பட்டதாகவே இருந்து வருகிறது. தெய்வங்களுக்கு நடத்தப்படும் சடங்குகளை முன்வைத்து அங்குள்ள வழிபாட்டு மரபுகளை இனங்காண முடிகிறது.

### வழிபாட்டு மரபும் வகைப்பாடும்

நாட்டுப்புற ஆய்வாளர்கள் தமிழர் வழிபாட்டு மரபை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பாகுபடுத்துகின்றனர்,[6]

1. பெரு மரபு
2. சிறு மரபு

பெரு மரபு என்பது ஆகம விதிகளின்படி கோயில்களையும் சிலைகளையும் ஓவியங்களையும் கொண்டது. சிறுமரபு என்பது விதிகளுக்குட்படாத ஒருவித சுதந்திரத்தோடு கூடிய வழிபாட்டு மரபைக் கொண்டது. இந்த இரண்டு வகையான மரபுகளையும் மொரிசியசு நாட்டுத் தமிழ் மக்களிடையே காணமுடிகிறது.

### சிறுதெய்வ வழிபாட்டு மரபு

தொடக்கத்தில் சிறுதெய்வங்களுக்கு நிலையான இருப்பிடங்களோ நிலையான உருவங்களோ கூட இருந்ததில்லை. வழிபாட்டின்போது செங்கல் நட்டு அல்லது மண், சாணி கொண்டு உருவம் அமைத்துச் சாமிகள் உருவாக்கப்பட்டன. வழிபாட்டிற்குப் பின் காற்று, மழை, வெய்யிலில் மண்ணோடு மண்ணாகக் கலந்து விடும் நிலையே

சிறுதெய்வங்களுக்குரியது. இதனை மிக நுட்பமாக இயற்கை முழுவதிலும் நிறைந்திருக்கும் ஆற்றலை ஒரு கணம் நிலைபெறச் செய்து மீண்டும் இயற்கையிடமே கலந்துவிடும் போக்கு எனப் பக்தவத்சல பாரதி குறிப்பிடுவார்.[7]

காலப்போக்கில் பெருந்தெய்வங்களைப் போலவே சிறுதெய்வங்களுக்கும் நிலையான இருப்பிடங்கள் தோன்றின. இதன் தொடர்ச்சியாக நிலையான வடிவங்களும் ஏற்படுத்தப்பட்டன. இயற்கையின் ஆற்றலை வழிபட்டுவந்த தொல் தமிழர்கள் பின்னாளில் மூதாதையர், வீரர்கள் ஆகியோரின் ஆற்றலை வழிபடத் தொடங்கியபோதும் அது பால்சாரா நிலையிலேயே ஆண், பெண் எனப் பிரித்தறிய முடியாத நிலையில் இருந்தது. பின்னர்தான் பால் சார்பும், மனிதப் பண்பேற்றமும், மனித உருவேற்றமும் நிகழ்ந்தன. அதன்பின்னரே பல்வேறு வடிவ நிலைகளில் சிறுதெய்வங்கள் சித்திரிக்கப்பட்டன.

தொடக்கத்தில் தமிழ்நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து தோட்டப்புறங்களில் வாழத்தொடங்கியதும் மாரியம்மன், காளியம்மன், மதுரைவீரன், முனீஸ்வரன், பேச்சாயி போன்ற சிறுதெய்வங்களுக்குக் கோயில் எழுப்பினர். அக்கோயில்கள் பெரிய கட்டுமானங்களாக இல்லாமல் சின்னஞ்சிறு குடிசைகளாகவும் எளிய மண் சுவர்களாகவும் இருந்தன. உழைப்புக்கேற்ற கூலியும் இல்லாமல் மொரிசியசை வளப்படுத்த வியர்வை சிந்திய அக்காலத்தில் இத்தகைய கோயில்களை மட்டுமே அவர்களால் உருவாக்க முடிந்தது. அதன்வழி தங்களின் சமய மரபைக் காக்க முடிந்தது. இவ்வாறு மொரிசியசு தமிழரின் சமய வாழ்வு சிறுதெய்வ வழிபாட்டோடுதான் தொடக்கங் கொள்கிறது.

கரும்புத் தோட்டங்கள் இருந்த இடங்களிலெல்லாம் மாரியம்மன், காளியம்மன், திரௌபதி அம்மன் கோயில்கள் நிறைந்திருந்தன. அம்மன் திருவிழாக்கள் வரலாற்றுச் சமூகப் பின்னணியைக் காட்டுவனவாகும். முன்னோர்கள் தமிழகத்திலிருந்து மொரிசியசுக்குக் குடிபெயர்ந்த போதிலிருந்தே அம்மன் திருவிழாக்களைக் கொண்டாடினர். தற்போது அத்திருவிழாக்கள் இன அடையாளத்திற்கும் ஒற்றுமை மனப்பான்மைக்கும் அடிப்படையாகவும் உயிர்நாடியாகவும் விளங்குகின்றன. அம்மன் திருவிழாக்கள் ஊர்தோறும் மிகவும் சீரும் சிறப்புடனும், பக்தி பெருக்கத்துடனும் கொண்டாடப்படுகின்றன.

தமிழர் பலருக்குக் குலதெய்வமாகத் திகழ்கின்ற மாரியம்மன் கிராமத் தெய்வம் என்ற நிலையிலிருந்து காலப்போக்கில் பெருந்தெய்வமாகப் போற்றப்படுகிறார்.

குழந்தைகளுக்கு அம்மைநோய் ஏற்படும்போதெல்லாம் விரதம் இருந்து மாரியம்மனுக்குக் காணிக்கையாகக் கஞ்சி வார்த்தல் என்ற பழக்கம் காணப்படுகிறது. அம்மைநோய் ஏற்படும்போது குழந்தையை வேப்பிலையில் தூங்க வைப்பர். மஞ்சளை அரைத்து அம்மைமீது தடவுவர். வேப்பிலையும் மஞ்சளும் மருந்துப் பொருட்களாகக் கருதப்படுவதோடு இவ்விரண்டும் மாரியம்மனுக்கு உகந்தவை என்ற கருத்தும் உடையவர்கள் தமிழர்கள். அம்மைநோய் தீர்த்தலுக்காக ஏனைய சடங்குகளுக்கு இணையாக வீட்டில் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன, மாவிலை, வேப்பிலை, தென்னங்குருத்து தோரணங்களுடன் வாழைமரம் முதலிய மங்கலப் பொருட்களைக் கொண்டு வீட்டையும் கோவிலையும் அலங்கரிப்பர். கோவில்களில் இந்தச் சிறப்பு வழிபாடுகள் ஆண்டுதோறும் குறிப்பிட்ட மாதங்களில் நிகழும்.

அம்மன் திருவிழாக்களை முன்னிட்டு தமிழர்கள் மிகச் சிறப்பாக அம்மனை வழிபட்டு வந்தனர். தீமிதி விரத நாட்களில் உடுக்கை அடித்து அம்மனின் புகழைப் பாடி அவரை அழைப்பர். நவராத்திரி திருவிழாவின்போது தமிழர் துர்க்கை, மகாலட்சுமி, கலைமகளின் துதிப்பாடல்களைப் பாடுவர். மாரியம்மன் தாலாட்டு, அபிராமி அந்தாதி, பாரதியார் பக்திப் பாடல்கள், பக்திச் சுவை வாய்ந்த திரைப்படப் பாடல்கள் முதலியவற்றை இசையுடன் பக்தர்கள் சேர்ந்து பாடுவர். ஆடி மாதம் மாரியம்மனுக்கு மிகச் சிறந்த மாதமாகக் கருதப்படுகிறது. இம்மாதத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைதோறும் அம்மனுக்கு அபிடேகம் செய்து, அம்மனை அழகாக அலங்கரித்து, மலர் வழிபாடு செய்வர். இச்சிறந்த வழிபாட்டில் பெண்மணிகள் பலர் பங்குகொள்வர். அம்மன் வழிபாட்டில் ஈடுபடுவதால் இம்மாதத்தில் புதுமனை புகுதல், திருமணம் முதலியவை நிகழ்வது இல்லை.

"மொரிசியசு நாட்டில் குறுகிய இடைவெளிக்குள் பல தமிழ்க் கோயில்களைக் கடக்காமல் எவரும் செல்ல இயலாது. கற்களாலும், சுண்ணாம்பாலும் அழகுறக் கட்டப் பட்டிருப்பவை தமிழ்க்கோயில்கள்"[8] என ஆங்கிலேய ஆளுநர் சர்ஆர்தர் கோர்டன் குறிப்பிடுவது இங்கு நினைவு கூர்தற்குரியது.

மொரிசியசின் காடுகளை அழித்து கரும்பு வயல்களை நிறுவிய தமிழர்களுக்கு பாதுகாப்பு அரணாக இருந்தவை சிறுதெய்வங்கள். காட்டு விலங்குகளிடமிருந்து, தங்களைக் காத்துக் கொள்ளவே ஏராளமான சிறுகோயில்களை ஆங்காங்கே அமைத்துக் கொண்டனர். கி.பி.1811 ஆம் ஆண்டில் சுலியாக்கில் கட்டப்பட்ட அம்மன் கோயில்தான் பழமையான கட்டுமானக் கோயில் எனக் கூறப்படுகிறது.[9] கி.பி.1856இல்

தமிழ்வணிகர் சின்னத் தம்புவால் கட்டப்பட்ட திரௌபதி அம்மன் கோயிலும் பழமை வாய்ந்தது.

### சிறுதெய்வங்களும் மொரிசியசு தமிழரும்

கோர வடிவ வழிபாடு முக்கிய இடத்தினைப் பெற்று வருகிறது. அதாவது மக்கள் இவ்வடிவ தெய்வங்களை வணங்கினால் அவர்கள் துன்பங்கள் வெகுவிரைவில் போய்விடும் என நம்பி வருகிறார்கள். பெரும்பாலான கோர வடிவான தெய்வங்கள் சிறுதெய்வங்கள் தான். தமிழர்கள் மொரிசியசு நாட்டில் காலடி வைத்த நாள் தொட்டு இன்று வரை சிறுதெய்வங்களை வணங்கி வருகிறார்கள். ஆனால் வழிபாட்டு முறைகளில் காலந்தோறும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

வழிவழியாக வரும் பழமரபுகளைக் காத்தல் மனித மனத்தின் ஆழத்தில் வேரூன்றிய செயலாகும். சடங்குகள் இப்பணிக்குப் பெரிதும் துணை புரிகின்றன. முன்னோர் செய்த செயல்களைக் காரணக் காரிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தாம் கண்டவாறே பின்பற்றுவதும் நிகழ்த்துவதும் சடங்கு ஆகும். அச்சடங்குகளுள் மக்கட்பேற்றினைச் சார்ந்த சடங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். குழந்தை பிறந்த பதினாறு அல்லது நாற்பது நாள்களுக்குப் பிறகு இச்சிறுதெய்வ வழிபாடு இடம்பெறும். பிள்ளைபெறுதல் எந்த இடையூறுமின்றி நடைபெற்றது என்பதற்கு நன்றி செலுத்தும் சடங்கு இதுவாகும்.

இச்சடங்கின்போது பெரும்பாலோர், கோழிச் சேவல் போன்றவற்றைச் சிறுதெய்வங்களுக்குக் காணிக்கைகளாகப் படைப்பர். இனி குழந்தை நோயற்ற வாழ்வு பெற வழிபடுவர். காட்டேரிக்குப் பொதுவாகக் கருநிற கோழி பலியிடுவதுண்டு. அதன் இறைச்சி மற்றும் முட்டை கறியாக ஆக்கப்பட்டுப் படைக்கப்படும். மேலும் புளிக்குழம்பும் முருங்கைக் கீரையும் சமைத்துப் படைப்பர். கொழுக்கட்டை பலகாரமும் படைப்பர். சேவல்களை மதுரைவீரன், முனீஸ்வரன் ஆகிய ஆண் தெய்வங்களுக்குக் காணிக்கைகளாகச் செலுத்துவர். மேலும் தேங்காய், பழம், சர்க்கரை கலந்த முதிரை முதலியவற்றையும் படைப்பர். பிறகு உணவை எல்லாருக்கும் பகிர்ந்து மகிழ்ச்சியாக உண்பர். தமிழர்கள் இச்சிறுதெய்வங்களை ஆண்டுதோறும் இம் முறையில் வழிபட்டு வருகிறார்கள். இச்சிறுதெய்வப் பூசை தொடக்க காலத்தில் 'கான் ஜியாப்' ஊரிலுள்ள துர்க்கை அம்மன் கோயிலில் பேரளவில் நடைபெற்றது. அங்கே அதிக உயிர்ப்பலி செய்து வந்தனர். வாய்க்கால்களில் இரத்தம் ஓடுமளவு பலி கொடுத்து, சமைத்து அம்பாளுக்குப் படைத்த பிறகு கோயில் கூடத்திலேயே அமர்ந்து சாப்பிடுவர்.

மொரிசியசு நாட்டில் தீமிதி உற்சவம் சிறப்பாக நடைபெறுகின்ற கோயில்களில் அரவான் என்ற சிறுதெய்வத்தைக் காணமுடியும். பாரதப் போரில் தானே பலியாகிவிட்ட காரணத்தினால் இவரை தீமிதி விரத ஆறாவது நாளில் வழிபடுவர். காலப் போக்கில் தமிழர்கள் பெரும்பாலான கோயில்களில் பலி கொடுப்பதை நிறுத்திவிட்டனர். இதன் விளைவாக சிலர் வீட்டில் கூட உயிர் பலி வேண்டாமென்று சைவத்துக்கு மாறிவிட்டனர். ஆனாலும் அச்சிறு தெய்வங்களின் மீது தொடர்ந்து நம்பிக்கை வைத்து வருகின்றனர். உயிர்ப் பலிக்கு மாற்றாக எலுமிச்சம் மற்றும் பூசனிக்காய் அறுத்துப் படைப்பர்.

பெரும்பாலான கோயில்களில், வெளிப்புறத்தில் சிறுதெய்வங்களுக்கு இடங்கொடுத்து வழிபட்டு வருகிறார்கள். சில சமயவாதிகள், பெருந்தெய்வங்களை வணங்கினால் சிறுதெய்வங்களை வணங்க வேண்டிய அவசியமில்லை எனக் கருதுகின்றனர். ஆண்தேவதை சிவன்தான், பெண் தேவதை சக்திதான் எனக் கூறுகின்றனர். இவ்வாறு தற்காலத்தில் சிறு தெய்வ வழிபாட்டிற்கு எதிரான குரலும் மொரிசியசில் இருப்பதைக் கேட்க முடிகிறது. தெய்வங்குறித்த நம்பிக்கைகள் தமிழ் மக்களிடம் மிகுதியாக வழங்குகின்றன. எந்த ஒரு செயலும் தெய்வத்தால் நடப்பதாகவே கருதிப் பலவற்றைச் செய்து வருகின்றனர்.

முன்பு, பச்சைக் குத்தும் வழக்கம் தமிழர்களிடம் நிறைந்திருக்கிறது. பச்சைக் குத்திக் கொள்வதால் பேய்பிசாசுகள் நம்மை விட்டுத் தூர விலகிப் போகுமென்பது நம்பிக்கை. எனவே தெய்வங்களின் உருவங்களைப் பச்சைக் குத்திக் கொள்வதைக் காண்கின்றோம். திருமால் பக்தர்கள், சங்கு சக்கர உருவங்களையும், சக்தியை வணங்குகின்றவர்கள் சூலம், பாம்பு உருவங்களையும், முருக பக்தர்கள் வேல், மயில் போன்ற உருவங்களையும் பச்சைக் குத்திக் கொள்கின்றனர். ஆனால் பிற பண்பாட்டுத் தாக்கத்தினால் தெய்வ உருவங்களைப் பச்சைக் குத்திக் கொள்ளும் வழக்கம் அருகிக் கொண்டே வருகிறது. இன்று அழகுக்காகப் பலவிதமாக பச்சைக் குத்தும் வழக்கம் இளைய தலைமுறையினரிடம் பெருகி வருகிறது.[10]

தமிழர்கள் பலர் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் போது தான் விரும்பிய தெய்வங்களின் பெயரை அல்லது தனது குலதெய்வப் பெயரைச் சூட்டுவர். சிலர் தனது வணிக நிறுவனங்களுக்கும் தெய்வப் பெயர்களைச் சூட்டுவர். சான்றாக 'மயில் மஞ்சள் பொடி', 'அம்பாள் கடை' போன்றவற்றைச் சுட்டலாம். தொன்மை வாய்ந்த தமிழர்ப் பண்பாட்டுக் கூறுகளில் சிறு தெய்வ வழிபாடும் குறிப்பிடத்தக்கதாகும். நாளடைவில் இதுவே தமிழர்ப் பண்பாட்டின் ஆதி அடையாளமாக விளங்குகிறது. முன்னோர்கள் சிறு தெய்வ வழிபாட்டைப் போற்றி வாழ்ந்தவர்கள். இதனாலேயே தாயகம் விட்டு அந்நிய

நாட்டுக்குக் குடிபுகுந்த தமிழர்கள் சிறு தெய்வ வணக்கத்தைக் கைவிடாமல் காப்பாற்றி வருகின்றார்கள். சிறு தெய்வ வழிபாடும் பெருந்தெய்வ வழிபாடும் தமிழர்கள் வாழ்க்கையினின்று பிரிக்க முடியாதவை. இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக தமிழர் வாழ்வில் இயங்கி வருகின்றன.

சிலர் தம் வீட்டுக்கு வெளியே நல்ல அழகாகப் பீடத்தை அமைத்து, அதன்மேல் கற்கள், உருவச் சிலை, சின்னங்கள் முதலியவற்றையும் வைத்துப் பூசாரியை வரவழைத்துப் பூசை நடத்துவதும் உண்டு. அச்சிறுதெய்வங்களைக் காவல் காக்கும் தெய்வமாகக் கருதி வழிபடுகின்றனர். சிறுதெய்வங்களை வழிபடுகின்றவர்களுள் 60 விழுக்காடு உருவமற்ற கற்களை வழிபடுகின்றனர். 30 விழுக்காடு உருவச் சிலையில் சிறுதெய்வங்களைக் காண்பர். ஏனைய 10 விழுக்காட்டினர் சிறு தெய்வச் சின்னங்களில் மனநிறைவு பெறுகின்றனர்.






இடும்பன்





காட்டேரி அம்மன்



பேச்சி அம்மன்



முனீஸ்வரன்



மதுரைவீரன்

சிறுதெய்வங்கள் எண்ணற்றவை. ஆனால் மொரிசியசுத் தமிழர்களிடம் செல்வாக்குடைய சிறு தெய்வங்களாக முனீஸ்வரன், மதுரைவீரன், பேச்சி, காட்டேரி அம்மன் முதலியவற்றைக் குறிப்பிடலாம். சிறுதெய்வத்தை வழிபடுகின்ற குடும்பங்களில் காட்டேரி என்னும் சிறுதெய்வம் தவறாமல் வணங்கப்படுகிறது. மொரிசியசு நாட்டில் சிறுதெய்வம் என்று சொன்னால் உடனே காட்டேரி அம்மன் என்ற சிறுதெய்வத்தின் பெயரே நினைவில் வரும். இது நீண்டகாலமாக நிலவி வருகின்ற உண்மை. தமிழர்கள் மட்டும் அல்லாமல் வேறு இனத்தவரும் இவ்வாறே நினைப்பதை அறியமுடிகிறது.

முன்பு பெரும்பாலான வீடுகளில் சிறுதெய்வங்களை வழிபட்டனர். அக்கால வழிபாட்டு முறைமைக்கும் இக்கால வழிபாட்டு முறைமைக்கும் இடையே வேறுபாடுகளைக் காணமுடிகிறது. சிற்சில வீடுகளில் பழங்கால வழிபாட்டு முறைமையைக் கொண்டு வழிபடுவர். பழங்கால முறை என்பது உயிர் பலியிட்டு பூசையில் ஈடுபடுவது. இக்காலத்தில் சைவப் பொருட்களைப் படையலாக வைத்து வழிபடும் முறை மிகுதியாக உள்ளது.

தற்காலத்தில் தமிழர்களிடம் சிறுதெய்வ வழிபாடு குறைந்து வருகிறது. போதிய நேரமின்மை, சைவ மனப்பான்மை போன்ற பல காரணங்களை முன்வைத்து சிறு தெய்வ வழிபாட்டில் செல்வாக்கு குறைந்து வருகிறது. ஆனாலும் சிலர் சிறுதெய்வ வழிபாட்டினைத் தொடர்ந்து வருகின்றார்கள். தற்காலத்தில் 90 விழுக்காடு தமிழர்கள் சைவப் பொருட்களை மட்டும் இட்டு சிறுதெய்வங்களை வழிபடுகின்றனர். 10 விழுக்காடு தமிழர்கள் அசைவப் பொருட்களை இட்டு வழிபட்டு வருகின்றனர்.

மனிதன் எந்த வகையில் வாழ்கின்றானோ அதே வகையில் இறைவனுக்கான வழிபாடும் அமைவது இயற்கை. மக்கள் ஆடை அணிந்து ஒப்பனை பூசுவர்; இறைவனுக்குப் பொருத்தமான ஆடை அளித்து அலங்கரிப்பர். மக்கள் சாப்பிடுவார்கள்; இறைவனுக்கு நைவேத்தியம் படைத்து வழங்குவர். மக்கள் நீராடுவார்கள்; மஞ்சள் நீரால் சிறு தெய்வங்களை நீராட்டுவர். சிலர் முழு அபிடேகம் செய்வர். அதாவது பெருந்தெய்வங்களைப் போல சிறு தெய்வங்களையும் பால், தயிர், திருநீறு, எலுமிச்சம், பஞ்சாமிர்தம், இளநீர் முதலியவற்றால் அபிடேகம் செய்வர். அதற்குப் பிறகு தெய்வங்களுக்கு ஆடை அணிவித்து அலங்காரம் செய்வர். ஆண் தெய்வங்களுக்கு மஞ்சள், வெள்ளி நிற ஆடைகள். பெண் தெய்வங்களுக்குச் சிவப்பு, கருப்பு நிற ஆடைகள் அணிவித்து வழிபடுவர். பூமாலை, சந்தனம் குங்குமப் பொட்டு, வளையல் முதலியவற்றால் அலங்கரிப்பர். பின்னர் எலுமிச்சம், பூச்னிக்காய், தேங்காய், பழங்கள்,

பொங்கல், கடலை, சர்க்கரை முதலியவற்றைப் படைப்பர். சிறுதெய்வங்களுள் பெண் தெய்வங்கள்தான் அதிகம். அப்பெண் தெய்வங்களுக்குப் பல்வேறான அணிகலன்களையும் படைப்பர். அசைவ உணவு படைக்கும் பழக்கம் இருக்கின்றவர்களுள் சிலர் உயிர்ப்பலி கொடுக்காவிட்டாலும் கருவாடு, சாராயம், சுருட்டு முதலியவை இட்டு வழிபடுவார்கள்.

## சிறு தெய்வங்களும் இளைய தலைமுறையும்

சிறு தெய்வ வழிபாட்டைப் பற்றிய பலவிதமான எண்ணங்களை இளைஞர்கள் கொண்டுள்ளனர். சிறு தெய்வங்கள் யார்? சிறு தெய்வ வழிபாடு ஏன் செய்கிறோம்? எதற்காகச் செய்கிறோம்? சிறுதெய்வங்கள் எவ்வாறு நம் சமய மேம்பாட்டிற்கு உதவுகின்றன? சிறு தெய்வ வழிபாடுகள் மூடத்தனமானவை, வேடிக்கையானவை, நேரத்தையும் பணத்தையும் வீணாக்குபவை என்றும், வழிவழியாக வந்த பழக்கங்களை ஏன் பின்பற்ற வேண்டும்.? காரணங்கள் இல்லாமல் ஏன் வழிபட வேண்டும்? என்றும் எண்ணி சிறுதெய்வ வழிபாட்டை நிராகரிக்கும் நிலை இளையோரிடம் பரவி வருகிறது.[11]

சிறுதெய்வச் சடங்குகள் செய்யும் முறையைப் பற்றிச் சரியாகவும் எளிமையாகவும் கூறும் நூல்கள் மக்களுக்குக் கிடைக்கப் பெறாததால், பலர் சடங்குகள் செய்யும் முறைகளை அறியாமல் இருக்கிறார்கள். தெரிந்த ஒரு சிலரும் கேள்வி ஞானத்தையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டே அவற்றைச் செய்து வருகின்றனர். எனவே சிறு தெய்வ வழிபாட்டைப் பல விதமாகச் செய்யும் நிலை இருந்து வருகிறது. சிறுதெய்வ வழிபாட்டில், வேறு வேறு முறைகளைக் காணும்போது தமிழ் இளைஞர்கள் இடையே கருத்து வேறுபாடு தோன்றுகிறது. பயபக்தியோடு நடத்த வேண்டிய வழிபாடு சண்டை சச்சரவுடன் கூடிய வழிபாடாக மாறும் நிலை உருவாகிறது. இதனால் இளைஞர்கள் சிறு தெய்வ வழிபாடு வேண்டாம் என்று கூறுமளவுக்கு மாறிவிடுகின்றனர்.

மொரிசியசு நாட்டில் ஆண்களைவிட பெண்களுக்குத்தான் சிறு தெய்வ பக்தி மிகுதி. கோயில்களாக இருந்தாலும் வீடுகளாக இருந்தாலும் பெண்கள்தான் அதிகமாக சிறு தெய்வங்களை வழிபடுகிறார்கள். திருமணமான பெண்கள் கணவன்மீது அன்பு கொண்ட காரணத்தினாலும் குழந்தை மீது அன்பு கொண்ட காரணத்தினாலும் சிறு தெய்வங்களை இடைவிடாமல் வணங்குவார்கள். குடும்பத்தில் எவ்விதத் துன்பம் ஏற்படும்போதும் சிறு தெய்வங்களைத்தான் வணங்கி வருகிறார்கள்.

சிறுதெய்வ வழிபாட்டினால் வெகுவிரைவில் துன்பங்கள் போய்விடும் என நம்புகின்றனர். அச்சிறு தெய்வங்களால்தான் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என உறுதியாக நம்புகின்றனர். அச்சிறு தெய்வங்களைப் பய பக்தியோடு வணங்கி மாதக் கடைசியில் சம்பளம் வரும் நாளன்று முதன்முதலாகச் சிறு தெய்வங்களுக்குத்தான் முதல் செலவு செய்து வருகிறார்கள். இவ்வாறு மகளிரிடம் சிறுதெய்வ வழிபாடு நிலைத்து வருகிறது.

**பெருந்தெய்வ வழிபாட்டு மரபு**

வழிபாட்டு மரபில் இன்று பெருந்தெய்வ வழிபாடு மக்களிடம் பெருஞ் செல்வாக்குப் பெற்றுள்ளது. பெருமரபுத் தெய்வங்களின் பண்புகளைப் பின்வருமாறு அடையாளப்படுத்துவர்.[12]

- ❖ வேதங்களோடு தொடர்புடைய கடவுளர்களைக் கொண்டது.
- ❖ ஆகமவிதிகளின்படி கோயில்களையும் சிலைகளையும் ஓவியங்களையும் கொண்டது.
- ❖ பெரும்பாலும் சமஸ்கிருத மொழியை வழிபாட்டு மொழியாக உடையது.
- ❖ பார்ப்பனர்களை அர்ச்சகர்களாகக் கொண்டது.
- ❖ பூசைகள், விழாக்கள் முதலியவை குறிப்பிட்ட நேரம் மற்றும் நாள்களில் திட்டமிட்டு நடத்தப் பெறுவது.
- ❖ சைவ உணவே படையல் பொருளாக இருப்பது.
- ❖ வழிபாட்டிடங்கள் நாடு தழுவிய அளவில் விரிந்து பரந்திருப்பது.
- ❖ எழுதப்பட்ட புராண மரபுகளைக் கொண்டது.

இத்தகைய பண்புகளைக் கொண்டதாகவே மொரிசியசுத் தீவிலுள்ள பெருமரபுத் தெய்வங்களும் உள்ளன. சிவன், திருமால், முருகன், பிள்ளையார், அம்மன் போன்ற பெருமரபுத் தெய்வங்கள் அத்தீவில் பெருமளவு வணங்கப்பட்டு வருகின்றன. இத்தெய்வங்களுள் முருக வழிபாடே முதன்மை பெற்றுள்ளது. தமிழ்க் கடவுள் முருகன் எனும் நம்பிக்கைதான் இந்த முதன்மைக்கு மூலகாரணம்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழகத்திலிருந்து மொரிசியசில் குடியேறிய வேல்முருகன் என்ற முருக பக்தர் 'கார்ப்சு டி கார்ட்' மலைமேல் குமரக் கடவுளுக்கு படைவீடு அமைக்க வேண்டி சிறு தோயில் ஒன்றைக் கட்டினார். அது இப்போது சக்தி வாய்ந்த அழகிய முருகன் திருக்கோயிலாக விளங்குகிறது. முருகன் திருவிழாக்களாகிய தைப்பூசம், சித்திராப் பௌர்ணமி, பங்குனி உத்திரம் முதலியவை இங்கு சிறப்பாகக்

கொண்டாடப் பெறுகின்றன. சித்திராப் பருவக் காவடி விழாவன்று காலை முதல் மாலை வரை பல திசைகளிலிருந்து முருக பக்தர்கள் காவடி ஊர்வலத்தோடு திரண்டு வருகிறார்கள். பல அற்புதங்கள் நிகழும் கோயில் என்ற நம்பிக்கையால் எல்லா இன மக்களும் ஞாயிற்றுக்கிழமைதோறும் முருகனை வழிபட வருகிறார்கள்.

மொரிசியசில் வட திசையில் கிராண்ட்பே என்னும் ஊரில் வட பழனி முருகன் கோயில் ஒன்று உள்ளது. மாதந்தோறும் கிருத்திகை நட்சத்திர நாளன்று சிறப்பான வழிபாடுகளும் இசைக் கச்சேரியும் நடைபெறுகின்றன. ஆடிக்கிருத்திகை அன்று பெருந்திரளான தமிழ் மக்கள் நாட்டின் எல்லா இடங்களிலிருந்தும் காவடி விழாவில் கலந்து கொள்கின்றனர்.

'பெல் வீ மோரெல்' என்னும் ஊரிலும் முருகப் பெருமானுக்குச் சிறப்பு வாய்ந்த திருக்கோயில் ஒன்றைக் கட்டி, நூற்றாண்டுகளாக விசேட வழிபாடுகளை நடத்தி வருகிறார்கள் 'பிள்னசு தெசு ரோச்சஸ்' என்ற ஊரிலும் சிறந்த முருகன் கோயில் உண்டு.

கிளமெண்டா என்னும் இடத்தில் சிறு குன்றின் மேல் செங்கோல் என்பவரால் நூறாண்டுக்கு முன்பு ஒரு கோயில் கட்டப்பட்டது. இத்தண்டாயுதபாணி முருகன் கோயிலில் திருவிழாக் காலங்களில் மக்கள் பெருங்கூட்டமாகக் கூடி வழிபடுவர்.

நாட்டின் தெற்குப் பகுதியில் 'பியு வேலோன்' என்ற ஊரில் விநாயக சீதாலம்மன் திருக்கோயில் சங்கத்தினர் 'வைகாசி விசாகம்' திருவிழாவைக் கோயிலில் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். அவ்விழாவை முன்னிட்டு காவடி ஊர்வலத்தில் கலந்து கொள்ள, பல திசைகளிலிருந்து மக்கள் திரண்டு வருகிறார்கள்.

முருகன் கோவில்களில் பிள்ளையார், முருகன், சிவலிங்கம், திருமால் ஆகிய தெய்வங்களின் சிலைகளைக் காணலாம். ஆனால் சிவன் கோவில்களில் மட்டும் திருமால் சிலை இல்லை. பிள்ளையார் சிலை, அம்மன் சிலை, முருகன் சிலை, சிவலிங்கம் போன்ற சிலைகள் காணப்படுகின்றன. அதற்குக் காரணம் தமிழர்கள் சிவன் கோவில்களில் வைணவக் கடவுளாகிய திருமாலை வணங்குவதில்லை. இச்செய்தி கீழ்வரும் அட்டவணையால் உறுதிப்படுகிறது.

| கோவில் | திசை | வணங்கப்படும் தெய்வங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| அம்மன் கோவில் | வடக்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | திருமால் |
| | கிழக்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | திருமால் |
| | மேற்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | திருமால் |
| | தெற்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | திருமால் |
| | நாட்டு மையம் | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | திருமால் |
| முருகன் கோவில் | வடக்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | திருமால் |
| | கிழக்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | திருமால் |
| | மேற்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | திருமால் |
| | தெற்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | திருமால் |
| | நாட்டு மையம் | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | திருமால் |
| சிவன் கோவில் | வடக்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | -- |
| | கிழக்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | -- |
| | மேற்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | -- |
| | தெற்கு | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | -- |
| | நாட்டு மையம் | பிள்ளையார் | அம்மன் | முருகன் | சிவன் | -- |

## கோவில்களில் வழங்கப்படும் பக்திப் பாடல்கள்

கோவில்களில் வணங்கப்படும் தெய்வங்களுக்கு வழங்கப்படும் பக்திப் பாடல்களைப் பற்றி இனி ஆராயலாம்.

### மாரியம்மனுக்கு வழங்கப்படும் பக்திப் பாடல்கள்

மாரியம்மனுக்கு வழங்கப்படும் பக்திப் பாடல்களைக் கீழ்வரும் விளக்கப்படத்தில் காணலாம்.




மொரிசியசில் மாரியம்மனுக்கு வழங்கப்படும் பக்திப் பாடல்களுள் " **மாரியம்மன் தாலாட்டு..**" என்னும் பாடலை 100 % கோவில்களில் பாடுகிறார்கள். "**கற்பூர நாயகியே...**" என்னும் பாடல் 75% கோவில்களில் பாடப்படுகின்றது. "**அன்னை அன்னை**" என்னும் பாடலை 100% கோவில்களில் பாடுகின்றனர். "**கூற்றாயின வாறு..**" என்னும் பாடலை 100 % கோவில்களில் பாடுகின்றார்கள். "**மாதா ஜய ஓம்..**" என்னும் பாடலை 100% கோவில்களில் பாடுகின்றார்கள். "**அயிகிரி நந்தினி..**" என்னும் பாடல் 100% கோவில்களில் பாடப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட பாடல்கள் பெரும்பான்மையாகப் பாடப்படும் பாடல்கள் ஆகும்.

மாரியம்மனுக்கு மேலும் சில பக்திப் பாடல்களையும் பாடி வருகின்றனர். எடுத்துக்காட்டாக " **அபிராமி அந்தாதி..**" " **அம்மன் வாசலிலே தமிழே பாடி..**", " **அம்மா தாயே கலைவாணி..**" போன்ற பாடல்களைக் குறிப்பிடலாம். இவ்வாறு பல்வேறு பாடல்கள் பாடப்பெற்றாலும் " **மாரியம்மன் தாலாட்டு..**" பாடலே முதன்மையிடம் பெறுகிறது. இந்தப் பாடல் தீமிதி விழாவில் பக்தர்கள் ஊர்வலமாக வரும்போது பரம்பரைப் பரம்பரையாகப் பாடப்பட்டு வருகிறது. கஞ்சி வார்த்தல், பௌர்ணமி, நவராத்திரி போன்ற அம்மனுக்குரிய சிறந்த வழிபாடுகளின்போதும் மாரியம்மன் தாலாட்டைப் பாடுவதுண்டு.

திருநாவுக்கரசர் பாடிய முதல் தேவாரப் பாடலாகிய "**கூற்றாயினவாறு..**" என்னும் பாடல் 100 % கோவில்களில் மாரியம்மனுக்குப் பாடப்படுவதைக் காணமுடிகிறது. இத்தேவாரத்தில் கடைசி அடி " **வீரட்டானத்து உறை அம்மானே..**" ஆகும். இதில்

" **அம்மானே..**" என்ற சொல் வந்தமையால் இந்தப் பாடல் மாரியம்மனுக்குரிய பாடல் என்று நம்புகிறார்கள். எனவே இந்தப் பாடலை மாரியம்மனுக்காகப் பாடி வருகின்றனர். " **அயிகிரி நந்தினி..**", " **மாதா ஜய ஓம்..**" போன்ற வடமொழியில் உள்ள பாடல்களும் இன்று கோவில்களில் பாடப்படுகின்றன. இதற்குக் காரணம் தமிழ் நாட்டிலிருந்து மொரிசியசு நாட்டிற்கு வருகை தரும் குருக்கள் கோவில்களில் தமிழ் மொழியிலும் வடமொழியிலும் வழிபாடு செய்கிறார்கள். அவர்கள் இவ்வடமொழிப் பாடல்களைப் பாடும்போது பக்தர்களும் அந்தப் பாடல்களின் பொருளைப் புரியாமல் கூட அவற்றைப் பாடி வருகின்றனர்.

## சிவபெருமானுக்கு வழங்கப்படும் பக்திப் பாடல்கள்

சிவபெருமானுக்கு வழங்கப்படும் பக்திப் பாடல்களைக் கீழ்வரும் விளக்கப்படத்தில் காணலாம்.




"**தோடுடைய செவியன்..**" என்னும் திருஞானசம்பந்தர் தேவாரம் 100% கோவில்களில் பாடப்படுகின்றது. "**கூற்றாயின வாறு...**" என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தை 100% கோவில்களில் பாடுகின்றார்கள் "**சொற்றுனை வேதியன்**" என்னும் தேவாரம் 86% கோவில்களில் பாடப்படுகின்றது. "**தலையே நீ வணங்காய..**" என்னும் திருநாவுக்கரசர் தேவாரம் 33 % கோவில்களில் பாடப்படுகின்றது. "**நமச்சிவாய வாழ்க..**" என்னும் திருவாசகப் பாடலை 100% கோவில்களில் பாடுகிறார்கள். "**பித்தா பிறைசூடி..**" என்னும் சுந்தரமூர்த்தி தேவாரத்தை 100% கோவில்களில் பாடுகிறார்கள். "**காதலாகிக் கசிந்து..**" என்னும் திருஞான சம்பந்தர் தேவாரத்தை 100% கோவில்களில் பாடி வருகின்றனர்.

இக்காலத்தில் கோவில்களில் சிவபெருமானுக்குப் பெரும்பாலும் திருமுறைப் பாடல்களைத்தான் பாடி வருகின்றனர். குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாட்டின்போது சிவபெருமானைப் போற்றும் தேவாரப் பாடல்களைப் பாடி வருகின்றனர்.

திருஞானசம்பந்தர் பாடிய " **தோடுடைய செவியன்..**" என்னும் அவருடைய முதல் தேவாரமும், திருநாவுக்கரசர் பாடிய '**கூற்றாயின வாறு**' என்னும் அவருடைய முதல் தேவாரமும் சுந்தரர் பாடிய "**பித்தா பிறைசூடி..**", என்னும் அவருடைய முதல் தேவாரமும், மாணிக்கவாசகர் இயற்றியருளிய "**சிவபுராணம்..**", என்னும் முதல் திருவாசகமும் பாடப்பெற்று வருகின்றன.

சிவராத்திரி திருவிழாவின்போது சிவபெருமானைப் போற்றும் வேறு சில பக்திப் பாடல்களையும் பாடி வருகின்றனர். எடுத்துக்காட்டாக, பம்பூ மாரியம்மன் கோவிலில் மகா சிவராத்திரி திருவிழாவின்போது பக்தர்கள் "**மாதர்ப்பிறை..**", "**பிரம்ம முராரி..**", "**நந்தி பதிகம்..**" போன்ற பாடல்களை இசையுடன் பாடி வணங்குகின்றனர்.

**முருகக் கடவுளுக்கு வழங்கப்படும் பக்திப் பாடல்கள்**




"**பக்தியால் யான் உன்னைப்..**" என்னும் திருப்புகழ்ப் பாடல் 100% கோவில்களில் பாடப்படுகின்றது. "**ஏறுமயில் ஏறி...**" என்னும் பாடலை 100% கோவில்களில் பாடுகின்றார்கள் "**அகரமுமாகி...**" என்னும் திருப்புகழ்ப் பாடலை 75% கோவில்களில் பாடி வருகின்றனர். "**நாத விந்துகலாகி..**" என்னும் பாடல் 62.5 % கோவில்களில் பாடுகின்றனர். "**விருத்தங்கள்..**" என்னும் பாடலை 100% கோவில்களில் பாடுகின்றனர்.

பெரும்பாலான கோவில்களில் முருகனுக்குப் **"பக்தியால்..."** **"ஏறுமயில் ஏறி..."** போன்ற திருப்புகழ்ப் பாடல்கள் வெள்ளிக்கிழமை தோறும் பாடப்படுகின்றன. கார்த்திகை விரத நாட்களில் **"ஆடும் பரிவேல்.."** என்னும் பாடலையும் **"சிங்கார கதிர் வேலா.."** என்னும் பாடலையும் பாடி வருகின்றனர். இப்பாடலில் **"கார்த்திகை"** என்ற சொல் வந்தமையால், பெரும்பாலோர் கார்த்திகை நன்னாளில் இப்பாடலைப் பாடுவது வழக்கம்.

மேலே குறித்த பாடல்களைத் தவிர வேறு சில பாடல்களையும் பாடி வருகின்றனர். **"திருநீறு என்னைக் காக்கும்..."**, **"ஆராது ஆராது.."**, **"எத்தனை எத்தனை காவடிகள் எல்லாம்..."**, **"அழகென்ற சொல்லுக்கு முருகா..."**, **"பழம் நீ அப்பா..."** போன்ற புகழ்பெற்ற பாடல்களைப் பெரும்பாலும் காவடித் திருவிழாக்களில் இசையுடன் பாடி வருகின்றனர். காவடித் திருவிழாக்களின்போது பக்தர்கள் **"வற்றாத பொய்கை..."**, என்னும் விருத்தத்தையும் அதிகமாகப் பாடி வருகின்றார்கள்.

**கோவில்களில் திருமாலுக்கு வழங்கப்படும் பக்திப் பாடல்கள்**

திருமாலுக்கு வழங்கப்படும் பக்திப் பாடல்களைப் பின்வரும் விளக்கப்படத்தில் காணலாம்.




**"கோவிந்தமே ஹரி.."** என்னும் பாடல் 80% கோவில்களில் பாடப்படுகின்றது. **"வைகுந்த வாசகனே..."** என்னும் திருமால் பாடலை 90% கோவில்களில் பாடுகின்றார்கள் **"திருநாமப் பதிகம்.."** என்னும் பதிகப்பாடல் 100% கோவில்களில் பாடப்பட்டு வருகிறது. **"காக்கை சிறகினிலே.."** என்னும் பாடலை 60.% கோவில்களில்

பாடுகின்றனர். **"வாழ்க கண்ணா.."** எனும் பாடல் 100% கோவில்களிலும் **"நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்"** பாடல்கள் 10% கோவில்களிலும் பாடப்பெற்று வருகின்றன.

## தமிழர்த் திருவிழாக்கள்

தமிழரின் சமய வாழ்வில் திருவிழா என்பது மிகப்பெரிய பங்களிப்பைச் செய்யும் நிகழ்வாகும். பிராய்டிய அறிவியல், எப்போதும் இல்லாத அளவிற்குக் கூட்டு நனவிலியில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய நெருக்கடியைச் சமாளிக்கச் சேர்ந்த சேர்மமே திருவிழாக் கூட்டம் என்கிறது. அடிப்படையில் பண்பாடு என்னும் முழுமையில் திருவிழா என்பது பல தனிக் கூறுகளை ஒருங்கிணைத்துச் செயல்படும் ஒரு தொகுதி எனலாம்.[13]

திருவிழா என்ற தெய்வீகத்தளம் ஊரின் சமூகப் படிநிலைகளை உடைத்துத் தற்காலிகமான செயலுறவை நிலைநிறுத்துவதால் அது சமூகத்தின் பல படிநிலைத் தளங்களை இணைப்பதோடு அல்லாமல் சமூகத் தளத்தைத் தெய்வத் தளத்தோடு இணைக்கும் நிகழ்வையும் ஏற்படுத்துகிறது.

மொரிசியசில் தமிழர்கள் மாதந்தோறும் ஏதாவது ஒரு திருவிழாவைக் கொண்டாடுவதை வழக்கமாக்கி வைத்துள்ளனர். அவற்றுள் தீமிதி, காவடி, பொங்கல், கோவிந்தன்விழா, ஆடிப்பெருக்கு, தமிழ்ப் புத்தாண்டு ஆகிய திருவிழாக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

| கோவில் திருவிழாக்கள் | வீட்டுத்திருவிழாக்கள் |
|---|---|
| சித்திரை பௌர்ணமி | கோவிந்தன் |
| வைகாசி விசாகம் | நவராத்திரி |
| வரலட்சுமி பூசை | கஞ்சிப் பூசை |
| விநாயக சதுர்த்தி | தீபாவளி |
| கோவிந்தன் | பொங்கல் |
| நவராத்திரி | ஆடிப்பெருக்கு |
| தைப்பூசக் காவடி | கார்த்திகைத் தீபம் |
| ஆடிக்காவடி | |
| சிவராத்திரி | |
| பௌர்ணமி பூசை | |
| கார்த்திகை பூசை | |
| பங்குனி உத்திரம் | |

## தீமிதி

தமிழர் வழிபாட்டு முறைகளுள் தீமிதி சிறப்பான இடத்தைப் பெறும். நாட்டுப்புறத் தெய்வக் கோயில்களில் குறிப்பாக அம்மன் கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களின் உச்சகட்ட நிகழ்வாக 'தீமிதி' நடக்கும். விளக்குப் பூசைகள், தீபத்திருநாள், சொக்கப்பனை கொளுத்தி வழிபடுதல், கோயில்களில் யாகம் வளர்த்தல் எனத் தமிழர் சமய வாழ்வில் தீ நீக்கமற நிறைந்திருக்கிறது.

தாய்த் தெய்வங்களான மாரியம்மனுக்கும் திரௌபதியம்மனுக்கும் தீ மிதிப்பதை உலகமெங்கும் தாம் வாழும் நாடுகளில் தமிழ்மக்கள் வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றனர். பிஜித் தீவில் மட்டும் 40 கோயில்களில் தீமிதி நடைபெறுவதாகப் பேராசிரியர் நாகராஜன் குறிப்பிடுகிறார்.[14]

மொரிசியசில் உள்ள பெரும்பாலான மாரியம்மன், காளியம்மன், திரௌபதியம்மன் கோயில்களில் தமிழர்கள் தீமிதிக்கும் நிகழ்வை மேற்கொள்வர். பக்தர்கள் தீமிதிக்கும் நாளுக்குச் சிலநாட்கள் முன்பே விரதம் இருக்கத் தொடங்கிவிடுவர். **'தீமிதி'** விரதம் அறிவிக்க கொடி ஏற்றப்படும். கொடியேற்றத்தைத் தொடர்ந்து பத்து நாட்கள் இரவுதோறும் பாட்டும் பூசையும் நிகழும்.

தீமிதி நாளன்று தமிழர் இல்லங்களில் தமிழ்ப் பண்பாடு தவழ்ந்து மிளிர்வதைக் காணமுடிகிறது. அத்திருநாளில் அந்தந்த ஊரில் வாழும் தமிழர்கள் தம் வீடுகளில் கோலமிட்டுத் தோரணங்கள் தொங்கவிட்டுத் தமிழராடையாகிய வேட்டியும் புடவையும் கட்டித் தமிழ் உணர்வோடு கொண்டாடுவர்.

தீமிதி நாளில் மஞ்சள்நிற ஆடையை உடுத்திக் கொள்வது மரபு. உடல்மீது திருநீறு பூசிக்கொண்டு வேப்பிலைக் கொத்தினை எடுத்துக் கொண்டு கோயிலுக்கு வருவார்கள். அப்போது மாரியம்மன் தாலாட்டைப் பாடி வருவர். இவ்விழாவின் ஒரு பகுதியாக மாரியம்மனுக்குக் கஞ்சி வார்த்தலும் நிகழும். தீமிதி பின்வரும் படிநிலைகளில் நடக்கும்.

1. வேண்டுதல்
2. தீ வளர்த்தல்
3. நீர் நிலையில் பூசை செய்தல்
4. கோயிலுக்கு ஊர்வலமாகச் செல்லுதல்
5. தீ மிதித்தல்

மாரியம்மன் கோயிலில் தீமிதி நடத்துவதற்கான காரணங்கள் ஒவ்வொரு கோயிலுக்கும் மாறுபடும். ஆனால் திரௌபதி அம்மன் கோயிலில் பாரதக் கதையை முன்வைத்தே தீமிதி நிகழும்.

தீமிதித் திருவிழாக்களின் போது சில கோவில்களில் நாதசுர இசைக் குழுவினர்கள் வருகை தந்து இசை விருந்து அளிப்பர். சிலர் பறைக் கருவியும் வாசிப்பதுமுண்டு. தொலைக்காட்சியிலும் வானொலியிலும் சில இசைப் பாடல்கள் இடம்பெறும்.

தமிழர்களுக்கும் மற்ற இனத்தவர்களைப் போல் தனி உணவு வகைகள் உண்டு. விரத நாட்களில் அல்லது திருவிழாக்களின் போது மரக்கறி உணவு சமைக்கின்றனர். பறங்கிக் காய், சாம்பார், ரசம், உருளைக்கிழங்கு, வாழைப் பொறியல், பலாக் கறி ஆகிய மரக்கறி உணவுகள் மிகுதியாகச் சமைக்கப்படும். தமிழர்கள் அந்த உணவுகளை பொதுவாக வாழை இலைகளில் சாப்பிடுகின்றனர்.

பக்தர்கள் திருவிழாக்களின் போது புளிசாதம் செய்து அன்னதானமாகப் படைக்கின்றனர். சில நேரங்களில் திருவிழாக்களின்போது பொங்கலைச் சமைத்துக் கொண்டு வந்து பரிமாறுகின்றனர். பாயசம், அப்பளம், வடை, உருண்டை, பால் கொழுக்கட்டை, அதிரசம், தோப்பம், இட்லி ஆகிய பலகாரங்களும் கோவில்களில் பரிமாறப்படுகின்றன. சிலர் பானகமும் பரிமாறுகின்றனர்.

பாரதப் போரில் பாண்டவர்கள் கவுரவர்களைக் கொன்று முடித்தவுடன் பாஞ்சாலி சபதம் முடிக்கிறாள். இதனால் விளைந்த பாவங்களைப் போக்கிட தீ வளர்த்துப் பாஞ்சாலியும் பஞ்ச பாண்டவர்களும் அதில் இறங்கிப் பரிசுத்தம் அடைகின்றனர். இந்தக் காப்பிய நிகழ்வை வைத்தே தீமிதி நிகழ்வு காலந்தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதற்கான விரதக் காலமாகிய பத்துநாட்களும் அர்ச்சனை நடைபெறும். அதற்கு முன்னும் பின்னும் 'கதைப்படிப்பு' நிகழும். திரௌபதியம்மன் கோயிலில் கதைப் படிப்பில் பாரதம் படிப்பார்கள். பிற கோயில்களில் காத்தவராயன் கதையைப் படிப்பது மரபு.

தீமிதிக்காகத் தீக்குழி வெட்டப்படும். பின் தீக்குழியில் தீ மூட்டி நெருப்புக் கங்குகளை உருவாக்கி அவற்றைக் குழியில் பக்குவமாகப் பரப்புவர். இதற்கெனத் தனிப் பயிற்சியும் அனுபவமும் கொண்டவர்களே இப்பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

 

முதன் முதலில் 1932 ஆம் ஆண்டு தீமிதித் திருவிழா **'போர்ட் லூயிசு'** வில் உள்ள கண்ணனூர் மாரியம்மன் கோவிலில் நடந்தது. இன்று ஆண்டுதோறும் அம்மன் கோயில்கள் அனைத்திலும் தீமிதித் திருவிழா நடந்து வருகிறது.

திசம்பர் 25 (அ) ஜனவரி முதல் தேதி தீமிதித் திருவிழா கொண்டாடப்படுகிறது.

❖ தீமிதித்தல் விரதங்கள் காவடி விரதங்களை விட கடினமானவை.

❖ விரதத்தின் முதல்நாளில் கோவிலில் கொடி ஏற்றம் நடைபெறுகிறது.

❖ பறக்கும் கொடி சேவல் கொடியாகவே இருக்கும்.

பத்து நாட்கள் பூசை நடைபெறும். பூசையின் இடையே பக்தர்கள் மாரியம்மன் தாலாட்டு பாடுவர். மேலும் தப்பு அடித்து, தாளம் போட்டுத் திரௌபதியின் கதையைப் பாடி வணங்குவர்.

இன்று பெரும்பாலான கோவில்களில் மகா பாரதத்தின் கதையை எடுத்துக் கூறும் சடங்கு மறைந்து விட்டது. பூசையில் அனைத்து இன மக்களும் பங்கேற்கின்றனர். சமயம் பற்றி பெரியவர்கள் சிறிது நேரம் சொற்பொழிவு நடத்துவர். அன்னதானம் உண்டு. கோவில்களில் தீமிதித் திருநாளன்று காலையில் அம்மனுக்குக் காவடி தூக்குகின்றனர். 'போர்ட் லூயிசில்' உள்ள மதுரைக் கோவிலில் இக்காவடி நடக்கிறது. காவடிகளில் பாலுக்குப் பதிலாக மஞ்சள் நீரையும் சுமந்து செல்வர்.

அம்மன் ஊர்வலத்தில் சூலம், கரகம், நீளக்கத்தி, அக்கினிச் சட்டி ஆகியவற்றைத் தூக்கிச் சென்றவாறு சிலர் கத்தியின் மீது ஏறி நடனம் ஆடுவர். சிலர் ஆணிச் செருப்பை அணிந்து நடந்து வருவர்.

தீக்குழியில் நடக்கும்முன் அர்ச்சகர் ஆட்டினை வெட்டி பலி கொடுப்பார். இன்று ஆட்டுக்குப் பதில் அர்ச்சகர் எலுமிச்சம் பழத்தை வெட்டுகிறார். முன்பு தீக்குழியில் இறங்குமுன் பெண்கள் படையலிடுவர். அம்மனின் கழுத்தில் தாலியைக் கட்டுவர். ஆனால் இன்று இப்பழக்கம் மறைந்து விட்டது. '32' கத்திகளில் ஏறி தீக்குழியில் இறங்கும் வழக்கமும் இன்று இல்லை.[10]

தீமிதித்தலைப் போன்றே மாரியம்மனுக்குத் 'தீச்சட்டி எடுத்தல்' விழாவையும் பல தலைமுறைகளாக மொரிசியசில் கொண்டாடி வருகின்றனர்.

**காவடி எடுத்தல்**

பல இனமக்கள் வாழும் மொரிசியசில் தமிழரின் தனித்த அடையாளமாகக் காவடித் திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. தைப்பூசத் திருவிழாவிலும் சித்திரைப் பருவத் திருவிழாவிலும் காவடி எடுக்கும் வழக்கத்தை மொரிசியசு தமிழர்கள் பின்பற்றி வருகின்றனர்.

தை மாதத்தில் தைப்பூசத் திருவிழா நிகழும். பத்து நாட்களுக்கு முன்பே செவ்வேளுக்குச் சேவல் கொடி ஏற்றப்படும். தொடர்ந்து ஒவ்வொரு நாள் இரவிலும் பூசை நடைபெறும். சங்கும் மணியும் ஒலிக்க நடைபெறும் இந்தப் பூசை தனித்துவமானது.

தைப்பூசத் திருநாளன்று விரதமிருந்து காவடி எடுத்து வரும் பக்தர்கள் முருகனின் புகழைப் பாடி வருவர். திருப்புகழோ, கந்த சஷ்டி கவசமோ மிகுதியாகப் பாடப்படுவதில்லை. நாட்டுப்புறப் பாடல் மெட்டில் அமைந்த பாடல்களைப் பக்தியுணர்வோடு பாடிச் செல்வர். 'அரோகரா' எனும் முழக்கத்திற்கு நடுவே பக்தர்களின் பாடல்கள் தொடரும். மொரிசியசு தமிழறிஞர் பொன்.திருமலைச்செட்டி இவ்விழாக்களில் பாடுவதற்காகவே "மொரிசியசு முருகன் பாமாலை" என்றும் காவடிக் கண்ணிகளை எழுதி வெளியிட்டுள்ளார்.[15]

தைப்பூசம் வந்ததையா (முருகையா)
தங்கநாளும் எங்களுக்கு

மெய்ப்பூசை நடக்குமையா (முருகையா)

மோரிஸ் தீவில் கோயில் தோறும்

எனத் தொடங்கும் அப்பாடல்

எந்தவழி வந்தாலும்

எந்தவழி பிடித்தாலும்

கந்தன்வழி நம்மையெலாம்

காத்தளிக்கும் நல்லவழி

என நீண்டு

பரபரக்கும் ஞாலத்திலே

பக்திநிலை நாட்டவேண்டும்

பறபறக்கும் மயில்மேலே

பாலகன்முன் வரவேண்டும்.

என நிறைவடைகிறது. அழகான தமிழெடுத்து முருகன் மீது கொண்ட அன்பையெல்லாம் இப்பாடல்களின் வழி அள்ளித் தருகிறார் ஆசிரியர். நூற்றுக்கணக்கான முருக பக்தர்கள் பாற்குடம் சுமந்தும் சிறுவேல்களால் நாக்கு, உடல் பகுதிகளில் குத்திக் கொண்டும் காவடி எடுத்து வருவர். ஆடி, தை, சித்திரை ஆகிய மாதங்களில் தமிழ் மக்கள் காவடி எடுத்து தங்களின் நேர்த்திக்கடன்களைச் செலுத்துகின்றனர்.

தைப்பூசக் காவடித் திருநாள் மொரிசியசுக்குப் பொது விடுமுறைநாள் என்பதிலிருந்து இத்திருநாளுக்கு அவர்கள் தரும் மதிப்பையும் மரியாதையையும் உணர்ந்து கொள்ள முடிகிறது. தைப்பூசக்காவடி **'பெரிய காவடி'** என அழைக்கப்படும்; சித்திரைக் காவடியைச் **'சிறிய காவடி'** என்றும் **'மலைக் காவடி'** என்றும் அழைக்கின்றனர். தைப்பூசக் காவடியைத்தான் தமிழர்கள் மிகச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி வருகின்றனர். பெரும்பாலும் அனைத்துக் கோயில்களிலும் **'பெரிய'** காவடி கொண்டாடப்படுகின்றது. மொரிசியசு தீவின் போக்குவரத்து பாதிக்கும் அளவிற்கு ஊரெங்கும் ஊர்வலம் நடக்கிறது.

கிளெமான்சியா கோவிலில் 1890 ஆம் ஆண்டிலிருந்து தைப்பூசக் காவடி கொண்டாடப்படுகிறது. காத்போன் மலைக் கோவிலில் 1913 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது. லொங் மௌந்தேன் கோவிலில் 1930 ஆம் ஆண்டிலிருந்து தைப்பூசக்காவடி கொண்டாடப்பட்டு வருகின்றது. இக்கோவில்களில் அன்று முதல்

இன்று வரை இத்திருவிழா தமிழர்களின் வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இக்கோவில்களில் பத்து விரத நாட்களில் அன்றாடம் மாலையில் பக்தர்கள் நடைபெற்ற பூசையில் கலந்து கொள்வர். முதல் நாளில் கொடி ஏற்றம் நடைபெறும். மலைக்கோவிலில் ஏற்றப்படும் கொடி சேவல் கொடியாக இருக்கும். ஆனால் கிளெமான்சியா மற்றும் லொங்மௌந்தேன் கோவில்களில் மயில் கொடி ஏற்றப்படுகிறது. அந்தப் பத்து நாட்களில் பயிற்சி பெற்ற பூசாரியோ கோவில் சங்கத்தினர்களுள் தமிழ் மொழியைத் தெரிந்த ஒருவரோ தமிழ் மொழியில் பூசை நடத்துவார்.

அந்தப் பத்து நாட்களில் பக்தர்கள் அன்றாடம் மாலையில் கோவில்களில் நடைபெறுகின்ற சிறப்பு வழிபாட்டில் பெருங்கூட்டமாகக் கலந்து கொள்கின்றனர். இன்று தமிழர்கள் மட்டும் அல்லாமல் வேற்றின மக்களும் பூசையில் கலந்து கொள்கின்றனர். இக்கோவில்களில் இன்று பயிற்சி பெற்ற அர்ச்சகர்கள் பூசை நடத்துகின்றனர். பக்தர்கள் இடையிடையிலே திருப்புகழப் பாடல்களைப் பக்தியோடு பாடுகின்றனர். மேலும் பல்வேறு இசைக்குழுவினரும் பூசையில் கலந்து கொள்கின்றனர். பூசைக்குப் பிறகு கோவில் சங்கத்தினர்கள் அல்லது ஓரிரு குடும்பங்கள் பக்தர்களுக்கு அன்னதானம் அளிக்கின்றனர்.

'சிறிய காவடி' காத்துபோன் என்னும் ஊரில் உள்ள மலைக் கோயிலில் கொண்டாடப்படுகிறது. 'கிலே மான்சியா' என்னும் ஊரிலும் இது நெடுங்காலமாய்க் கொண்டாடப்பட்டு வருகிறது. காத்துபோன் மலைக்கோயில் முருகப் பெருமானுக்கு ஒரு படைவீடாகக் கருதப்பட்டு வருகிறது. [16]

'மச்ச காவடி' என்னும் காவடி விழா "செயிண்ட் ஹுபர்ட்" (Saint Hubert) என்னும் ஊரில் உள்ள மகாலட்சுமி கோயிலில் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒரு பழங்கதை இதன் பின்னணியில் உள்ளது.

கோவிலுக்கு முன் காணப்படும் குளத்தில் அர்ச்சகர் ஒரு மீனை இட்டு பத்து நாட்களாகப் பூசை நடத்தினாராம். காவடித் திருநாளன்று அவர் அந்த மீனை இரண்டு துண்டுகளாக வெட்டி அவற்றை ஒரு செம்பில் போட்டு செம்பினைத் தூக்கி ஆற்றிலிருந்து ஊர்வலமாகக் கோவிலுக்குச் சென்றனராம். கோவிலை அடையும்போது இவ்விரண்டு துண்டு மீன்களும் இணைந்து ஒரே மீனாக மாறி விட்டதாம்!. ஒவ்வொரு

கோவிலின் பின்னணியிலும் இது போன்ற கதைகள் வழங்குவதைத் தமிழ்நாட்டுக் கோவில்களிலும் காணலாம்.

அசைவ உணவு உண்ணாமல் இல்லற இன்பத்தில் ஈடுபடாமல் வெளியே விற்கும் உணவுப் பொருள்களையும் சாப்பிடாமல் புகையும் கள்ளும் உட்கொள்ளாமல் தூய எண்ணங்களுடன் தூயச் செயல்களில் ஈடுபட்டு விரதம் இருப்பர். பக்தர்கள் சிலர் காலையில் எழுந்தவுடனே தூய்மையான ஆடைகளை அணிந்து விளக்கை ஏற்றிக் கடவுளை வணங்குவர். ஒரு சிலர் நாள் முழுவதும் எதுவும் சாப்பிடாமல் மாலையில் கோவிலில் பூசை முடிந்த பிறகுதான் வீட்டுக்குத் திரும்பிச் சாப்பிடுவர்.

பயிற்சி பெற்ற அர்ச்சகர்கள் இல்லாத சூழலில் தமிழ் தெரிந்த சிலர் பூசை நடத்துவர். அன்று பூசை நடத்தியவரைப் பூசாரி என அழைப்பர்.

விரத நாட்களில் மாலை நேரத்தில் பெண்கள் பாவாடைகளையும், பெண்மணிகள் புடவைகளையும் ஆண்கள் வேட்டிகளையும் அணிந்து செருப்பு இல்லாமல் கோவிலுக்கு நடந்து செல்வர். தேங்காய், கற்பூரம், ஊதுவத்தி, பாக்கு, பழங்கள், பூமாலை கொண்டு செல்வர்.

விரதத்தின் முதல் நாளில் கோவிலில் கொடி ஏற்றம் நடைபெறும். அன்றுமுதல் பத்து நாட்களுக்கு பக்தர்கள் பொங்கலைச் சமைத்துக் கொண்டு போய் முருகக் கடவுளுக்குப் படைத்து, பூசைக்குப் பிறகு பக்தர்களுக்குப் பரிமாறுவார்கள்.

பூசாரி பூசை செய்யும்போது இடையிடையே பக்தர்கள் தாளம் போட்டு திருப்புகழ், முருகன் பாமாலை, அவினாசிப்பத்து போன்ற பக்திப் பாடல்களைப் பாடுவார்கள்.

இரவில் பூசைக்குப் பிறகு வீட்டுக்குப் போகும்போது காவடியை (அ) பாற்குடத்தைத் தூக்க இருப்பவர்கள் வாழையிலையில் உணவை வைத்து **'சாம்பிராணி'** போட்டபிறகுதான் சாப்பிடுவர். அதன் பிறகுதான் மற்றவர்கள் சாப்பிடுவது வழக்கம்.

இப்போது பக்தர்கள் கடினமான விரத முறையைப் பின்பற்றுவதில்லை. பெரும்பாலோர் பாயின் மீது தூங்குவதில்லை. சிலர் வெளி உணவுகளையும் வாங்கிச் சாப்பிடுகின்றனர். இன்று அசைவ உணவு மட்டும் சாப்பிடாமல் இருப்பது விரதம் என மாறிவிட்டது.

காவடிக்கு முந்தைய நாளில் இரவு முழுக்க வானொலியில் முருகன் பாடல் ஒலிபரப்பாகும். இதைக் கேட்டவாறு உறவினர்களும் நண்பர்களும் காவடியைக் கட்டுவர். மூங்கில், வாழைப்பட்டை, தென்னங்குருத்து, பூக்கள், வண்ணத்துணிகளின் துண்டுகள் கொண்டு காவடியை அமைப்பர்.

ஊர்வலத்தின் முன் பகுதியில் முருகனின் தேர் வரும். பின்னால் பெண்கள் கோலாட்டம் ஆடி வருவர். தப்பு இசைக்கப்பட்டு வரும். காவடியைத் தூக்குபவர்கள் தெருவில் வியாதியுள்ள குழந்தைகளைத் தாண்டி வருவர். அதனால் நோய் குணமாகும் என நம்புகின்றனர்.

மூன்று முறை கோவிலை வலம்வந்து உள்ளே செல்வர். முன்பு சாதி வேறுபாடு இருந்த போது உயர்ந்த சாதியைச் சார்ந்த பக்தர்கள் மட்டும் தங்கள் காவடிகளை உள்ளே கொண்டுபோய் பாலை அபிடேகமாக முருகன் மீது ஊற்றினார்கள். தாழ்ந்தப்பட்ட சாதியைச் சார்ந்த பக்தர்கள் தங்கள் காவடிகளைக் கோயிலுக்குள் கொண்டு போக உரிமை இருக்கவில்லை. அவர்களுடைய பாலை முருகனின் திருவடியில் அபிசேகமாகப் பூசாரியே ஊற்றுவார். ஆனால் இன்று சாதிப்பிரிவு மறைந்துவிட்டது.

இன்று இளைஞர்கள் உடம்பெல்லாம் அலகு குத்திக் கொள்கின்றனர். தப்புக்குப் பதிலாக பல்வேறு இசைக் கருவிகள் இசைக்கப்படுகின்றன. வழிகளில் பக்தர்களுக்கு பானகமும் பழங்களும் வழங்கி கால்களில் மஞ்சள் நீரையும் ஊற்றுகின்றனர்.

தமிழர்கள் அம்மனை மாரியம்மன், காளியம்மன், திரௌபதை அம்மன், சீதாளம்மன் முதலிய வடிவங்களில் வணங்குகின்றனர். மொரிசியசில் அம்மனை வணங்காத தமிழ் ஊரே கிடையாது என்று சொல்லும் அளவுக்கு அம்மன் வழிபாடு தமிழர்களின் வாழ்க்கையில் ஒன்றிவிட்டது.

நூலாசிரியர் கள ஆய்வுக்காக மொரிசியசு சென்றபோது “பெல்வீ மோரேல்” எனும் ஊரில் பாலசுப்பிரமணியர் கோவிலில் நடைபெற்ற காவடித் திருவிழாக் காட்சிகளைப் பின்வரும் படங்கள் பதிவு செய்துள்ளன. இக்கோயிலின் முன்பகுதியில் ஒரு நெல்லி மரத்தடியில் ஔவையார் சிலை அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இச்சிலை ஔவை அதியமானுக்குத் தந்த நெல்லிக்கனியை நினைவுபடுத்தித் தமிழ்ப் பண்பாட்டைப் பறைசாற்றி வருகிறது.















**சித்திரைக் காவடித் திருவிழா**

மலைக்கோவில் சித்திரைக் காவடியை ஒட்டி பக்தர்கள் பத்து நாட்கள் விரதம் இருப்பர். கொடி ஏற்றப்படும் முதல் நாளிலிருந்து பக்தர்கள் விரதம் மேற்கொண்டனர்.

அந்தப் பத்து விரத நாட்களில் அன்றாடம் மாலை நேரத்தில் நடைபெற்ற பூசையில் பக்தர்கள் கலந்து கொள்வர். விரதத்தின் முதல் நாளில் சேவல் கொடி ஏற்றப்படும். பக்தர்கள் தங்கள் வசதிகளுக்கேற்ப பூக்கள், பூமாலை, பழங்கள் கொண்டு வருவர். அக்காலத்தில் ஐயா திப்தி என்பவரின் தலைமையில் ஒரு பஜனைக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் கற்றுக் கொண்ட திருப்புகழ், அவினாசிப்பத்து முதலிய பாடல்களைப் பூசாரி பூசை செய்யும் போது பக்தர்கள் பாடுவார்கள். பூசைக்குப் பிறகு பக்தர்கள் சமைத்துக் கொண்டு வந்த பொங்கலைக் கோவிலுக்கு வந்த அனைவருக்கும் பரிமாறுவார்கள். காவடிக்கு முதல் நாளன்று, கோவிலில் திருவிழாவிற்குரிய பல்வேறு ஏற்பாடுகளைச் செய்வர். கோவிலிலும் கோவிலுக்குச் செல்லும் தெருக்களிலும் தென்னங்குருத்து மற்றும் மாவிலைத் தோரணங்களைக் கட்டி அலங்கரிப்பர்.

காவடித் திருநாளன்று அதிகாலையில் காவடி மற்றும் பால்குடத்தைத் தூக்கிக்கொண்டு பால் அபிசேகத்துக்காகப் பால், நெய், தேன் முதலிய பொருட்களை எடுத்துக் கொண்டு கோவிலுக்குச் செல்வர். அங்கே பணியாற்றி வரும் பூசாரி முருகனுக்கு அபிடேகம் செய்வார். பிறகு பக்தர்கள் கோவிலுக்குப் பக்கத்தில் ஓடும் ஆற்றுக்குச் சென்று குளித்து காவி ஆடைகளை அணிவர். அவர்கள் காவடி மற்றும் பால்குடத்துக்கு முன் வாழைப்பழம் கற்பூரம், ஊதுவத்தி, இளநீர், எலுமிச்சம் போன்ற பொருள்களை வைத்து வழிபாடு செய்வர். அப்பூசை நடத்திய பிறகு கோவில் சங்கத்தினர் தருகின்ற பசும்பாலைச் செம்புகளில் ஊற்றுவார்கள். அதன் பிறகு பக்தர்கள் நாக்கினை அலகுகளால் குத்திக் கொள்வர். பக்தர்கள் சிலர் காவி நிறத் துண்டைக்கொண்டு வாயைப் பூட்டிக்கொள்வார்கள்.

எல்லாச் சடங்குகளையும் முடித்துக்கொண்டு பக்தர்கள் ஊர்வலமாகக் கோவிலுக்குச் செல்வர். ஊர்வலத்தில் முருகன் சிலையைத் தேரில் அமர்த்தி அதனை நான்கு பேர் தூக்கிச் செல்வர். அதற்குப் பின்னால், சிறுமிகளும் சிறுவர்களும் கோலாட்டம் அடிப்பார்கள். மேள இசையும் வாசிக்கப்படும். காவடி மற்றும் பால்குடங்கள் தூக்கியவர்களும் பின் தொடர்ந்து செல்வர்.

தொடக்கத்தில் மொரிசியசு தீவில் மலைக்கோவிலில் மட்டும் சித்திரைக் காவடி கொண்டாடப்பட்டது. அதனால் நாட்டில் நான்கு திசைகளிலிருந்தும் பக்தர்கள் அங்கு வந்து கூடுவார்கள். வழியில் பக்தர்களுக்குப் பானகம் வழங்கப்படும். கோவிலை அடைந்தவுடனே பக்தர்கள் கொண்டு வந்த பாலை முருகனுக்கு அபிசேகம் செய்வர். மறுநாள் கொடி இறக்கம் நடைபெறும். இக்கோவிலில் இடும்பனுக்குச் சிலை இல்லாததால் ஒரு கல்லை வைத்துப் பூசை நடத்துவார் பூசாரி.

காவடிக்கு முதல் நாள் அன்று, காவடித் தூக்கியவர்களும் அவர்கள் உறவினர்களும் மற்றும் நண்பர்களும் கோவிலுக்கு வந்து காவடியைக் கட்டுவர். காவடியைக் கட்டும்போது அவர்கள் வாயிலிருந்து எச்சில் வெளியே வராதபடி வாயை ஒரு துண்டுத் துணியால் பூட்டிக்கொள்வார்கள். மூங்கில், தென்னங்குருத்துக்கள், வாழைப்பட்டை இவற்றினைக் கொண்டு காவடியைக் கட்டுவர்.

காவடித் திருநாளன்று பக்தர்கள் சுரினாம் (Surinam) ஆற்றுக்குப் போய் ஒன்று கூடுவர். காவடி மற்றும் பால்குடம் தூக்குகின்ற பக்தர்கள் ஆற்றில் குளித்து, காவி ஆடைகளை அணிந்து ஊர்வலமாகக் கோவிலுக்குச் செல்வர்.

கோவிலை அடைந்தவுடனே கோவிலை வலம் வந்த பிறகு கொண்டு வந்த அந்தப் பால் செம்புகளைப் பூசாரிக்குக் கொடுப்பர். பூசாரி அந்தப் பாலை முருகனுக்குப் பதிலாக வேல் மீது ஊற்றுவார். ஏனென்றால் அக்காலத்தில் முருகன் சிலை சுண்ணத்தால் அமைக்கப்பட்டது. பூசைக்குப் பிறகு கோவில் சங்கத்தினர் வருகை தந்துள்ள பக்தர்களுக்கு அறுசுவை உணவை அன்னதானமாக அளிப்பர்.

சிவ சுப்பிரமணியக் கோவிலிலும் “லொங் மௌந்தேன்” (Long Mountain) கோவிலிலும் சித்திரைக் காவடித் திருவிழாவினை ஒட்டி பத்து நாட்கள் விரதம் மேற்கொள்வர். இங்கு சித்திரைக் காவடிக்குக் கொடி ஏற்றம் நடைபெறுவதில்லை. பத்து நாட்களில் பக்தர்கள் பொங்கலைச் சமைத்து கோவிலுக்குக் கொண்டு போய் முருகக் கடவுளுக்குப் படைப்பர். பூசைக்குப் பிறகு பக்தர்களுக்கு அதனைப் பரிமாறுவார்கள். பூசாரி பூசை செய்யும் போது பக்தர்கள் இடைமிடையிலே தாளம் போட்டு திருப்புகழ், முருகன் பாமாலை, அவினாசிப் பத்து போன்ற பக்திப் பாடல்களைப் பாடுவார்கள்.

**பங்குனி உத்திரக் காவடி**

மொரிசியசில் தமிழர்கள் கொண்டாடப்படும் காவடித் திருவிழாக்களுள் பங்குனி உத்திரக்காவடி ஒன்றாகும். கொண்டாடப்படும். முருகன் கோவில்களுள் மலைக்கோவிலில் மட்டும் பங்குனி மாதத்தில் இக்காவடி கொண்டாடப் படுகிறது.

இக்கோவிலில் பத்து ஆண்டுகளுக்கு முன்பிருந்துதான் இக்காவடியைக் கொண்டாடி வருகின்றனர்.

இக்காவடி தைப்பூசக்காவடி கொண்டாடும் முறையில் தான் கொண்டாடப்படுகிறது. ஆனால் இக்காவடிக்குக் கொடி ஏற்றம் நடைபெறுவதில்லை. மூன்று நாட்களில் மட்டும் சிறப்பு பூசை நடைபெறுகிறது. காவடித் திருநாளன்று பக்தர்கள் வீட்டிலேயே குளிக்கின்றனர். பிறகு கோவில் வளாகத்தில் கூடி எல்லாச் சடங்குகளையும் முடிந்த பிறகு காவடியைத் தூக்கி மலைக்கோவிலை நோக்கிச் செல்கின்றனர்.

**கோவிந்தன் திருவிழா**

திருமாலுக்குக் கொண்டாடப்படும் திருவிழாக்களுள் கோவிந்தன் திருவிழா ஒன்றாகும். இத்திருவிழா புரட்டாசி மாதத்தில் நான்கு அல்லது ஐந்து சனிக்கிழமைகளில் கோவில்களில் கொண்டாடப்படுகிறது. மொரிசியசு தமிழர்களுள் சிலர் மட்டும் முழு மாதமும் விரதம் இருப்பர். பிறர் வெள்ளிக் கிழமைகளில் மற்றும் சனிக்கிழமையில் மட்டும் விரதம் இருப்பர்.

மொரிசியசில் சவான் மாவட்டத்தில் காணப்படும் கயாக் சிவசுப்பிரமணி திருக்கோவிலில்தான் முதன் முதலாக கோவிந்தன் திருவிழா கொண்டாடப்பட்டது. இவ்விழா புரட்டாசி மாதத்தில் முதல் சனிக்கிழமையில் ஐந்தரை மணி முதல் மறுநாள் காலை ஆறுமணி வரை கொண்டாடப்படுகிறது. கோவிந்தன் திருவிழாவினை ஒட்டி கோவில் சங்கத்தில் உள்ள இளைஞர்களும் பெரியவர்களும் கோவிலைச் சுத்தம் செய்து கோவிலுக்குச் செல்லும் தெருக்களையும் தோரணங்களால் அலங்கப்பர். இத்திருநாளில் ஊரில் உள்ள பக்தர்களும் பக்கத்து ஊரில் வசித்த பக்தர்களும் அர்ச்சனைப் பொருள்களைக் கொண்டு திருமாலுக்குப் படைத்து வணங்குவர்.

இக்கோவிலில் அர்ச்சகர் நான்கு நேரங்களில் பூசை நடத்துவார். மாலையில் ஆறு மணிக்குப் பூசை தொடங்கும். இரவு ஒன்பது மணிக்கு இரண்டாவது பூசை நடைபெறும். இரவு பன்னிரண்டு மணிக்கு மூன்றாவது பூசை நடைபெறும். காலையில் நான்கு மணிக்கு நான்காவது பூசை இடம் பெறும். அந்தப் பூசைக்கு இடையில் கோவிலிலுள்ள பஜனைக் கூட்டத்தினர்கள் சில திருமாலுக்குரிய பாடல்களைப் பாடுவர். அந்நேரத்தில் பெண்மணிகளும் சிறுமியர்களும் கம்பசேவையைச் சுற்றிக் கும்மி அடிப்பர். இரவு முழுதும் கோவில் சங்கத்தினர் சுடச்சுட தேநீரும் பலகாரங்களும்

பக்தர்களுக்கு அளிப்பர். மறுநாள் காலை வரை பக்தர்கள் பூசையில் கலந்து கொள்வர். மறுநாள் கம்பசேவையை அணைப்பதற்கு அவர்கள் கடற்கரைக்குச் செல்வர்

1982 ஆம் ஆண்டிலிருந்து மலைக்கோவிலில் கோவிந்தன் திருவிழாவைக் கொண்டாடி வருகின்றனர். 'தமிழர் சிவசுப்பிரமணிய பரோகாரச் சங்கம்' கோவிந்தன் திருவிழாவைச் சிறந்த முறையில் கொண்டாட உதவி செய்கின்றது. கோவில் சங்கத்து இளைய உறுப்பினர்கள் சில நாட்களுக்கு முன்பே மலைக்கோயிலின் வளாகத்தில் பெரிய பந்தல் ஒன்றினை எழுப்பி அதனை அலங்கரிப்பர்.

இத்திருநாளில் மாலையில் பக்தர்கள் அர்ச்சனை பொருள்களைக் கொண்டு வந்து திருமாலுக்குப் படைத்து வணங்குவார்கள். அர்ச்சகர் நான்கு நேரங்களில் கோவிந்தன் பூசை நடத்துவார். பக்தர்கள் திருமாலுக்குரிய பாடல்களைப் பாடுவர். மறுநாள் காலையில் பக்தர்கள் ஆற்றுக்குப் போய் கம்பசேவையை அணைப்பர்.

"லொங் மௌந்தேன்" சிவ சுப்பிரமணியர் கோவிலில் 1980 ஆம் ஆண்டு முதல் கோவிந்தன் திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்திருவிழா நாளன்று காலையில் பெண்மணிகள் கோவிலில் ஒன்று கூடி அன்னதானம் தயாரிப்பார்கள். இரவு முழுவதும் நான்கு நேரங்களில் பூசை நடைபெறும். மறுநாள் காலையில் ஏறக்குறைய ஐந்து மணிக்கு பக்தர்கள் விளக்கை அணைப்பதற்கு விக்டோரியா ஊரில் உள்ள 'பாண்ட் லாரெய்ன்' ஆற்றுக்குச் செல்வர்.

பால தண்டாயுதபாணி திருக்கோவிலிலும் கிளெமான்சியாவிலும் மேற்சொல்லப்பட்ட மூன்று கோவில்களைப் போலவே கோவிந்தன் திருவிழா கொண்டாடப்படுகிறது.

**கஞ்சி வார்த்தல்**

அம்மன் வழிபாட்டு முறைகளில் கஞ்சி வார்த்தல் முக்கியமானது. கஞ்சி வார்த்தல் என்பது கஞ்சியைத் தயாரித்து அதை அம்மனுக்குப் படையலாக வைத்து வணங்குவது ஆகும். தொடக்கத்தில் தமிழர்கள் இப்பூசையை வீட்டில்தான் செய்தனர். வீட்டில் எந்த ஒரு மங்கலகரமான காரியம் நிகழ்ந்தாலும் அல்லது குழந்தைகளுக்கு அம்மை நோய் வந்தாலும் மாரியம்மனுக்குக் கஞ்சி படைத்தல் வழக்கமாகும். காலப் போக்கில் கோவில் சங்கத்தினர் கோவில்களிலும் கஞ்சி வார்த்தல் பூசையை நடத்தத் தொடங்கினர்.

தொடக்க காலத்தில் சுயாக் சிவசுப்பிரமணியர் கோவில் சங்கத்தைச் சேர்ந்த மூன்று பெண்மணிகள் மஞ்சள் நிறமான புடவையைக் கட்டி, அரிசி பெறுவதற்கு வீடு வீடாகச் சென்றனர். இன்று இப்பழக்கம் மறைந்துவிட்டது. கஞ்சி வார்த்தல் திருநாளன்று பக்தர்கள் காலையில் கோவிலுக்குச் சென்று அங்கேயே கஞ்சியையும் துவையலையும் முருங்கைக் கீரையையும் சமைத்து அம்மனுக்குப் படையலாக வைப்பர்.

மந்திரங்கள் தெரிந்த ஒருவர் அம்மனுக்குப் பூசை நடத்தும்போது பக்தர்கள் சிலர் மாரியம்மன் தாலாட்டைப் பாடுவர். சிலர் 'ஓம் சக்தி' 'ஓம்சக்தி' என்று வாய்விட்டுச் சொல்வர். பூசைக்குப் பிறகு இரண்டு விதவைகள் கஞ்சி சாப்பிடுவார்கள். அதற்குப் பிறகு அனைவருக்கும் கஞ்சி அன்னதானமாக அளிக்கப்படும். இக்கோவிலில் கஞ்சி வார்த்தல் ஆகஸ்ட்டு மாதத்தில் ஏழாம் தேதி அன்று கொண்டாடப்படுகிறது. கிளெமான்சியா பால தண்டாயுதபாணி கோவிலில் தீமிதி கொண்டாடும் நாளிலேயே கஞ்சி வார்த்தல் நடைபெறுகிறது. இக்கோவிலில் தீமிதி நல்ல முறையில் நடந்துவிட்ட பிறகு கோவில் சங்கத்தினர் அம்மனுக்கு நன்றி செலுத்தும் வகையில் கஞ்சி ஊற்றுவார்கள்.

தமிழர்கள் மட்டும் அல்லாமல் வேற்றின மக்களும் இப்பூசையில் கலந்து கொள்கின்றனர். பயிற்சி பெற்ற அர்ச்சகர் பூசை செய்கின்றார். பஜனைக் கூட்டத்தினர் அம்மனுக்குரிய பாடல்களைப் பாடுகின்றனர். சுயாக் கோவிலில் பூசைக்குப் பிறகு ஐந்நூறு பக்தர்களுக்குக் கஞ்சி அன்னதானமாக அளிக்கப்படும். கிளெமான்சியா கோவிலில் ஈராயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கஞ்சியைச் சாப்பிடுகின்றனர்.

**தமிழர் திருநாள்**

உழைக்கும் தமிழ் மக்களுக்கு உற்சாகம் தரும் நாள் தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளாகும். தமிழ்நாட்டில் நெல் விளைவது போல் மொரிசியசு நாட்டில் கரும்பு விளைகிறது. காடுகள் திருத்திக் கழனியாக்கித் தோட்டங்களை அமைத்து மொரிசியசு தீவை வளப்படுத்தியவர்கள் தமிழர்கள். உழைக்கும் மக்களின் நாளாக விளங்கி வரும் பொங்கல் நன்னாளை மிக ஈடுபாட்டோடு மொரிசியசு தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர்.

உலகெங்கிலும் அறுவடை விழாவாகக் கொண்டாடப்பெறும் நிகழ்ச்சியே தமிழரிடையே பொங்கல்விழாவாக நிகழ்கின்றது. சாதி, மதம், இனம் ஆகிய பல பிரிவுகள் நிலைத்து விட்ட நிலையிலும் காலநிலை மாறி, உழவுத் தொழிலும் காலத்தில்

நிகழாமல் பின்னடைவு பட்டுவிட்ட நிலையிலும் தைத்திங்கள் முதல்நாளில் பொங்கல் விழாக் கொண்டாடுவதிலிருந்து தமிழர்கள் நீங்கவில்லை.

ஆடிப்பட்டத்தில் தேடிவிதைத்து உழைத்து உணவுப்பொருள்களைத் திரட்டிய மக்கள் உத்தராயணம் தொடக்கமுறும் தைத்திங்கள் முதல் நாளன்று நன்றியுணர்வுடன் மழைக்கும் வேளாண்மைப் பெருக்கத்திற்கும் காரணமான சூரியனை வழிபடுகின்றனர்.

மார்கழி இறுதி நாள் முதல் தை மாத முதல் மூன்று நாள்கள் முடிய இவ்விழா பெரும்பாலும் நிகழ்கின்றது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. அதற்கேற்ப, 'புது வாழ்வு பூத்தது' என்னும் பொலிவு இந்நாளில் எல்லோருடைய உள்ளத்திலும் நிறைந்திருக்கின்றது.

தைத்திங்கள் முதல் நாள் 'பொங்கல்' அதாவது ஞாயிறு வழிபாட்டுத் திருநாள் ஆகும். ஞாயிற்று வணக்கம் என்பதால் வேய்ந்த கூரைக்கீழின்றி வெளியிடத்தில் புதுப்பானை வைத்துப் புத்தரிசி கொண்டு பொங்கலிட்டு மஞ்சள், கரும்பு, வாழை போன்ற விளைபொருள்களைக் கொண்டு வணங்குவதே இன்றும் பெருவழக்காக உள்ளது.

பெரும்பானை வைத்துப் பொங்கலிடும் வழக்கத்தால் பெரும்பொங்கல் என்றும் இது பெயர் பெறும். பொங்கல் பானை உடைவது போன்ற இடையூறுகளைத் தவிர்க்கவும் செல்வப் பெருக்கைக் காட்டவும் இன்று பித்தளை முதலான உலோகப் பாத்திரங்கள் புகுத்தப்பட்டுவிட்டாலும் மண்பானையில் கோலமிட்டு மஞ்சள் கொத்துக் கட்டிச் செய்யும் வழக்கம் மறைந்து விடவில்லை. நீரும் பாலுமாக ஊற்றப்பெற்ற உலைநீர் பொங்கிவரும்போது 'பொங்கலோ பொங்கல்' என மக்கள் மனம் மகிழ்ந்து வாழ்த்தும் ஒலியை மொரிசியசிலும் கேட்கமுடிகிறது.

சூரியன் பொங்கல் என்பதால் சூரியன் தோன்றும் முன்னமே விடியலில் பொங்கல் வைத்துச் சூரியன் எழும்பொழுது படைத்து வழிபடும் வழக்கமே உள்ளது. மாறாக, தைமாதம் பிறக்கும் சரியான காலத்தைக் கணித்து அதற்கேற்ப நண்பகலிலும் பிற்பகலிலும் கூடப் பொங்கலிடுவதுண்டு. இச்சடங்குமுறைகள் அனைத்தும் தமிழ்நாட்டை முழுமையாகப் பின்பற்றிச் செய்யப்படுகின்றன.

**தீபத் திருநாள்**

தமிழர்களின் பழமையான திருவிழாக்களுள் ஒன்று கார்த்திகைத் தீபத் திருவிழா. இத்திருநாளில் வீடுகளிலும் கோயில்களிலும் வரிசை வரிசையாய்

விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்வர். புலம்பெயர்ந்து தூர நாடுகளில் வாழ்ந்தாலும் தமிழர்கள் தீபம் என்றவுடன் திருவண்ணாமலையை நினைத்துப் போற்றி வணங்கி வருகின்றனர்.

**தீபாவளி**

தீபாவளியை மொரிசியசு தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். மொரிசியசில் வாழும் வட இந்தியர்களுக்கு தீபாவளி முக்கியமான திருவிழாவாகும். விடியற்காலையில் விழித்தெழுந்து எண்ணெய் தேய்த்து நீராடி அனைவரும் புத்தாடை அணிவர். பின் இறைவனை வணங்கிட கோயிலுக்குச் செல்வர். இளையவர்கள் பட்டாசு வெடித்து மகிழ்வர். அதிரசம், முறுக்கு போன்ற பலகாரங்களைச் செய்து உண்டு மகிழ்வர். கார்த்திகைத் தீபத் திருவிழாவே பின்னர் தீபாவளியாக மாறியது என்று கருத்தும் நிலவுகிறது.

தீபாவளி சைவ, வைணவ வேறுபாடின்றி இந்து மக்கள் அனைவரும் கொண்டாடும் பண்டிகையாகும். சமணர்கள் இதனைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். தீபாவளி என்பது தீபங்களின் வரிசை எனப்படும். பண்டிகையின் போது தீப வரிசைகளும், மத்தாப்பூ முதலியனவும் இடம் பெறுவதால் இது ஒளித்திருநாள் என்று கூறும் சிறப்புடையது. பொதுவாக இந்து சமயப் பண்டிகைகள் நிறைமதி நாளை ஒட்டி அமையும் ; தீபாவளி அமாவாசை நாளை ஒட்டி அமையும். ஆண்டுதோறும் ஐப்பசித் திங்கள் இது கொண்டாடப்படும்.

புது மண மக்களுக்கு முதலில் வரும் தீபாவளி சிறப்பானதொரு விழாவாகும். இதனைத் தலைத்தீபாவளி என்று குறிப்பர். புத்தாடைகள் அணிந்தவர்கள் தம் வீட்டில் உள்ள பெரியோர்களை வணங்கிப் பரிசுப் பொருள்களும், வாழ்த்தும் பெறுவர். பரிசுப்பொருள்கள், காசு, பணமாகவே இருக்கும். இதனைத் தீபாவளிக் காசு என்பர். இறப்பு போன்ற துக்கம் நிகழ்ந்த வீட்டினர் ஓராண்டு கழியும் வரை இதுபோன்ற பண்டிகைகளைக் கொண்டாட மாட்டார்கள்.

**ஆடிப்பதினெட்டாம் பெருக்கு**

மொரிசியசு நாட்டிலும் ஆண்டுதோறும் ஆடிப்பதினெட்டாம் பெருக்கு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம். அந்நாளில் பெண்கள் வழிபாடு செய்து ஆற்றங்கரையில் தம் தாலிக் கயிற்றைப் புதுப்பிக்கின்றனர். ஆடிப் பதினெட்டாம் பெருக்கு விழாவை ஒட்டித் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் சிறந்த நிகழ்ச்சிகள் வழங்கப்படுகின்றன. தமிழ்ப் பெண்மணிகளின் வாழ்வில் ஆடிப் பதினெட்டாம் பெருக்கு

விழா தனிச் சிறப்பு வாய்ந்த ஓர் இடம் வகிக்கின்றது. இன்றுவரை அவர்கள் தங்கள் பண்பாட்டை மறக்காமல் காத்து வருகின்றனர் என்பதை இவ்விழா வெளிப்படுத்துகின்றது.

### தமிழ் மகளிரும் சமயமும்

மொரிசியசில் திருவிழாக்களின்போது ஆண்களும் மகளிரும் ஆலயங்களில் பல்வேறான பணிகளில் ஈடுபடுகின்றனர். அதில் மகளிர் மிக அதிக ஆர்வம் காட்டுகின்றனர். வெள்ளிக்கிழமைதோறும் கோவிலில் பூசை இருக்கும்போது ஆண்களைவிட மகளிர் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதைக் காணலாம். மகளிருடைய வாழ்வில் வழிபாடு சிறந்ததொரு இடம் பெறுகின்றது. கஞ்சி வார்த்தல், பௌர்ணமி, கார்த்திகை தீபம், சரசுவதி பூசை போன்ற வழிபாடுகளிலும் காவடி, கோவிந்தன் ஆகிய திருவிழாக்களிலும் மகளிர் அதிகமாகக் கலந்து கொள்வதைப் பார்க்கலாம். நாள்தோறும் காலையில் சூரிய வணக்கம் செய்வது தமிழ்ப் பெண்மணிகளுடைய பழக்கம். மகளிர் தம் பிள்ளைகளுக்கு வழிபாடு கற்பிப்பதைக் தம் கடமையாகச் செய்கின்றனர்.

மொரிசியசு மகளிர் வாழ்க்கையில் சடங்குகளும் பெரும் இடம் வகிக்கின்றன. மொரிசியசில் ஒரு தமிழ்ப் பண்பாட்டு விழா நடத்தப்படும்போது அவ்விழாவில் மகளிர் மூவர் விளக்கு ஏற்றுவர். மேலும், மகளிர் வாசலில் நின்று தாம்பாளத்தட்டைக் கையில் தாங்கி வரவேற்பதையும் காணலாம். விழாவுக்கு வருபவர்களின் மீது பன்னீர் தெளித்துத், திருநீறு இட்டு, அவர்களை வரவேற்பது மகளிர் புரிகின்ற முக்கியப் பணியாகும். மஞ்சள் நீராட்டும் விழாவில் பூப்படையும் பெண்ணின் அத்தை முதன்முதலில் பெண்ணுடைய முகத்தில் மஞ்சள் பூசி, அவளுடைய நெற்றியில் குங்குமம் இட்டு, தலையில் பூக்களைச் சூடுவது மரபு. இவ்வாறு வழிபாட்டு மரபிலும் வாழ்வியல் மரபிலும் பண்பாட்டை நிலைநிறுத்தும் சக்தியாகப் பெண்கள் இருந்து வருகின்றனர்.

### மொரிசியசு தமிழ்க்கோயில்கள் கூட்டிணைப்பு

மொரிசியசு நாட்டிலுள்ள தமிழ்க்கோயில்கள் அனைத்தும் மொரிசியசு தமிழ்க் கோயில்கள் கூட்டிணைப்பு என்னும் இழையில் பின்னிக் கட்டப்பட்டுள்ளன. தமிழ்க் கோயில்களை ஒன்றிணைக்கும் இக்கூட்டிணைப்பு, 1957-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. சமயம் சார்ந்ததாக மட்டுமின்றி, சமுதாய, பண்பாட்டு அமைப்பாகவும் தமிழ்க் கோயில்கள் கூட்டிணைப்பு செயல்பட்டு வருகிறது.

மொரிசியசில் உள்ள 106 தமிழ்க் கோயில்கள் இக் கூட்டிணைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்க் கோயில்கள் குறித்த அனைத்துத் தொடர்புகளையும், அரசாங்கம் தமிழ்க் கோயில்கள் கூட்டிணைப்பின் மூலமாகவே மேற்கொண்டு வருகிறது.

இக்கூட்டிணைப்பின் தலைமை அலுவலகம் எதிரே உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவப் பெருந்தகையின் மிகப்பெரிய சிலை அமைக்கப்பட்டுள்ளது. இது தமிழ்மொழியின் தமிழ் இலக்கியத்தின் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளச் சின்னமாகப் போற்றப்பட்டு வருகிறது.








மொரிசியசு தமிழ்க் கோயில்கள் கூட்டிணைப்பு 2006 ஆம் ஆண்டில் தமிழ்ப் புத்தாண்டு விழாவை ஒட்டி ஒரு மாபெரும் கலைநிகழ்ச்சியைப் பிளாசா நாடக அரங்கத்துக்கு முன்னால் சீரும் சிறப்புமாக நடத்தியது. அவ்விழாவில் மலேசியா நாட்டைச் சேர்ந்த ஸ்ரீ கௌரி மனஹரி அவர்களும் அவரது இசைக்குழுவினரும், சென்னையிலிருந்து வருகை தந்த நாட்டுப்புறப் பாடகர் சேலம் மனோகரன் அவர்களும் என்ற தமிழ்ப் பின்னணிப் பாடகர் கருணா கிரெஸ் அவர்களும் தென்னாப்பிரிக்காவிலிருந்து ஒரு நடனக் குழுவினரும் பங்கெடுத்தனர். மொரிசியசு நாட்டில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கலைஞர்களும் சிறப்பு நிகழ்ச்சிகளை வழங்கினர். அன்றைய இசைக் கலை நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் இரண்டு மணி நேரம் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

உலகத் தமிழ் மாநாட்டில் தமிழில் வெளியிடப்பட்ட அஞ்சல் தலை



மொரிசியசில் தமிழர்கள் குடியேறியதன் 250ஆவது ஆண்டு நிகழ்வு மாநாடு, 1985 ஆம் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மொரிசியசு தமிழர்க் கழகத்தின் ஆதரவில் மொரிசியசு தமிழ்க்கோயில்களின் கூட்டிணைப்பு, மொரிசியசு தமிழ் ஐக்கிய சங்கம், இந்திய-மொரிசியசு கத்தோலிக்கர் சங்கம், தமிழ் மகளிர் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள் இணைந்து இம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தன. மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, ரியூனியன் ஆகிய நாடுகளின் பேராளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சிறப்பு அஞ்சல்தலையும் வெளியிடப்பட்டது.

இவ்வாறு மொரிசியசு தமிழ்க் கோயில்களின் கூட்டிணைப்பு தமிழ்மொழி - தமிழ்ப் பண்பாடு - தமிழினம் காக்கும் அமைப்பாகச் செயலாற்றி வருகிறது.

## சான்றெண் விளக்கம்

1. ஆறு. இராமநாதன், தமிழர் வழிபாட்டு மரபுகள், ப.16.
2. வடிவேல் செல்லம் பிள்ளை, முருகவேல் மாலை, ப.14.
3. சுப்பையா முதலியார், பிரார்த்தனை மாலை, ப.24
4. சு.சதாசிவம், பழந்தமிழர் பண்பாட்டு நெறிகள், ப.29
5. பக்தவத்சல காரதி, மானிடவியல் கோட்பாடுகள், ப.154.
6. தொ. பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், ப.123.
7. பக்தவத்சலபாரதி, தமிழர் மானிடவியல், ப.224
8. T.Ammigan, Tamils in Mauritius, P.7
9. களஆய்வில் கதிர்வேல் சொர்ணம் கூறியது (நாள் : 08.11.2013)
10. களஆய்வில் நேரில் கண்டது (நாள் : 09.11.2013).
11. கள ஆய்வில் நேரில் கேட்டது (நாள் : 09.11.2013).
12. ஆறு.இராமநாதன், தமிழர் வழிபாட்டு மரபுகள், ப.57.
13. பக்தவத்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள், ப.151
14. நாகராஜன், அயல்நாடுகளில் தமிழர், ப.89.
15. திருமலைச்செட்டி, மொரிசியசு முருகன் பாமாலை, ப.16.

# இயல் நான்கு

# மாறிவரும் பண்பாடும் மீட்டு உருவாக்கமும்



# இயல் 4

## மாறிவரும் பண்பாடும் மீட்டுருவாக்கமும்

பண்பாடு என்பது தொடர்ந்து கற்பது; அதனை அனைவருடனும் பகிர்ந்து கொள்வது. ஒரு தலைமுறையில் கற்றவற்றைப் பின்வரும் தலைமுறையினர் பெற்றுக்கொண்டு அவர்கள் தம் தலைமுறையில் மேலும் புதியவனவற்றைக் கற்கின்றனர். பண்பாட்டின் உள்தளங்களாகிய குடும்பம், திருமணம், உறவுமுறை, பொருளியல், அழகியல், மொழி, சமயம், கலைகள் போன்றவற்றில் சமயம் என்னும் உள்தளம் மட்டும் பண்பாட்டு மாற்றத்திற்கு விரைந்து ஆட்படுவதில்லை. மொரிசியசு தமிழரிடமும் இந்தப் போக்கைக் காணமுடிகிறது. மேற்குறிப்பிட்டவற்றுள் சமயத்தை மட்டுமே தக்க வைத்துக்கொண்டு பிற கூறுகளை மெல்ல மெல்ல இழந்து வருகின்றனர். இந்த நிலைகளை ஆராய்ந்து மீண்டும் தமிழ்ப் பண்பாட்டை அனைத்து நிலைகளிலும் மீட்டுருவாக்கம் செய்வதற்கான வழிமுறைகளை இந்த இயலில் ஆராயலாம்.

**பண்பாட்டு மாற்றம்**

பண்பாடு என்பது மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினன் என்ற நிலைமையில் அறிவு, நம்பிக்கை, கலை, சட்டம், நீதிகள், பழக்கவழக்கங்கள், ஆற்றல்கள் முதலியவை பற்றிப் பெற்ற ஒருவித வாழ்க்கை முறை என்பர்.[1] இத்தகைய பண்பாட்டில் மாற்றங்கள் தவிர்க்க இயலாத வகையில் நிகழ்ந்த வண்ணமுள்ளன. அவற்றுக்கான காரணங்கள் சிலவற்றைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

- பிற பகுதியினர் இங்கு வருவதன் காரணமாகவும், இங்குள்ளவர் பிற பகுதிகளுக்குச் செல்வதன் காரணமாகவும் பண்பாட்டில் மாற்றம் நிகழ்கிறது.
- அந்நியப் படையெடுப்புகளால் பண்பாட்டு மாற்றங்கள் பெருமளவில் நிகழ்கின்றன.
- பிற இன மக்களின் ஊடுருவல், குடிபெயர்ப்பு காரணமாகப் பண்பாட்டு மாற்றங்கள் ஏற்படுகின்றன.
- புதுமை ஆர்வமும் எளிமை வேட்கையும் பண்பாட்டு மாற்றங்களை விரும்புகின்றன.

❖ இரண்டு வேறுபட்ட இனங்கள் கலக்கும்போது அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் இனத்தின் பண்பாடு நிலை நிறுத்தப்படுகிறது.

❖ அடக்குமுறைகள், ஒடுக்கு முறைகளால் சிக்கித் தவிக்கும்போது ஓர் இனம் எளிதாகப் புதிய பண்பாட்டை வரவேற்கிறது.

❖ பழைய பண்பாட்டுக் கூறுகள் மீது வெறுப்பு ஏற்படும்போது இயல்பாகவே புதிய கூறுகள் நுழைந்து பண்பாட்டு மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இந்தப் பின்புலத்தோடுதான் மொரிசியசு தமிழரின் மொழி, இனக் கலப்புகளினால் நிகழ்ந்து வரும் பண்பாட்டு மாற்றங்களைக் கணிக்க முடிகிறது.

**தமிழ் அடையாள இழப்புகள்**

ஓர் இனம் தன் மொழியைத் தக்க வைக்கத் தவறும்போது அவ்வினம் தன் பண்பாட்டை இழக்கத் தொடங்கிவிடுகிறது. ஒவ்வொரு இனத்துக்கும் மூல அடையாளம், முதன்மை அடையாளம் மொழியாகத்தான் இருக்க முடியும். மொரிசியசு நாட்டுத் தமிழர்கள் மொழி வளர்ச்சியைக் காட்டிலும் சமயம் சார்ந்த பண்பாட்டுப் பழக்கவழக்கங்களைப் பாதுகாப்பதில் அதிகம் கவனஞ் செலுத்துகின்றனர். இதனால் மொழி வளர்ச்சி இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

மொரிசியசு வாழ் தமிழர்கள் தங்கள் கல்விச் சான்றிதழ்களில் 'இந்து' என்று குறிக்காமல் 'தமிழன்' என்றே குறித்து வருகின்றனர். ஆனால் **'மொரிசியசு தமிழ்க்கோயில்கள் கூட்டிணைப்பு'** (Mauritius Tamil Temples Federation) எனும் அமைப்பின் தலைவருக்குக் கூட தமிழில் பேசமுடியவில்லை. 'வணக்கம்' என்னும் ஒற்றைச்சொல் மட்டுமே அவருக்கான தமிழ் அடையாளமாக இருக்கிறது. தமிழ்நாட்டுத் தமிழரிடம் பேசும்போது ஆங்கிலத்தில் மட்டுமே பேச முடிகிறது. கிரியோல் மொழியைத்தான் தாய்மொழியைப் போல இன்றைய தலைமுறையினர் பேசி வருகின்றனர். 'மூதாதையர் மொழி' என்று மட்டுமே தமிழ் அங்கு தனித்து விடப் பட்டிருக்கிறது.

மொரிசியசு மக்கள் திரண்டிருக்க ஒரு கூட்டத்தில் அவர்களுள் தமிழர் யார் என்பதை அவர்கள் தோற்றம் அடையாளங் காட்டி விடுகிறது. பழனி, தேவன், சுப்பிரமணி என அவர்களின் பெயர்களும் அவர்களின் இன அடையாளத்தை உறுதி செய்து விடுகிறது. ஆனால் நெருங்கிப் பேசும்போதுதான் தமிழின் நிலை புரிகிறது.

தமிழாசிரியர்களே தடுமாறித் தடுமாறித் தமிழ் பேசுவதைப் பார்க்க முடிகிறது. பெரும்பாலான பள்ளிகளில் தமிழைக் கிரியோல் மொழி மூலமே தமிழாசிரியர்கள் சொல்லித் தருகிற சோகம் அங்கு நடந்தேறி வருகிறது.

நூலாசிரியர் களஆய்வுக்கு மொரிசியசு சென்றபோது தமிழர் உணவு விடுதி ஒன்றின் உரிமையாளர் தன் மகள் தமிழ் படிக்கிறாள் எனக் கூறினார். அந்த மாணவியிடம் குறிப்பேட்டைத் தந்து பெயரை எழுதச் சொன்னபோது ஆர்வத்தோடு பின்வருமாறு எழுதிக் காட்டினார்.



இப்படித் தன் பெயரை அல்லது பெற்றோர் பெயரை எழுதுவதோடு ‘வணக்கம்’, ‘நன்றி’ என்று சொல்வதோடு மொரிசியசு தமிழர்களின் மொழியறிவு முற்றுப் பெற்று விடுகிறது. பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும் ஐம்பது வயதைத் தாண்டிய முதியவர்களிடம் மட்டுமே சிறிது வாழ்ந்து வருகிறது.

மகாத்மா காந்தி நிறுவனத் தமிழ்த்துறையில் பயிலும் இளங்கலை மாணவர்கள் பேராசிரியர்கள் கூட தமிழை இயல்பாகவும் சரளமாகவும் பேசும் நிலையில் இல்லை. அங்கு காணப்படும் பன்மொழிச்சூழல் பேச்சு வழக்கில் தமிழை வளரவிடாமல் தடுத்து விடுகிறது. எழுதுவதைப் போலவே தமிழைப் பேசுகின்றனர். இதனால் ஒரு விதமான செயற்கை மொழியாய் அது மாறிவிடுகிறது. பேராசிரியர் திருமலைச்செட்டி போன்ற வெகுசிலர் மட்டுமே குடும்பத்தினர் அனைவரும் தமிழிலேயே பேசும் வழக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர்.[2]

மொழி இழப்பு காலப் போக்கில் பண்பாட்டு இழப்புக்குப் பாதை அமைத்து விடும் என்பதை மொரிசியசு தமிழர்கள் இன்னும் உள்வாங்கிக் கொள்ளாத நிலையே காணப்படுகிறது. இளைய தலைமுறையினர் பேச்சுத் தமிழைக் கேட்கும் வாய்ப்பு கூட இல்லாதவர்களாய் இருக்கின்றனர். பிறந்த நாள் முதல் அவர்கள் கிரியோல் மொழியை மட்டுமே கேட்டு வளர்கின்றனர். பள்ளிகளில் மூன்றாம் மொழியாகத் தமிழை எடுத்துப் படிக்கும் பழக்கம் கூட இன்னும் பெருகவில்லை. அவ்வாறு படிக்கும் சிலரிடம் தமிழ் வாசிக்கும் திறனையும் தமிழ் எழுதுந் திறனையும் காணமுடிகிறது. ஆனால் அவர்களிடம் கூட தமிழ் பேசுந்திறன் சிறிதுமில்லை.

குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் மரபில்கூட இன்று தமிழுணர்வு குறைந்து வருகிறது. பெயருக்கும் சாதிக்கும் கூட வேறுபாடு தெரியாமல் தமிழ்ப் பெயரைச் சூட்டும் வழக்கம் குடிபெயர்ந்த காலத்திலும் அதற்குப் பின்னும் தொடர்ந்தது. அவருடைய சாதிக்கும் அவருடைய பெயரில் உள்ள சாதிக்கும் எந்தத் தொடர்புமில்லை என்பதைக் களஆய்வில் எளிதாக உணர முடிந்தது. எனவே 'சாதியம்' இல்லாத 'தமிழுணர்வு' அங்கு அந்தக் காலக்கட்டத்தில் இருந்தமை புலப்படுகிறது.தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் ஏற்படுத்திய மறுமலர்ச்சியின் தாக்கத்தால் நல்ல தமிழ்ப் பெயர்களைச் சூட்டும் முறை அங்கும் இடைக்காலத்தில் செல்வாக்குப் பெற்றது. எழிலன், மணிமேகலை, அரசி என்றெல்லாம் பெயர் சூட்டினர்.

இளைய தலைமுறையினரிடம் தமிழ் உணர்வு அற்றுப் போனதால் இன்று ஒல்வின், டாலினி, பமெலா எனப் பெயர் சூட்டும் வழக்கம் அதிகரித்து வருகிறது. பெயர் என்பது வெறுஞ் சடங்கன்று; அது இனத்தின், பண்பாட்டின் அடையாளம் என்பதை மொரிசியசு தமிழர்கள் மறந்து வருகின்றனர்.

மொழியிழப்பு எவ்வாறு பண்பாட்டிழப்பாக மாறுகிறது என்பதை ஓர் எடுத்துக்காட்டு வழி எளிதில் உணரலாம். தோட்டப் புறங்களில் கரும்பு வயல்களில் பகலெல்லாம் உழைத்திட்ட போதும் அன்றைய தாய்மார்கள் தாலாட்டுப் பாடும் பண்பாட்டை இழந்துவிடவில்லை.

அழுதால் அரும்புதிரும்
அண்ணாந்தாப் பொன்னுதிரும்
சிரிச்சா முத்துதிரும்
வாய்திறந்தா தேன்சிதறும்
தேனோ திரவியமோ
தெவிட்டாத மாங்கனியோ [3]

எனத் தமிழ்நாட்டுத் தாயைப் போலவே மொரிசியசு நாட்டிலும் தாலாட்டைப் பாடி வந்தனர். இன்று அடுத்தடுத்த தலைமுறையினர் மொழியை இழந்துவிட்டதால் இன்றைய தமிழர் வீடுகளில் தாய்மார்கள் கிரியோல் மொழியிலேயே தாலாட்டுப் பாடிவருகின்றனர். தமிழ்க் குழந்தைகளின் செவிகளில் விழும் முதல் சொல்லே கிரியோலாக இருக்கும் அவலம் தொடர்கிறது. இப்படி மொழியிழப்பு காலப்போக்கில் பண்பாட்டைப் பறிகொடுக்க வைத்து விடுகிறது. தொடக்கத்தில் தமிழ் மக்கள் தமிழ் பேசும்போது கிரியோலின் சில சொற்கள் கலந்து வரும், இன்றோ தமிழர்கள் கிரியோல்

மட்டுமே பேசுகின்றனர், அதில் சில தமிழ்ச் சொற்கள் கலந்து வருகின்றன. மொழியை இழந்ததால் இந்தத் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழினம் மொழியிழப்புக்கு ஆளானதால் இன்று தமிழ்ப் பண்பாட்டு மரபைச் சுட்டிக் காட்டக் கூட ஆங்கிலத்தை நாடவேண்டிய நிலை மொரிசியசில் இருக்கிறது. தமிழினத்தின் அடையாளமாக சமயம் மட்டுமே மிச்சமிருக்கும் மொரிசியசில் தமிழ்ப் பாடல்களை ஆங்கிலத்தில் எழுதி வைத்துக் கொண்டு பாடும் வழக்கம் இன்று இருக்கிறது. நுவெல் பிரான்சு நகரிலுள்ள அருள்மிகு பழமுதிர் சோலை பாலமுருகன் கோயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள திருநெறிய தெய்வத் தமிழ்த் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலரில் அருணகிரி நாதரின் கந்தர் அநுபூதிப் பாடல்கள் சில தமிழர்களுக்குப் பின்வருமாறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1. ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடுந் தனியானை சகோதரனே

aadum parive lanise valenap
paadum paniye paniyaa varulvaai
thedum kayamaa muganaich seruvil
saadun thaniyaanai sagotharane

O Brother of the elephant who overwhelemed
The rocky asura with elephant face!
Bid me sing eternally of the dancing peacock
The lance and the beauteous cock.

***

2. வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடம்
தானோ பொருளா வதுசண் முகனே!

vaano punalpaar kanalmaa ruthamo
jnaano thayamo navilnaan maraiyo
yaano manamo enaiyaanda vidam
thaano porulaa vathusan mugane

Is it sky? Water? Earth? Fire? Air?
The dawn of wisdom? The four chanted vedas?
Myself? My Mined? Is it the place where I was overcome by grace
What is Realitv? O God of six faces?

முதலில் தமிழ்ப்பாடல் தந்துவிடுடப் பின்னர் அதை அப்படியே ஒலி பெயர்ப்பு முறையில் ஆங்கிலத்தில் தந்து அடுத்து பாடலின் பொருளும் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது. தமிழ்ப் பாடலைப் படிக்கவும் தமழ்ப் பாடலின் பொருளைப் புரிந்து கொள்ளவும் ஆங்கிலத்தைத் துணைக்கு அழைக்க வேண்டிய துயரநிலை அங்கு நீடித்து வருகிறது.

தமிழரின் பண்டைய உணவு முறையை அறியாவிட்டாலும் குறைந்தபட்சம் உணவுப் பெயர்களையாவது மொரிசியசு தமிழர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இந்த நோக்கில் கிராண்ட் பே நகரில் உள்ள வட பழனி முருகன்கோயில் குடமுழக்கு விழா மலரில் இடம்பெற்ற தமிழர் உணவுப் பட்டியலின் ஒரு பகுதி கீழே தரப்படுகிறது.

**Tamil Food**

| | | | |
|---|---|---|---|
| Agathi | Agathi அகத்தி | Garlic | Vellai Poondu வெள்ளைப்பூண்டு |
| Amaranth | Thandukeerai தண்டு கீரை | Guava | Koiya palam கொய்யாப்பழம் |
| Asafoetida | Perungayam பெருங்காயம் | Hear | Mudakotran முடக்கொற்றான் |
| Assambean | Mochai Kottai மொச்சைக்கொட்டை | Incence | Sambirani சாம்பிராணி |
| Betel Leaf | Vetrilai வெற்றிலை | Jeggery | Vellam வெல்லம் |
| Beverage | Kudi neer குடிநீர் | Lime | Elumichai எலுமிச்சை |
| Brain | Moolai மூளை | Marsh mind | Puthina புதினா |
| Castor Oil | Vilakkenney விளக்கெண்ணெய் | Nourishment | Unavu உணவு |
| Coffee | Kappi, Suvaineer காப்பி, சுவைநீர் | Omum | Omum ஓமம் |
| Chilly | Milagai மிளகாய் | Paddy | Nel நெல் |
| Duck | Vathu வாத்து | Pïa | Pattani பட்டாணி |
| Dill | Venthayam வெந்தயம் | Quinece | Seemai Mathulai சீமை மாதுளை |
| Egg apple | Kathari கத்தரி | Ragi | Kelvaragu கேழ்வரகு |
| Fish | Meen மீன் | Rose Apple | Navatrpalam நாவற்பழம் |

இதே மலரில் குழந்தைகளுக்குத் தமிழ்ப்பெயர் சூட்ட தமிழ்ப் பெயர்களின் பட்டியல் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது.

## Tamil Names

| | |
|---|---|
| AMIZHTHINI | ARIVOLI |
| INIMAI | ILAMURUGUEZHUMALAI |
| EZHIL | UTHAYACURIYAN |
| OVIYA | KAPILAN |
| KANMANI | CAVARIMUTHU |
| KUYIL | SELVAMANI |
| SARASU | CEZHIYAN |
| CIVAKAMI | THENNAVAN |
| THAMARAI | PANAN |
| PALNILA | PARI |
| PONNI | RATHINAM |
| POO | NAKKIRAN |
| NARUMALAR | NEELAVAN |
| MANGAI | NETHI |
| MAYIL | MAYURAN |
| YAZHINI | MACILAN |
| VAIGAI | YOCEPPU |
| ULAKU | VALLUVAN |

தமிழர்களின் ஒவ்வொரு வீட்டிலும் பேச்சுமொழியாக இருந்த தமிழ்மொழி இன்று மறக்கப்பட்ட மொழியாக மாறியிருக்கிறது. இந்நிலையில் தமிழை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு போய்ச் சேர்க்க மிகப் பெரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தமிழ்ப் படிப்பைப் பரவலாக்கம் செய்யும் வரை இத்தகைய பின்னடைவுகளை மொரிசியசு வாழ் தமிழ்மக்கள் சந்தித்தே தீர வேண்டிய நிலை இருந்து வருகிறது. மகாத்மா காந்தி நிறுவனத்தில் தமிழில் முதுகலைப் பட்டப் படிப்பு தொடங்கப்பட்ட பின்னரும் அதில் படிக்க எவரும் முன்வராத சூழல் காணப்படுகிறது.

**ஊடகங்கள்**

நவீன உலகின் வேகமான அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி ஒவ்வொரு நாளும் புதுப்புது சாதனைகளைப் படைத்து வருகிறது. இந்த வேகத்தோடு நாம் ஈடுகொடுத்து ஓடிட ஊடகங்கள் உதவி மிகவும் தேவை. நவீன அறிவியலை உள்வாங்கிக் கொள்ளாத எந்த மொழியும் வீழ்ச்சியடைவது தவிர்க்க முடியாதது. மொரிசியசில் ஊடகத்தமிழ் இன்னும் குழந்தை நிலையிலேயே தவழ்கிறது. செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி என அனைத்திலும் தமிழைத் தேட வேண்டிய நிலையிலேயே மொரிசியசு தமிழர்கள் இருந்து வருகின்றனர்.

## இதழ்கள்

தமிழ்நாட்டிலிருந்து தோட்டப்புறங்களில் பணிபுரிய சென்ற தமிழர்களிடம் இதழ்கள் படிக்கும் பிழக்கம், ஆர்வம் சிறிதுமில்லை. அன்று தமிழ் நாட்டில்கூட இதழ்கள் மக்களிடம் சென்று சேரவில்லை. ஏழைத் தமிழர்களான கூலித் தொழிலாளிகளுக்கு ஏடுகள் என்பவை எட்டாக் கனிகளாகவே இருந்தன. எனவே மொரிசியசு வந்து பல ஆண்டுகள் கடந்த பின்னும் பத்திரிக்கைகளின் தேவைகளை அவர்கள் உணரவேயில்லை.

முதன்முதலாக 1861 ஆம் ஆண்டு பிரெஞ்சு மொழிச் செய்தித்தாளில் (Le Mauricien) தமிழுக்கு ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டிருந்தது, இதனை அருளப்பா சஞ்சீவி செட்டி என்பவர் வெளியிட்டார். இந்த இதழ் மூன்று ஆண்டுக்குள் முடிவைக் கண்டது. மொரிசியசில் தோன்றி மறைந்த இதழ்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

**1861 - Le Mauricien**

**1868 - The Mercantile Advertiser**

**1911 - Mimic Trumpeter**

**1947 - தமிழ்க்குரல்**

**1961 - The Peacock**

**1963 - L' Eclaireur**

**1964 - Tamil Voice**

**1980 - Oli**

**1985 – Sakthivel**

இவ்வாறு காலந்தோறும் தமிழ் இதழ்கள் அங்கு தோன்றி மறைந்த வண்ணம் இருந்துள்ளன. இதற்குத் தமிழ் மக்கள் போதிய கல்வியறிவைப் பெறாமையே முதன்மைக் காரணம். தமிழ் மக்களிடையே பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும் அருகிப் போனதும் மற்றொரு காரணமாகும். தற்போது **'La Lumiere'**, **'Vanakam'**, **'Thondan'** போன்ற சிறுஇதழ்கள் வருகின்றன. ஆனால் அவற்றில் தமிழுக்குப் போதுமான இடமில்லை. 'வணக்கம்' இதழ மும்மொழி இதழாக இருந்தாலும் பிரெஞ்சும் ஆங்கிலமுமே அவ்விதழில் நீக்கமற நிறைந்துள்ளன. தமிழ் இடம்பெறும் ஒரே பகுதியைக் கீழே காணலாம்.

# Learning Tamil Through English

| Pronoun/Noun | Direct Object | Pronoun/Noun | Direct Object |
|---|---|---|---|
| I | me | நான் | என்னை |
| You | you | நீ | உன்னை |
| He | him | அவன் | அவனை |
| She | her | அவள் | அவளை |
| It | it | அது | அதை |
| Ball | ball | பந்து | பந்தை |
| Food | food | உணவு | உணவை |

**In Tamil, the general rule for forming the direct object is: noun + ஐ**

**Examples:**

என்னை பார்! — Look at me!
அவள் பந்தை மேலே எறிகிறாள். — She throws the ball up.
அதைத் தொடு! — Touch it!
அவன் உணவைப் பார்க்கிறான். — He looks at the food.

**Exercises**

**1. Translate to English.**

a. நான் உன்னைப் பார்க்கிறேன்.
b. அவன் பந்தை உள்ளே எறிகிறான்.
c. அது என்னைத் தொடுகிறது.
d. பந்தை இங்கே எறி!
e. நீ உணவைத் தொடுகிறாய்.

**2. Translate to Tamil.**

a. She sees the food inside.
b. Come outside!
Throw the ball outside!
c. He throws the food down.
d. It looks at her. / It sees her.
e. It touches him.
f. She throws it there.

**3. Memorize the following words:**

| | | | |
|---|---|---|---|
| கதவு | door | அந்த | that |
| திற | (to) open | பெட்டி | box |
| வாங்கு | (to) buy | சட்டை | shirt |
| இந்த | this | பூ | flower |

எனவே தமிழ் இதழ்கள் மொரிசியசில் இல்லை என்றே கூறிவிடலாம். தமிழ்நாட்டு இதழ்களும் அங்கு வருவதில்லை.

வானொலி

மொரிசியசு வானொலியில் தமிழ் ஒலிபரப்பு 1944 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதற்கெனப் பெருமுயற்சி எடுத்தவர் தமிழ்ப் பெரியார். அப்பாசாமி ஆவார். அப்போது ஆங்கில நிர்வாகச் செயலர் நியூட்டன் என்பவரால் விநாயகம் பிள்ளை அவர்கள் தமிழ் அறிவிப்பாளராக நியமிக்கப்பட்டார். அப்பாசாமி அவர்கள் தம்

சொந்த இசைத்தட்டுகளைத் தந்துதவினார். அப்போது செவ்வாய் தோறும் கால் மணி நேரத் தமிழ் நிகழ்ச்சி தரப்பட்டது. பின்னர் முப்பது மணித்துளிகளாக நீட்டிக்கப்பட்டது. இந்த அரை மணி நேர நிகழ்ச்சி ஒரு பக்திப் பாடலோடு தொடங்கும். இந்தப் பக்திப் பாடலானது பெரும்பாலும் முருகப் பெருமான் பாடலாகவே இருந்தது. இறுதி 10 நிமிடங்களில் 'வியாக்கியானம்' அதாவது சிற்றுரை விளக்கம் என்பது இடம்பெறும். இதில் முருகனைப் பற்றிய பல்வேறு செய்திகள், வரலாறுகள் இடம் பெற்றன.

1962 ஆம் ஆண்டில் தமிழாகரர். பேராசிரியர் அருணாசலம் புட்பரதம் அவர்கள் அறிவிப்பாளராக நியமிக்கப் பெற்றார். இவர் தமிழ் நிகழ்ச்சிகளில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். தைப்பூசக் காவடித் திருநாள் அன்று முருகப் பெருமானது பாடல்களும், சிறு சிறு விளக்கங்களும் இடம்பெற்றன. மகா சிவராத்திரித் திருநாள் அன்றும் சிறப்பு நிகழ்ச்சி தரப்பட்டது. அதன் பிறகு போர்ட்லூயி அருள்மிகு சொக்கலிங்க மீனாட்சியம்மன் கோயிலிலிருந்து, பிற்பகல் ஒரு மணி மதல் இரண்டு மணி வரை நேர்முக அஞ்சலில் கலைநிகழ்ச்சிகள் குறிப்பாக முருகன் துதிப்பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. செவ்வாய்க்கிழமை தோறும் இருந்த அரை மணி நேரத் தமிழ் நிகழ்ச்சி ஒரு மணி நேரமாக நீட்டிக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை 30 மணித்துளிகள் மேலும் சேர்க்கப்பட்டன.

எனவே தமிழ் நிகழ்ச்சியில் மாபெரும் பௌர்ணமிக் காவடித் திருநாளிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. தைப்பூசக் காவடித் திருவிழா வரும்போதெல்லாம் கொடியேற்றம் முதல் கொடி இறக்கம் வரை அன்றாடம் காலையில் பத்து மணித்துளி சிறப்பு நிகழ்ச்சியும், மாலையில் அரை மணி நேரச் சிறப்பு நிகழ்ச்சியும் வழங்கப்பட்டன. அந் நிகழ்ச்சிகளில் திருக்கோவில்களில் திருப்பணி ஆற்றுபவர்களும் தமிழ் ஆசிரியர்களும் திருமுருகனைப் பற்றி உரை ஆற்றினர். அயல் நாட்டுக் கலைஞர்கள் பாடும் பாடல்களும் அந்நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பப்பட்டன. சில வேளைகளில் வேல் வகுப்பு, மயில் விருத்தம், சேவல் விருத்தம் போன்ற பாடல்களும் அச் சிறப்பு நிகழ்ச்சியில் இடம்பெற்று வந்தன.

தற்போது மொரிசியசு தமிழ்ச் சங்கத்தார்கள் குறிப்பாக பெல்வீ மோரெல் பாலசுப்பிரமணியர் கோயில் சங்கத்தார்கள், போர்ட்லூயி சரவணபவ தமிழ் சங்கத்தார்கள் வெளியிட்ட ஒலி நாடாக்கள் வானொலியில் ஒலிபரப்பாகி வருகின்றன. மொரிசியசு கோயில்கள் கூட்டிணைப்பாளரின் பெரு முயற்சியினால் தைப்பூசக் காவடி விழா வரும்போது காலை தோறும் பத்து நாட்களுக்கு வானொலியில் நாற்பது

மணித்துளிகளும்; மாலைதோறும் 5 மணி முதல் 5.30 மணி வரை, 30 மணித்துளிகளும் இரவு தோறும் பண்பலை .வானொலியில் ஒரு மணி நேரமும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வருகின்றன. காவடித் திருநாளுக்கு முதல் நாள் இரவு முழுவதும் அதாவது இரவு 8 மணி முதல் விடியற்காலை 5 மணி வரையும், காவடித் திருநாள் அன்று நண்பகல் முதல் மாலை 5 மணி வரையும், சிறப்பு நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**வானொலி - தமிழ் மொழியில் அன்றாட நிகழ்ச்சிகளும் நேர ஒதுக்கீடும்**

| நாள் | பண்பலை | மொரிசியசு வானொலி | நிகழ்ச்சி |
|---|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | 6.00 - 6.30 | | இசை அமுதம் |
| | | 11.00 - 12.00 | சங்கே முழங்கு |
| | 17.30 -18.00 | | இசை அமுதம் |
| | | 19.00 -19.30 | இசைத் தென்றல் |
| திங்கட்கிழமை | 6.00 - 6.30 | | இசை அமுதம் |
| | | 13.00 - 13.45 | இசை சலங்கை |
| | 17.30 -18.00 | | இசை அமுதம் |
| | | 19.00 -19.30 | இசைத் தென்றல் |
| செவ்வாய்க்கிழமை | | 5.00 - 5.20 | பக்தி மாலை |
| | 6.30 - 7.00 | | இசை அமுதம் |
| | | 13.00 -13.45 | இசை சலங்கை |
| | | 16.00 - 17.00 | இன்பச் சோலை |
| | 17.30 - 18.00 | | இசை அமுதம் |
| | | 19.00 - 19.30 | இசைத் தென்றல் |
| புதன்கிழமை | 6.30 - 7.00 | | இசை அமுதம் |
| | | 13.00 - 13.45 | சங்கே முழங்கு |
| | 17.30 -18.00 | | இசை அமுதம் |
| | | 19.00 -19.30 | இசைத் தென்றல் |
| வியாழக்கிழமை | 6.30 - 7.00 | | இசை அமுதம் |
| | | 12.00 - 13.30 | சங்கே முழங்கு |
| | 17.30 -18.00 | | இசை அமுதம் |
| | | 19.00 -19.30 | இசைத் தென்றல் |
| வெள்ளிக்கிழமை | 6.30 - 7.00 | | இசை அமுதம் |
| | | 13.00 - 13.45 | சங்கே முழங்கு |
| | 17.30 -18.00 | | இசை அமுதம் |
| | | 19.00 -19.30 | இசைத் தென்றல் |
| சனிக்கிழமை | 6.30 - 7.00 | | இசை அமுதம் |
| | | 11.00 - 12.15 | சங்கே முழங்கு |
| | 17.30 -18.00 | | இசை அமுதம் |

வானொலி - இரண்டாம் அலைவரிசை

தமிழ் மொழியில் அன்றாட நிகழ்ச்சிகளும் நேர ஒதுக்கீடும்

| நாள் | அலைவரிசை | நேரம் | நிகழ்ச்சி | தலைப்பு |
|---|---|---|---|---|
| திங்கள் | இரண்டாம் | 16.20 - 16.45 | தொடர்கதை | பெண் |
| | | 17.30 - 18.00 | | சங்கே முழங்கு |
| செவ்வாய் | இரண்டாம் | 16.20 - 16.45 | தொடர்கதை | பெண் |
| | | 17.30 - 18.00 | | அன்புள்ள |
| புதன் | இரண்டாம் | 16.20 - 16.45 | தொடர்கதை | பெண் |
| வியாழன் | இரண்டாம் | 16.20 - 16.45 | தொடர்கதை | பெண் |
| வெள்ளி | இரண்டாம் | 16.20 - 16.45 | தொடர்கதை | பெண் |
| சனி | இரண்டாம் | 13.20 - 13.50 | கலைநிகழ்ச்சி | சகல பும் பும் |
| | | 13.50 - 14.15 | | பாட்டுக்குப் பாட்டு |
| சனி | இரண்டாம் | 15.55 - 16.20 | சமையல் | கை மணம் |
| | | 16.20 - 16.50 | கலைநிகழ்ச்சி | ஈனா மீனா தீகா |

பிற மொழிகளை ஒப்பிட்டு நோக்க வானொலியில் தமிழுக்கான இடம் மிகக்குறைவு. இந்த நிகழ்ச்சிகள்கூட சமய வளர்ச்சியை மையமிட்டே அமைக்கப்படுகின்றன. தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் துணை நிற்கக் கூடிய வகையில் வானொலி நிகழ்வுகள் இல்லை.

இக்காலத்தில் தமிழ் இசையையும் பிற தமிழ் நிகழ்ச்சிகளையும் கேட்பதற்கு நேயர்களுக்கு ஐந்து வானொலி அலைவரிசைகள் இருக்கின்றன. அவையாவன

1) மொரிசியசு வானொலி - RM 1

2) மொரிசியசு வானொலி - RM 2

3) கூல் எஃப் எம் - COOL F.M

4) எஃப் எம் தாளம் - F.M TAALAM

5) வெர்ல்டு இட் ரெடியோ - WORLD HIT RADIO

இவற்றின் மூலமாக பக்திப் பாடல்களையும் மெல்லிசைப் பாடல்களையும் கேட்டு மகிழ முடிகிறது.

**தொலைக்காட்சி**

நாட்டில் மொழி, கலை, பண்பாடு, சமயம் ஆகியவற்றை வளர்க்க மொரிசியசு தொலைக்காட்சி ஒளிபரப்பு பெரிதும் உதவுகிறது. இச்சாதனம் மக்களிடையே மிகுந்த புத்துணர்ச்சி, ஆர்வம், இன்பம் முதலியவற்றை உண்டாக்குகின்றது. மொரிசியசு தீவில் தொலைக்காட்சி ஒளிபரப்பு 1965 ஆம் ஆண்டில் தொடங்கியது. தமிழ், இந்தி, உருது, போஸ்புரி, தெலுங்கு, மராத்தி, பிரஞ்சு, ஆங்கிலம், சீன மொழி ஆகிய மொழிகளுக்கு ஒளிபரப்பு நேரம் ஒதுக்கப்பட்டது. 1969 ஆம் ஆண்டில் மொரிசியசு நாட்டுக் கலைஞர்கள் தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளை அளிக்கத் தொடங்கினர்.

**'நய தேச், நய சிந்தகி'** எனப்படும் 'புதுநாடு, புதுவாழ்வு' என்னும் நிகழ்ச்சியில் இரத்தினம் காளி அவர்களும் அவர் தம் குழுவினர்களும் கலந்து கொண்டார்கள். இதுவே தொலைக்காட்சியின் முதல் தமிழ் நிகழ்ச்சியாக அமைந்தது.[4]

தைப்பூசக் காவடித் திருநாள் அன்று போர்ட்லுயி அருள்மிகு சொக்கலிங்க மீனாட்சியம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற மகாதீபாராதனையை ஒளிப்பதிவு செய்து அதனைத் தொகுத்து இரவில் ஒளிபரப்புகின்றனர். மேலும் அந்நாளில் தொலைக்காட்சியில் ஒரு தெய்வீகத் தமிழ்த் திரைப்படமும் காட்டப் படுகிறது. தைப்பூசக் காவடி விழாவை ஒட்டி தமிழ் நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. கொடியேற்றத் திருநாள் முதல் கொடி இறக்கம் வரை அன்றாடம் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப் படுகின்றன. உள்நாட்டுக் கலைஞர்கள், சிறப்பு நிகழ்ச்சிகளில் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி போன்ற பாடல்களைப் பாடுவார்கள். தமிழ்நாட்டுப் புகழ்பெற்ற கலைஞர்களாகிய சூலமங்களம் சகோதரிகள், சீர்காழி கோவிந்தராசன், சீர்காழி சிவசிதம்பரம், பித்துக்குளி முருகதாஸ் போன்றவர்கள் மொரிசியசு நாட்டிற்கு வந்தபோது அவர்கள் வழங்கிய நிகழ்ச்சிகள் தைப்பூசக் காவடித் திருவிழாவின்போது ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

1975 ஆம் ஆண்டில் வண்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்புத் தொடங்கியது. தமிழ் நிகழ்ச்சிகள் மூன்று வாரங்களுக்கு ஒரு முறை முப்பது மணித்துளிகள் ஒளிபரப்புச் செய்யப்பட்டன. பரம பக்த சுகுன விலாச பஜன சங்கத்தார்கள் புரட்டாசி கோவிந்தன் திருவிழாவை முன்னிட்டு நடத்தும் சிறப்பு வழிபாடும் தமிழிசை நிகழ்ச்சியும் பகலிலும் இரவிலும் நேர்முக நிகழ்ச்சிகளாக ஒளிப்பரப்பப்பட்டு வருகின்றன.

1998 ஆம் ஆண்டில் முதல் மெல்லிசை அமுதம் பாடல் போட்டி நடைபெற்றது. இறுதிக் கட்டம் பிலாசா நாடக அரங்கில் நிகழ்ந்தது. தொடக்கத்தில் இருநூற்று முப்பத்து நான்கு போட்டியாளர்கள் பங்கெடுத்தனர். இப்போட்டி மொரிசியசு நாட்டில் முதன்முறையாக நடைபெற்றதால் தமிழர்கள் உயர்ந்த தரத்தை எதிர்பார்த்தனர். அது சிறந்த வெற்றியைக் கண்டது. இதன் விளைவாகத்தான், தொலைக்காட்சி நிலையம் இரண்டாவது பாடல் போட்டியை 2001 ஆம் ஆண்டில் நடத்தியது. ‘இசை அமுதம்’ என்ற தலைப்பில் இப்போட்டி நடத்தப்பட்டது. மகாத்மா காந்தி நிறுவனத்தில் இறுதிக்கட்டப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றி கண்ட தமிழர்கள் மூன்றாம் பாடல் போட்டி நடத்தவேண்டும் என்று விடாமுயற்சியுடன் போராடிய பிறகு, 2003 ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் இந்திரா காந்தி பண்பாட்டு மையத்தில் இசை அமுதம் நடத்தப்பட்டது. முந்தைய ஆண்டுகளைப் போல், அதுவும் சிறப்பாக நடத்தப்பட்டது. இறுதியாக, காலஞ்சென்ற டாக்டர் எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அப்பெருங்கலைஞர் பாடிய ‘காற்றினிலே வரும் கீதம்’ என்னும் புகழ் பெற்ற பாட்டின் முதல் சொல்லைக் கொண்டு பாடல் போட்டிக்குத் தலைப்புக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு, 2006 ஆம் ஆண்டில், ‘சுவாமி விவேகானந்தா’ என்ற அரங்கில் இப்போட்டியின் இறுதிக்கட்டம் டிசம்பர் மாதத்தில் நடந்தேறியது.

**1998 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை பாடல் போட்டிகளில் பங்கெடுத்த போட்டியாளர்களின் எண்ணிக்கையும் இறுதிக்கட்டத்தில் வெற்றிப் பெற்றவர்களின் பெயர்களும்.**

| ஆண்டு | போட்டி | போட்டியாளர்களின் எண்ணிக்கை | இறுதிக்கட்டத்தில் வெற்றிப் பெற்றவர்கள் |
|---|---|---|---|
| 1998 | மெல்லிசை அமுதம் | 234 | சுபுலட்சுமி பெண்சிலகாடு |
| 2001 | இசை அமுதம் | 192 | முன்னுசாமி உலகன் |
| 2003 | இசை அமுதம் | 147 | இராமன் கிஸ்ஸன் |
| 2006 | காற்றினிலே | 160 | ஆறுமுகம் பரமநாதன் |

தைப்பூசம், பங்குனி உத்திரம், சித்திரைப் பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆடிக்கிருத்திகை, கந்தர் சஷ்டி போன்ற திருநாட்களை ஒட்டி வடிவேலனைப் போற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் இடம்பெற்று வருகின்றன.

காவடித் திருநாட்களின்போது தமிழர் வாழும் பிற நாடுகளில் இத்தகைய சிறப்பு நிகழ்ச்சிகளோ கருத்தரங்குகளோ இந்த அளவிற்கு இடம் பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நேர ஒதுக்கீடும்**

| மொழிகள் | மணிநேரம் | % |
|---|---|---|
| பிரெஞ்சு | 1187 | 54.6 |
| ஆங்கிலம் | 1187 | 54.6 |
| கிரியோல் | 1187 | 54.6 |
| இந்துஸ்தானி | 460 | 21.3 |
| ஹக்கா | 128 | 5.9 |
| உருது | 120 | 5.6 |
| தமிழ் | 120 | 5.6 |
| தெலுங்கு | 115 | 5.3 |
| குஜராத்தி | 30 | 1.4 |

மேற்கண்ட அட்டவணை மூலம் தொலைக்காட்சியில் தமிழுக்கான இடம் தெளிவாகப் புலப்படுகிறது. மிகக் குறைந்த விழுக்காட்டில் (5.6%) ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளும் சமயத்தை முன்னிறுத்துவனாகவே உள்ளன. தமிழ்மொழியின் சிறப்பு, தமிழ் இலக்கியங்களின் வளம், தமிழர்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள், பேச்சுத் தமிழை முன்னெடுக்கும் முறைகள் போன்றவை எதுவும் இடம் பெறுவதில்லை.

எனவே செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி எனும் எந்தவகை ஊடகத்திலும் தமிழ் பின்னடைந்தே இருக்கிறது. இன்று உலகமெங்கும் ஊடகங்கள் வழியாகத்தான் மொழி வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி போன்றவை நிகழ்ந்து வருகின்றன. இத்தகைய ஆற்றல் கொண்ட ஊடகங்களில் தமிழ் முழுமையாக இடம் பெறும்வரை மொரிசியசில் தமிழ் மேம்பாடு என்பது வெறுங்கனவாக மட்டுமே இருக்க முடியும்.

தற்போது மொரிசியசு தமிழர்களின் நீண்டநாள் கனவு நனவாகியுள்ளது. பொதிகை உட்பட அனைத்துத் தமிழ்நாட்டுத் தொலைகாட்சிகளும் மொரிசியசில் ஒளிபரப்பாகி வருகின்றன. இதனால் பேச்சுத்தமிழ் பரவ வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### கோவில்களில் தமிழ்

மொரிசியசு நாட்டில் தமிழ் அனைத்து நிலைகளிலும் பின்தங்கியிருந்தாலும் சமயம் என்ற நிலையில் கோயில்களில் தமிழ் தக்க வைக்கப்பட்டிருந்தது. இப்போது அக்கோயில்களிலும் மொழிச்சிக்கல்கள் முளைக்கத் தொடங்கி விட்டன. கோயில் திருப்பணிகளைச் சிறப்பாகச் செய்து வந்த கோவில் சங்கங்கள் திருமுறைப் பாடல்களைக் கற்பிக்கும் நிலையங்களாகவும் மாறி இசைத்தமிழ் வளரவும் உழைத்து வந்தன.

இன்று கோயில் சங்கங்களின் ஆட்சிக் குழுவினர்களிடையே பதவிப் போட்டியும், கட்சிப் பூசல்களும் தலைதூக்கி விட்டதைப் பார்க்க முடிகிறது. தமிழரிடையே ஒற்றுமையுணர்வு குலைந்து வருகிறது.[5] இதன் விளைவு கோவில்களில் வடமொழி கால்கொள்ளத் தொடங்கி விட்டது. தமிழ்நாட்டிலிருந்து வரும் அர்ச்சகர்களின் அணிவரிசையால் பெரும்பாலான கோயில்களிலும் வடமொழி பரவி வருகிறது. தமிழ் மொழியைச் சிறிதும் அறியாதவரும் சமய அறிவு அற்றவரும் ஆட்சிக்குழுக்களில் அமர்ந்து தமிழரின் அழிவுக்கு வழி ஏற்படுத்தி வருகின்றனர். கோயிலில் மட்டுமே குடிகொண்டிருந்த தமிழும் பண்பாடும் அங்கிருந்தும் அகற்றப்பட்டு விடுமோ எனும் அச்சம் இப்போது எழுந்துள்ளது.

### மீட்டுருவாக்கப் பணிகள்

இன்றைய உலகமயமாதல் சூழலில் அனைத்துப் பண்பாடுகளுமே விரைந்த மாற்றங்களைச் சந்தித்து வருகின்றன. ஒவ்வொரு பண்பாட்டிலும் மாற்றங்கள் பல காலமாக நிகழ்ந்து வந்தாலும் இடம், காலம் ஆகியவற்றுக்கு ஏற்ப மாற்றத்தின் அளவும் வீதமும் வேறுபடுகின்றன, பண்பாட்டு மாற்றமென்பது தனியொரு செயலோடு மட்டும் தொடர்புடையதன்று. பல செயல்களின் மொத்தத் தொகுதியாகும். ஒரு பண்பாட்டின் கூறுகள் அயல்பண்பாட்டுக் கூறுகளால் முற்றிலும் பாதிப்புக்குள்ளாகும் சூழலில்தான் அந்தப் பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டிய தேவையும் அதை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது. மொரிசியசு தமிழர்களுக்கும் இந்தக் கட்டாயம்

ஏற்பட்டுள்ளது. காலந்தோறும் மொரிசியசு வாழ் தமிழ்ச் சமுதாயத்தினர் பல்வேறு பண்பாட்டுச் சவால்களை எதிர்கொண்டே வந்திருப்பதை அவர்களின் வரலாற்றின் வழி அறியமுடிகிறது. அரசியல், இலக்கியம், மொழி எனப் பல்வேறு நிலைகளில் பண்பாட்டுத் தக்க வைப்பைத் தனி நபர்களும் இயக்கங்களும் செய்தே வந்துள்ளமையை அறிய முடிகிறது.

## அரசியல் ஆளுமைகள்

மொரிசியசு நாட்டில் தமிழ்ப் பண்பாட்டை அழிந்துவிடாமல் அரசியல் தளத்தில் நின்று உழைத்தவர்களுள் முதன்மையானவர் வெங்கடேச சின்னத்தம்பு ஆவார். விடுதலை அடையாத மொரிசியசில் வீரம்மிக்க தமிழர் தலைவராக இவர் விளங்கியுள்ளார். கி.பி.1843இல் இவர் அரும்பாடுபட்டு உருவாக்கிய திரௌபதியின் கோயில் மொரிசியசின் தமிழ் அடையாளமாகக் காலத்தை வென்று இன்றுவரை திகழ்ந்து வருகிறது.[6] தன்னுடைய அறிவாற்றலால் மிகச் சிறந்த வணிக நுட்பங்களைக் கையாண்டு வணிகத் துறையில் மேம்பட்ட நிலையை அடைந்தவர் இவர். தோட்டப்புறத்தை விட்டு வெளியேறும் தமிழர்களுக்கு ஆங்கிலேயே அரசு கடுமையான தண்டனைகள் வழங்கிக் கொடுமைகள் செய்து வந்தபோது அவற்றைத் தடுத்து நிறுத்த ஆங்கிலேயே ஆட்சியில் ஆளுநராக இருந்த ஹமில்டன் கோர்டனிடம் இராஜதந்திர முறையில் பேசி வென்றவர் இவர்.

தோட்டப்புற மக்களால் கொண்டாடப்பட்ட மற்றொரு தலைவர் **இராஜரெத்தினம் முதலியார்**. கி.பி.1870 ஆம் ஆண்டிலேயே இராயல் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பணியில் இருந்த பெருமகன் இவர். கரும்பு வயல்களில் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்தும் செயல் தொடர்ந்து நடைபெற்று வந்த சூழலில் ஆங்கிலேயரான தெ ப்ளிவித்ஸ் என்பவர் இங்கிலாந்து அரசாங்கத்தின் கவனத்துக்கு இந்தக் கொடுஞ்செயல்களைக் கொண்டு சென்றார். அதற்கு மூலகாரணமாக இருந்தவர் இராஜரெத்தினம் முதலியார்.[7] தோட்ட முதலாளிகளால் தமிழர்கள் அடிமைகளாய் நடத்தப்படும் அவலத்தை எதிர்த்துத் துணிவுடன் போராடியவர் இவர். இவர்தம் அச்சமற்ற பணிகள் தமிழர்களுக்குப் புதிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்தன.

மொரிசியசின் அரசியல் வரலாற்றில் முதல் வீராங்கனை என்ற பெருமைக்குரியவர் அஞ்சலை.



**அஞ்சலை**

சங்க காலத்துப் புறநானூறு பேசும் வீரத்திற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்து காட்டியவர். இவர் மொரிசியசு நாட்டின் வடபகுதியில் உள்ள பெல்விமோரே எனும் சிற்றூரில் பிறந்து வளர்ந்தவர். தமிழ்த் தோட்டத் தொழிலாளிக்குப் பிறந்த ஏழைப்பெண் இவரிடம் இயற்கையிலேயே துணிச்சல் பண்பு மிகுந்திருந்தது.

கரும்புத் தொழிற்சாலைகளில் கசக்கிப் பிழியப்படும் உழைக்கும் மக்களுக்கு ஆதரவாகத் தலைமையேற்று அவர்கள் வாழ்க்கையில் புதிய விடியல் பூத்திட அயராது போராடிய பெண் போராளி இவர். உழைப்புக்கேற்ற ஊதியம் தர மறுத்த கரும்பாலை முதலாளிகளுக்கு எதிராக உழைக்கும் மக்களை ஒன்று திரட்டிப் போராடியவர் இவர். 1943 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் நாளன்று ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய போது இரக்கமற்ற வெள்ளையர்களின் துப்பாக்கி குண்டுகளுக்குப் பலியானார்.

அஞ்சலையோடு இணைந்து போராடிய வீரர்கள் முனியசாமி, முனியன், பொன்னப்பன் ஆகிய மூவரும் உயர் துறந்தனர். தமிழ்ப் பெண்கள் வீரத்தின் அடையாளமாய் இன்று வரை போற்றப்படும் அஞ்சலை வரலாற்றில் வாழ்ந்து வருகிறார். இவருக்குப் புகழஞ்சலி செலுத்திய புலவர் பெருமாள் சுப்பராயன் பின்வரும் உருக்கமான பாடலைப் பாடியுள்ளார்.

வல்லமையைப் பேசி தினம் வறுமையு ற்றோர்

வயிற்றடித்து திறமதை யுரிஞ்சுகின்ற

புல்லரையும் புரட்டரையும் தம்மைத் தாமே

போற்றித்திரி வோர்களையுந் தாங்கி மிக்க

அல்லலினால் வாட்டமுறும் இம்மண்மீது

அமைதியுற்றிருப்பதற் கோரிடங் காணாது

நல்லோரின் தாய்மைநிறை யுள்ளந்தன்னில்

நலமுறலாமென் றோடியமர்ந் திட்டாயே[8]

இவ்வாறு அஞ்சலை தன்னுடைய தன்னிகரில்லா தியாகத்தால் சிலையாக நின்று காலமெல்லாம் மொரிசியசு தமிழர்களுக்கு எழுச்சியைத் தந்த வண்ணமுள்ளார்.

மொரிசியசு நாட்டின் மிகச்சிறந்த அரசியல் ஆளுமையாகப் போற்றப்படுவர் **ரங்கநாதன் சீனிவாசன்.** அரசியல், பொருளாதாரம், நிர்வாகம் என அனைத்து நிலைகளிலும் உயர்ந்து நின்று அரசியல் உலகின் மேதையாய் வாழ்ந்தவர். மொரிசியசு நாட்டின் விடுதலைக்கு இவரது பேச்சாற்றல் பெரிதும் பயன்பட்டது. மொரிசியசு விடுதலையடைந்தவுடன் அரசியலமைப்புச்சட்டம் உருவாக்கியவர்களுள் இவர் முதன்மையானவர்.

இலண்டனில் படித்து வழக்கறிஞர் பட்ட பெற்ற இவர் விடுதலை மொரிசியசின் முதல் கல்வியமைச்சர் என்ற பெருமையைப் பெற்றவர். இவ்வாறு அரசியல் தளத்தில் நின்று உழைத்த முன்னோடித் தமிழர்களின் தியாக வரலாறு இன்றைய தலைமுறையினருக்கு ஓர் உந்து சக்தியாக இருந்து வருகிறது.

இன்றைய தமிழ் இளைஞர்களிடம் மொழியுணர்வு ஆழமாக உள்ளது. ஒருமுறை மொரிசியசு ரூபாய் நோட்டில் ஆங்கிலம், தமிழ், இந்தி என்ற முறையில் இருந்ததை மாற்றி ஆங்கிலம், இந்தி, தமிழ் என்று மாற்றி ரூபாய் நோட்டுக்கள் அச்சடிக்கப்பட்டன.

இதைக் கண்டு தமிழ்மக்கள் அனைவரும் தமிழ் அமைச்சர் உட்பட ஒன்றுகூடி மொரிசியசு தமிழ்க் கோயில்கள் கூட்டிணைப்பு அலுவலகத்துக்கு எதிரில் ஒன்று திரண்டு மாபெரும் கண்டனப் போராட்டத்தை நடத்தினர். இந்தத் தீவிரமான உணர்வுகளை உணர்ந்த அரசாங்கம் அந்த ரூபாய் நோட்டுக்கள் அனைத்தையும் ஒரே நாளில் திரும்பப் பெற்றுக் கொண்டது. மீண்டும் தமிழ் அதற்குரிய இடத்தில் அச்சிடப்பட்டு புதிய மொரிசியசு ரூபாய் நோட்டுக்கள் வெளியிடப்பட்டன. இந்த நிகழ்வு தமிழ் உணர்வு நீறுபூத்த நெருப்பாய் அவர்களிடம் நிறைந்திருப்பதைக் காட்டுகிறது. பேச்சுத்தமிழை இழந்துவிட்ட சூழலில் அதை மீண்டும் கொணர்வதே இன்றைய இளைஞர்களின் வேட்கையாக இருந்து வருகிறது. அரசாங்கமே முன்கை கொடுத்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.







## இலக்கிய ஆளுமைகள்

மொரிசியசின் முதல் தமிழ்க் கவிஞர் எனும் முத்திரையைப் பதித்தவர் **துளசிங்க நாவலர்.** பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்த பன்மொழிப் புலவராக விளங்கிய இவரின் இலக்கியப் பணிகள் மொரிசியசின் இலக்கிய வரலாற்றில் மிகச்சிறந்த இடத்தைப் பெறுபவை. இவர் 1911 ஆம் ஆண்டு விகட எக்களத் தூதன் என்ற ஆங்கிலம் தமிழ் இரு மொழி இதழை வெளியிட்டு நடத்தியவர். இவ்விதழில் பல கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதி மொரிசியசின் தமிழ் இலக்கிய வரலாற்றைத் தொடங்கி வைத்தவர்.

மொரிசியசு தமிழ் இலக்கிய வரலாற்றில் இலக்கிய வளர்ச்சிக்கு அழுத்தமான பங்களிப்பைச் செய்தவர் **பெருமாள் சுப்பராயன்.** இவருடைய **"தியானபிமான கீதங்கள்"** என்ற கவிதைத் தொகுப்பு அனைவராலும் பாராட்டப்பட்டது. சமயத்தின் பெயரால் தமிழ்ப் பாமரர்கள் ஏமாற்றப்பட்டு வருவதை முதன்முதலில் இவருடைய கவிதைகளே அம்பலப்படுத்தி அடித்தள மக்களை விழிக்க வைத்தன.

"மெய்நிறைந்த நூலறியாது
மேதினியோரை மயங்கவிட்டுப்
பொய் மந்திரங்களைச் சாற்றிப்
புரிகின்றனர் பகல் திருட்டு" [9]

என்றெல்லாம் கவிதை பாடித் தமிழ் மக்களுக்குப் புதிய பாதையைக் காட்டியவர் இவர். இவருடைய நூற்றாண்டு விழா மகாத்மாக காந்தி நிறுவனம் 1986ஆம் ஆண்டு கொண்டாடியுள்ளது.

மொரிசியசு மண்ணில் தோன்றிய தமிழறிஞர்கள் வரிசையில் இராசரத்தினம் சங்கிலி குறிப்பிடத்தக்கவர். கவிதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு எனப் பல நிலைகளிலும் தன் படைப்புகளை வழங்கியுள்ளார்.

உரிமையை இழந்து வாழவா?
இதனையே உன்னிப் பாரடா
கோழையாய் வாழ்தல் முறையா
கயமையை விட்டு வாழடா [10]

எனத் தமிழ் இளைஞர்களைத் தட்டியெழுப்பும் பல பாடல்களைத் தந்தவர் இவர். **"மொரிசியசு தீவில் தமிழர்களின் சிறு சரித்திரம்"**[11] என்னும் தமிழர் வரலாற்று நூலை முதன்முதலாக எழுதிப் பதிவு செய்த இவரது இலக்கியப் பணிகள் உன்னதமானவை.

தமிழ்ப் பண்பாடு உள்ளடக்கி தமிழ் மொழியை வளர்ப்பதில் **சாலாட்சி அம்மையாரின்** பங்கு குறிப்பிடத்தக்கது. 1916 ஆம் ஆண்டில் பிறந்த அவர் 'அம்மா காசி' எனவும் அழைக்கப்பட்டார். அவர் படித்த தமிழை மாணவர்களுக்குப் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்தோடு 1952ஆம் ஆண்டில் தம் அக்காவின் வீட்டில் ஒரு சிறிய தமிழ்ப் பள்ளி ஒன்றை உருவாக்கி அன்றாடம் மாலையில் வகுப்பு நடத்தி வந்தார். அம்மா காசி அவர்கள் ஐயா சங்கிலியிடம் தமிழைத் தொடர்ந்து கற்று வந்தார். அவர் பல ஊர்களுக்குச் சென்று தமிழ்ச் சங்கத்தார்களைச் சந்தித்துத் தமிழ்ப் பள்ளிக்கூடம் உருவாக்கத் தேமதுரத் தமிழ் ஓசை ஊரெல்லாம் பரவும் வண்ணம் பாடுபட்டார். எண்பது வயது வரை 'பெல்விலெஜ்' (Bel village) அருள்மிகு காளியம்மன் திருக்கோவிலுக்கு அருகில் காணப்பட்ட தமிழ்ப் பள்ளி ஒன்றில் அவர் தமிழ் மொழியைக் கற்பித்திருந்தார்.

பேராசிரியர் அருணாசலம் புட்பரதம் அவர்கள் மொரிசியசு நாட்டில் தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர்களுள் முதன்மையானவர். இவர் மகாத்மா காந்தி நிறுவனத்தில் பணிபுரிந்த காலத்தில் தமிழ் ஆசிரியர் கழகம் ஒன்றை ஏற்படுத்தி நடத்தி வந்தார். 2001 ஆம் ஆண்டு எட்டாம் உலகச் சைவ மாநாட்டை மொரிசியசில் சிறப்பாக நடத்திக் காட்டினார்.

மூன்றாம் தமிழாய் விளங்கும் நாடகத் தமிழை வளர்த்தெடுத்தவர் விநாயகம் பிள்ளை. மொரிசியசு தமிழ் வானொலியில் நாடகங்கள் ஒலிபரப்பிப் புகழடைந்தவர். தற்போது பொன்.திருமலைச்செட்டி கவிதை, நாடகம், கதை என மூன்று நிலைகளிலும் படைப்புப் பணிகளைத் திறம்பட ஆற்றி வருகிறார். மொரிசியசு தமிழ் நாடகங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

இன்று சு.பொன்னன், கேசவன் சொர்ணம், கிருஷ்ணம்மாள் முனிகாடு, சங்கராமணி மாணிக்கம், உமாதேவி அழகிரி போன்றோர் எளிய சிறுகதைகளை எழுதி வருகின்றனர். சிவப்பிரகாச முத்தையன் அவர்களால் எழுதப்பட்ட மொரிசியசின் முதல் சிறுகதைத் தொகுப்பு **“செதில்கள்”** 2012 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.[12]

இலக்கிய மதிப்பீடுகளைப் பெறும் வகையில் மொரிசியசில் படைப்பிலக்கியங்கள் தோன்றுவதற்கு மேற்கண்டவர்களின் படைப்புகள் தூண்டுகோல்களாய் அமையும். இதுவரை மொரிசியசில் தமிழ்நாவல் எதுவும் எழுதப்பெறவில்லை. ஆனால் மொரிசியசு தமிழரின் குடிபெயர்வை மையமிட்டு பிரான்சு நாட்டில் வாழும் நாகரத்தினம் கிருஷ்ணா எழுதிய ‘நீலக்கடல்’ [13] நாவல் சிறப்பானது.

**இசையாளுமைகள்**

தமிழ் இசை வளர்ச்சியில் ஆர்வம் காட்டி ஊக்கம் அளித்து இக்கலையை வளர்த்தவர்களுள் முக்கியமாகக் கருதப்படுபவர்கள் சுப்பையா முதலியார், வடிவேல் செல்லன், இராசரத்தினம் சங்கிலி, பொன்னுசாமி திருமலைச்செட்டி ஆகியோர் ஆவர்.

சுப்பையா முதலியார் தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமை மிக்கவர். இலக்கிய நயம் நிறைந்த கவிதைகளைப் புனைவதில் ஆற்றல் வாய்ந்தவராகத் திகழ்ந்தவர். இசைப்புலமையும் இவருக்கு இருந்தது.

போர்ட்லூயிசு நகரில் ‘பரம பக்த சுகுண விலாச பஜன சங்கம்’ என்னும் அமைப்பை நிறுவியவர்களுள் ஒருவர். இச்சங்கத்தின் வழி ஆண்டுதோறும் புரட்டாசித்

திங்களில் கோவிந்தன் திருவிழாவை மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்தார். இன்று இத்திருவிழா நாடெங்கும் மிகச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டு வருவதற்குரிய அடித்தளத்தை நிறுவியவர் சுப்பையா முதலியார் ஆவார். இத்திருவிழா மூலம் தமிழில் கலைநிகழ்ச்சிகளை நடத்தி தமிழ்க் கலைகளான கும்மி, கோலாட்டம், நடனம், இசை ஆகியவை மறைந்து போகாமல் காத்து வளர்த்தார்.

மொரிசியசு தமிழ்க் கோயில்கள் கூட்டிணைப்பு வேண்டுகோளுக்கிணங்கி, 'பொது வழிபாடு' என்னும் நூலைப் படைத்துத் தந்தார். தமிழரின் திருமணங்களில் தமிழில் வாழ்த்துரை வழங்கும் மரபை உண்டாக்கினார். இத்திருமணங்களுக்கு ஏற்ற பாடல்களை எழுதி, இசையில் அமைத்துப் பாடச் செய்தார். மேலும், இவர் 1970 ஆம் ஆண்டில் மொரிசியசு சனாதனத் தமிழ்க் கோயில் நிர்வாகிகள் விரும்பிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க 'பிரார்த்தனைமாலை' என்னும் நூலை இயற்றினார். இந்நூலில் இப்பெரியார் புனைந்த பாடல்கள் புகழ்வாய்ந்தவை.

"இமயமுதல் இலங்கைவரை எங்கும் உமதிரு கோயில்
இருப்பினும் எங்கள் மானசீக பூசையில்
வைராக்கிய பக்தியில்
எங்களோடு இரண்டறக் கலக்கும் உமது மகிமைப் பிரவாகம்
பேசுதற்கரிதே இடைவிட்டு நில்லாது பக்கத்துணை இருப்பீராக!"

என்ற விநாயகர் பிரார்த்தனைப் பாடலும்,

"வாடிய நாரைக்கு முத்தியைத் தந்த திருவருட் பெருங்கடலே!
வாணிச்சி பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பெற்ற தயாளமூர்த்தி
தீயினில் புழுகுபோல் துடிக்கிறோம் அபயாஸ்தம் காட்டி, எம்முன்
விரைவில் மான்முழு பம்பை திரிசூல மோட்ருட் காட்சி யளிப்பீராக!"

என்ற சிவபெருமான் பிரார்த்தனைப் பாடலும்,

"தினையளவு சுகத்திற்கு முனைகின்ற பாழ்மனதைத் திருவருளே
வினைதீர்க்கும் உமதடியில் சிரம் தாழ்த்திப் பணிகிறோம், இடி
மழை, புயல், அனல் இவை எல்லாம் வருத்தினாலும் ஞான பண்டிதா
மனமுவந்து திடமுடன் உமது பாதமே நாடுகிறோம் ஆதரிப்பீராக!" [14]

என்ற முருகக் கடவுள் பிரார்த்தனைப் பாடலும் குறிப்பிடத்தக்கவை.

இசைத்தமிழ் வளர்த்த மற்றுமொரு தமிழ்ப் பெரியார் வடிவேல் செல்லன் ஆவார். இவர் தொடக்கப் பள்ளியில் முழுநேரத் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிச் சிறுவர்களுக்கு இனிய தமிழ் மொழியையும் தமிழிசையையும் கற்பித்தார். பள்ளியில் கலைமகள் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார். அதன்பிறகுதான் நாடெங்கும் கலைமகள் விழா எடுக்கும் பழக்கம் ஏற்பட்டது.

போர்ட்லூயிசில் சுப்பையா முதலியார் அவர்கள் உருவாக்கிய 'பரம பக்த சுகுண விலாச பஜன சங்கத்தில்' இசைத்தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். தமிழ் நாட்டிற்குச் செல்லாவிட்டாலும் தமிழ் நாட்டிலுள்ள ஆறுமுருகனுக்கு ஆறுபடை வீடுகளைப் பற்றி 'ஆறுமுக சுவாமி விருத்தம்', 'முருகவேல் மாலை'. 'வடிவேல் வடிவேலனே' போன்ற பாடல்களைப் படைத்துத் திருமுருகனுக்குக் காணிக்கை செலுத்தினார். காவடித் திருவிழாக்களில் இன்றும் அப்பாமாலைகளைப் பக்தர்கள் பாடுவது உண்டு.

இசைத் தமிழின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர்களுள் இராசரத்தினம் சங்கிலி ஒருவராவார். இவர் தமிழில் கவிதைகளையும் பாடல்களையும் இயற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். நாட்டுப் பற்றும் மொழிப் பற்றுமுடைய இத்தமிழ்ப் பெருமகனார் மொரிசியசு நாட்டுக்கு ஒரு வாழ்த்துப் பாடலை எழுதினார். வீரப் பாடல் பலவற்றையும் புனைந்தார். தமிழ்த் தாயின் உள்ளத்தினை மகிழ்விக்க பல பாடல்களை இயற்றினார். சான்றாக, இவர் 'கும்மி' என்னும் தலைப்பைக் கொண்டு எழுதிய பாடல் சிறப்பானது.

பல்லவி

நடம் புரிந்து பாடுவோம்
நாதனைப் பணிகுவோம்
நடத்தை என்றும் ஓம்புவோம்
நலம் பெற வொழுகுவோம்

சரணங்கள்

அந்தனை வணங்குவோம்
அன்பு கொண்டு வாழுவோம்
நித்தம் தொண்டு செய்குவோம்
நாட்டைப்பாது காக்குவோம்

கற்றவரை நாடுவோம்
கல்விபெற்று நல்குவோம்
நற்றமிழை ஓதுவோம்
நன்மை பெற்று உய்குவோம்

ஏழை என்ற போதிலும்
என்ன துன்பம் மோதிலுனும்
கோழை என்று வாழ்ந்திடோம்
கொடியருக்குத் தாழ்ந்திடோம் [15] (வசந்தம், 1989)

இராசரத்தினம் சங்கிலி ஓரங்க நாடகங்களையும் எழுதியுள்ளார். அந்நாடகங்களிலும் இசைத்தமிழ் தவறாமல் இருந்தது. இவ்வாறு அவர் படைத்த பாடல்களெல்லாம் தமிழர்களின் உள்ளத்தில் இன்று வரை பதிந்திருப்பதை உணரலாம்.

முனைவர் பொன்னுசாமி திருமலைச்செட்டி அவர்கள் மகாத்மா காந்தி நிறுவனத்தில் மொழிப்புலத் தலைவராகப் பணிபாற்றியவர். இவர் மொரிசியசு நாட்டில் தமிழ் மொழியைப் பரப்புவதிலும் அதன் எதிர்காலத்தை உருவாக்குவதிலும் விடாமுயற்சியுடன் உழைத்து வருபவர். தமிழ் மொழிமீது ஆர்வம் மிக்கவர். கவிதைகளை இயற்றுவதில் திறமையுள்ளவர்.

1977 ஆம் ஆண்டில் தைப்பூசக் காவடித் திருவிழாவை முன்னிட்டு, தமிழர்களின் பக்தி உணர்வைத் தூண்டுவதற்கு, இவர் 'மொரிசியசு முருகன் பாமாலை' என்ற நூலை வெளியிட்டார். பக்தர்கள் அந்நூலில் உள்ள முருகப்பாடல்களைத் திருவிழாக்களில் பாடுவர்.

இவருடைய கொடி வணக்கம் பாடல் மிக இனிமையானது.

நாட்டுக் கொடியை ஏற்றிவைத்தே
பாட்டுப் பாடி வணங்கிடுவோம்
ஏட்டில் வகுத்த வழிகளெல்லாம்
காட்டி நன்றே காத்திடுவோம்

அலைகடல் கழுவும் மணற்பரப்பும்
மலைத்தொடர் காட்டும் மேலழகும்
கலையுளம் வளர்க்கும் ஆற்றொழுக்கம்
தலைவளம் என்றே பாடிடுவோம்

வீசும் தென்றல் காற்றினிலே
வெற்றி யாவும் கண்டிடுவோம்
அசையும் கரும்பு பயிரினிலே
ஏற்றம் நாடு பெற்றிடுமே

மக்கள் இனங்கள் பலவுண்டு
மனதில் ஊக்கம் நிறையுண்டு
சிக்கல் இல்லை வழக்கினிலே
சேர்ந்தே வாழ்ந்தோம் மண்மேலே[16]

வகுப்புப் பாடநூல்களில் முனைவர் பொன்னுசாமி திருமலைச்செட்டி படைத்த பாடல்களின் பெயர்கள்

| வகுப்புகள் | பாடல்களின் தலைப்பு |
|---|---|
| முதல் வகுப்பு | கும்மி கொட்டி ஆடுவோம் |
| நான்காம் வகுப்பு | எங்கள் நாடு |
| ஐந்தாம் வகுப்பு | தீபாவளி |
| ஆறாம் வகுப்பு | முருகன் பாமாலை |

இவர் தமிழ்மொழியின் மீது எல்லையற்ற அன்பினைச் செலுத்துகின்றவர். இவர் தமிழ்மொழியின் இயல், இசை, நாடகம் ஆகிய முப்பிரிவிலும் ஈடுபட்டு அருமையான தமிழ்ப் படைப்புகளை எழுதி மொரிசியசு நாட்டில் தமிழிலக்கியச் செழுமைக்குப் பாடுபட்டு வருகிறார். இன்று வரைக்கும் இவரது இன்னிசைப் பாடல்கள் அனைத்தும் பல்வேறு விழாக்களில் மிகச் சிறப்புடன் பாடப்படுகின்றன.

மொரிசியசு நாட்டில் கர்நாடக இசையைக் கற்றுக் கொண்ட முதல் கலைஞர் இராதா கிருஷ்ணன் என்று அழைக்கப்படுகின்ற இராதா திருவேங்கடம் ஆவார். தமிழிசை மீது மிகுந்த பற்று வைத்தவர். மொரிசியசு நாட்டில் தொடக்கத்தில் வட இந்திய இசை மட்டும் இருந்ததால் இவர் தமிழிசையைப் பரப்ப விரும்பினார். ஆகவே, 1969 ஆம் ஆண்டில் அவர் சென்னைக்குச் சென்று தமிழ் நாட்டு அரசாங்க இசைக் கல்லூரியில் கர்நாடக இசையைப் பயின்றார். இத்துறையில் பட்டம் பெற்று மொரிசியசு நாட்டுக்குத் திரும்பி வந்தார்.

1972 ஆம் ஆண்டில் திரும்பி வந்ததும், இவர் 'பொபாசன்' (Beau0Bassin) ஊரில் ஓர் இசைப்பள்ளியில் கர்நாடக இசையாசிரியராக விளங்கினார். இசைக்கலைமீது ஆர்வம் கொள்கின்றவர்களிடம் இசைப்புலமையை வளர்த்தெடுத்தார். மேலும் இவர் மகாத்மா காந்தி நிறுவனத்தில் கர்நாடக இசைக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தவர். அங்கு இசைத்துறையின் முதல் தலைவராக இருந்தார். இவருடைய வாழ்க்கைத் துணைவியாகிய திருமதி பேபி திருவேங்கடம் அவர்களும் தமிழ்நாட்டில் கர்நாடக இசையை கலாச்சித்திர இசை, நடனக் கல்லூரியில் பயின்றவர். இவர்கள் இருவரும் தேசிய அளவில் கொண்டாடப்படும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இசைப்பணி ஆற்றி வருகின்றனர்.

சிறு வயது தொட்டு திருமதி அமராவதி அரங்க நாயகி நாயுடு தமிழ்மொழியிலும் இசைக்கலையிலும் மிகுந்த அன்பு காட்டினார். இவர் சுப்பையா முதலியார் மற்றும் இராசரத்தினம் சங்கிலி முதலிய ஆசிரியர்களிடம் தமிழ்மொழியையும் தமிழ்ப் பாடல்களையும் கற்றுக் கொண்டார். ஒன்பது வயதில் திருமதி அமராவதி அரங்கநாயகி நாயுடு தமிழ்ப் பாடல்களைப் பாட ஆர்வம் காட்டத் தொடங்கினார். அவர் 'பரம பக்த சுகுன விலாச சங்கத்தில் ஈடுபட்டு கோவிந்தன் திருவிழா நாளில் பக்திப் பாடல்களை மேடையில் பாடினார். அது மட்டுமின்றி தமிழ்ப் பள்ளிக்கூட நிறைவு விழாக்களிலும், திருமண விழாக்களிலும், பிற சமய விழாக்களிலும் பெரியார் வடிவேல் செல்வப் பிள்ளை எழுதிய சில தமிழ்ப் பாடல்களைப் பாடினார். அருணாசலம் புட்பரதம் அவர்கள் வானொலி நிலையத்தில் அறிவிப்பாளராக இருந்தபொழுது, திருமதி அமராவதியின் பாடும் ஆற்றலைக் கண்டு அவரைத் தமிழ் நிகழ்ச்சியில் பாட வைத்தார்.

திருமதி அமராவதி 1974 ஆம் ஆண்டில் 'தமிழ் நாட்டு அரசாங்க இசைக் கல்லூரி' க்குச் சென்று மூன்று ஆண்டுகள் தமிழிசையைக் கற்றுக் கொண்டார். 1978

ஆம் ஆண்டில் அவர் கர்நாடக இசையில் 'சங்கீத வித்வான்' என்ற பட்டம் பெற்றார். ஓர் ஆண்டுக்குப் பின்னர் அவருக்கு 'இசைமணி' என்ற ஓர் உயர்ந்த பட்டமும் கிட்டியது.

இச்சிறந்த கலைஞர் கோவிந்தன் திருவிழா, தைப்பூசக் காவடித் திருவிழா, தீமிதித் திருவிழா போன்ற திருவிழாக்களை ஒட்டி பக்திப் பாடல்களைக் கொண்ட ஒலிநாடாக்களை வெளியிட்டார். அவளது 'ஸ்ரீஹரி பரந்தாமன்' என்னும் கோவிந்தன் பாடலும், 'தைப்பூசம் வந்ததையா' என்ற முருகப் பாடலும் நாட்டளவில் புகழ் பெற்றவை. 'பெல் வியு மொரேல்' அருள்மிகு பால சுப்பிரமணிய திருக்கோயிலின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 'திருப்புகழ் தேன் அமிர்தம்' என்ற ஒலிநாடாவை வெளியிட்டார்.

இக்கலைஞர் திருமுறைப் பாடல்களை ஓதுவதில் பயிற்சிப் பெற்றவர். சிங்கப்பூர், மலேசியா, தென்னாப்பிரிக்கா போன்ற இடங்களுக்குச் சென்று கலைநிகழ்ச்சிகளை நடத்தி மொரிசியசு நாட்டின் பெருமையைப் பரப்புவதில் வெற்றி கண்டவர்.

திருதேவன் ஐயாகுட்டி ஒன்பது வயதிலேயே இசையின்மீது மிகுந்த ஆர்வம் காட்டியவர். இவருடைய குடும்பத்தில் அனைவரும் இசைக் கலையில் ஈடுபட்டவர்கள். 1990 ஆம் ஆண்டு இவர் தமிழ் நாட்டுக்குச் சென்று தமிழ் நாட்டு அரசாங்க இசைக் கல்லூரியில் கர்நாடக இசையைக் கற்றார். 1991 ஆம் ஆண்டில் இவர் அண்ணாமலை பல்கலைக்கழக்ததில் கர்நாடக இசைத்துறையில் தமது இளங்கலைப் பட்டப் படிப்பை மேற்கொண்டார். சென்னையில் சங்கர ஐயர் என்ற புகழ் பெற்ற இசைக்கலைஞரிடம் கர்நாடக இசையைக் கற்றுக்கொண்டார்.

1996 ஆம் ஆண்டில் மொரிசியசு நாட்டுக்கு வந்து மகாத்மா காந்தி நிறுவனத்தில் கர்நாடக இசையைப் பட்டய வகுப்பில் அறிமுகப்படுத்துவதற்குப் போராடி. வெற்றி கண்டார். இன்று வரை இந்நிறுவனத்தில், அவர் கர்நாடக இசை வகுப்பை நடத்தி வருகிறார். அது மட்டுமின்றி, இக்கலைஞர் பல்வேறு கலைநிகழ்ச்சிகளை இந்திய நாட்டிலும், இங்கிலாந்து நாட்டிலும், இரேயூனியன் தீவிலும் நடத்துகிறார். திருமுறை, திருப்புகழ், கோவிந்தன் பாடல்கள் முதுலியவற்றைப் பற்றி இசைத் தட்டுகளை வெளியிட்டுள்ளார்.

ஆதி சங்கர பெருமாள் அவர்கள் மொரிசியசு நாட்டில் ஒரு புகழ் பெற்ற இசைக் கலைஞராகத் திகழ்கின்றார். 1950 ஆம் ஆண்டில் இவருடைய தந்தையார் 'வௌஹினி இசைக்குழு' (Vauhini band) என்ற குழுவை அமைத்தவர். எனவே சிறுபருவத்திலிருந்தே இசைக்கலையின் மீது நாட்டம் செலுத்த இவருக்கு வாய்ப்பு கிட்டியது.

1980ஆம் ஆண்டில் அவர் மகாத்மா காந்தி நிறுவனத்தில் இராதா திருவேங்கடம் அவர்களிடம் கர்நாடக இசையைக் கற்றுக்கொண்டார். 1995 ஆம் ஆண்டில் இவர் மகாத்மா காந்தி நிறுவனத்தின் ஆதரவைப் பெற்று இசைத் துறையில் தமது மேற்படிப்பைச் சென்னையில் மேற்கொண்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கர்நாடக இசையைக் கற்றுக்கொண்டு 1997 ஆம் ஆண்டில் இளங்கலைப் பட்ட வகுப்பில் முதல் மாணவராக வெற்றிப் பெற்றார்.

சென்னையில் இருந்தபொழுது, இவர் பாண்டிச்சேரி வானொலி நிலையத்தில் பல்வேறு தமிழிசை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தார். இந்திய நாடு ஐம்பதாம் விடுதலை நாள் விழாவைக் கொண்டாடியபோது இவரும் பங்கேற்றுப் பாடினார். இளங்கலைப் பட்டப் படிப்பு முடித்துவிட்டு, 2000ஆம் ஆண்டில் இவர் மகாத்மா காந்தி நிறுவனத்தில் தமது அரங்கேற்றத்தைச் செய்தார். இந்நிறுவனத்தில் சார்பில் இவர் பல்வேறு திருவிழாக்களிலும், கலைநிகழ்ச்சிகளிலும் தமிழிசைப் பாடல்களைப் பாடி வருகிறார்.

இச்சிறந்த கலைஞர் 1998 ஆம் ஆண்டில் பக்திப் பாடல்களைக் கொண்ட ஓர் ஒலிநாடாவை வெளியிட்டார். அண்மையில் ‘பிராணவம்’ என்ற தலைப்பில் ஓர் இசைத்தட்டினை வெளியிட்டார். மேலும், இவர் **‘Singing with Saivaite Saints-From Tirumurai to Natchintanai’** என்ற ஆங்கில நூல் எழுதித் தமிழிசையை வளர்த்து வருகிறார். இப்போது மகாத்மா காந்தி நிறுவனத்தில் மாணவர்களுக்கு கர்நாடக இசையையும் தமிழிசையையும் கற்பித்து வருகிறார்.

இசைக்கருவிகள் வாசிப்பதிலும் மொரிசியசு தமிழர்கள் தலைசிறந்து விளங்குகின்றனர். இளம் பருவத்திலேயே மாயவன் மருதை ‘தபலா’ இசைக்கருவியை நாதன் வீரப்பன் அவர்களிடம் வாசிக்கக் கற்றுக்கொண்டார். கோவிந்தன் திருவிழா நாட்களில் அவர் தம் குருவோடு பல்வேறு கோயில்களுக்குச் சென்று கலைநிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். பின்னர் மிருதங்கத்தின் மீது ஆர்வம் காட்டினார். எனவே, இவர் சென்னைக்குப் போய்த் தமிழ் நாட்டு அரசாங்க இசைக் கல்லூரியில் மிருதங்கக் கலையைக் கற்றுக் கொண்டு ‘மிருதங்க வித்துவான்’ என்ற பட்டமும் ஒரு தங்கப்பதக்கமும் பெற்றார்.

2003 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மொரிசியசு தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் முழுநேர இசையாசிரியராகப் பணியாற்றுகின்றார். இன்று நாற்பது மாணவர்கள் அவரிடம் மிருதங்கக் கலையைப் பயில்கின்றனர்.

இராஜேசன் மருதை 1990 ஆம் ஆண்டு முதல் இந்து இசைக்குழுவில் (இந்து பண்டு) புல்லாங்குழலை வாசித்து வருபவர். 1994 ஆம் ஆண்டில் திருமதி அமராவதி நாயுடு ஊக்கத்தினால், இவர் தமிழ் நாட்டிற்குச் சென்று தமிழ் நாட்டு அரசாங்க இசைக் கல்லூரியில் வீணைக் கலையைப் பயின்று 'வித்துவான்' பட்டம் பெற்றார்.

2000ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி நிறுவனத்தின் சார்பில், இக்கலைஞர் அருள்மிகு சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் மாணவர்களுக்கு வீணைப் பயிற்சியைத் தந்தார். இன்று இவர் மொரிசியசு தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் வீணைக் கலையைக் கற்பிக்கின்றார்.

மொரிசியசு நாட்டில் தமிழ் இசையைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு சில இசைக்குழுக்கள் இயங்கிக் கொண்டு வருகின்றன. திருவிழாக்களிலும், திருமணங்களிலும் இன்று இசைக்குழுக்கள் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. அவற்றுள் இந்து இசைக்குழு, வீரமுண்டார் இசைக்குழு, மோரொஸ் இசைக்குழு, சங்கம் இசைக்குழு போன்றவை முக்கியமானவை. இவ்வாறு மொரிசியசில் தமிழிசை பலராலும் முன்னெடுக்கப்பட்டு இசைப்பண்பாடு தக்க வைக்கப்பட்டு வருகிறது.

**நாடகக்கலை**

மொரிசியசில் குடிபெயர்ந்த தமிழர்கள் தொடக்க காலத்தில் தமிழ்நாட்டுத் தெருக்கூத்துக்கள் சிலவற்றை அப்படியே நடத்தி வந்தனர். கரும்பு வயல்களிலும் ஆலைகளிலும் கடுமையாக உழைத்து வந்த தமிழ் மக்களுக்கு இக் கூத்துக்கள் மிகச் சிறந்த பொழுதுபோக்காக விளங்கின. இவற்றைக்காண கரும்புத்தோட்ட உரிமையாளர்களும் வருவதுண்டு; சில நேரங்களில் பொருளுதவியும் செய்துள்ளனர்.

மொரிசியசில் அந்தக் காலத்தில் நடிக்கப்பட்ட கூத்து நாடகங்களுள் அரிச்சந்திர நாடகம், நல்லதங்காள் கதை, தேசிங்குராஜா கதை, பாரதக்கதை, மதுரை வரன் நாடகம், வெங்கடேச பெருமாள் நாடகம், கோவிலன் கர்ணகிக்கதை ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

மொரிசியசில் தெருக்கூத்து கோவில் சார்புக் கலையாகவும் விளங்கியது. சமய விழாக்களின்போதும் கோவில்களில் கூத்து நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வள்ளித் திருமணம், அர்ச்சுணன் தபசு, பக்த பிரகலாதன், மயில் ராவணன், திலகவதியார் முதலியவை குறிப்பிடத்தக்கவை.

இதனால் மொழிப் பண்பாடும் சமயப் பண்பாடும் இணைந்து பரவின. மொரிசியசில் இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் அரசியல் மற்றும் சமூக மாற்றங்கள் காரணமாக நாடகக் கலையில் முன்னேற்றம் காணப்பட்டது. தெருக்கூத்து மரபு நாடக மரபாக மாற்றமடையத் தொடங்கியது. பண்டிதர் பெருமாள் சுப்பராயன் இயற்றிய 'சுதாரம்' என்ற செய்யுள் நாடகம் போர்ட் லூயி மாநகராட்சி நாடக அரங்கில் நடிக்கப்பட்டது. யூமிழறிஞர் சுப்பையா முதலியார் எழுதிய 'தமழ்மன்னன் குமணன்' என்ற நாடகம் நூல் வடிவம் கண்ட முதல் மொரிசியசு நாடகமாகும்.

முத்துக்குமரன் சங்கிலி எழுதிய "பாரிஸ்தர் கமலநாதன்" நாடகமும் இராசரத்தினம் சங்கிலி எழுதிய 'இன்பமான தண்டனை' என்ற நாடகமும் புகழ் பெற்றவை. ஔவையார், திருவள்ளுவர், வீரக்கண்ணகி, பாரதியார் போன்ற நாடகங்கள் தமிழர் வரலாற்றை மீள நினைக்க வைத்துத் தமிழ்ப் பண்பாட்டு மரபுக்கு ஒரு தொடர்ச்சியைத் தந்தவை.

வானொலியில் ஒலிபரப்பான பல தமிழ் நாடகங்கள் நகைச்சுவை உணர்வு மிக்கவை. தொலைக்காட்சி நாடகங்கள் இன்று மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன.

முத்துக்குமரன் சங்கிலி திருக்குறள் காமத்துப் பாலின் அடிப்படையில் ஒரு பிரெஞ்சு நாடகத்தை எழுதி மொரிசியசிலும் ரீயூனியன் தீவிலும் அரங்கேற்றினார். சிலப்பதிகாரக் கதையை ஆங்கிலத்தில் எழுதி சிலம்புச் செல்வர் மா.பொ.சி. அவர்கள் மொரிசியசுக்குச் சென்றிருந்தபோது அவருடைய முன்னிலையில் பிளாசா அரங்கில் அரங்கேற்றினார்.

மொரிசியசு தமிழ் நாடக வரலாற்றில் அந்த மண்ணின் மணத்தோடு நாடகம் செய்த பெருமை பழனிச்சாமி படையாச்சிக்கு உண்டு. கரும்பு வயல்களில் உழைக்கும் மக்களுக்காகப் போராடி ஆங்கிலேயர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான தியாகப் பெண்மணி 'அஞ்சலை' பற்றி இவர் எழுதிய ஆங்கில நாடகம் தமிழச்சியின் வீரத்தை உலகுக்குச் சொன்னது.

பேராசிரியர் அருணாசலம் புட்பரதம் இயற்றிய 'மருமகனார் வந்தார்' என்ற நாடகம் இளைஞர்கள் பலரை நாடகத்தின் பால் ஈர்த்த பெருமைக்குரியது.

1975 முதல் ஆண்டுதோறும் கலை மற்றும் பண்பாட்டு அமைச்சகத்தின் நாடகப் பிரிவு தமிழ் நாடகப் போட்டிகளை நடத்தி வருகிறது.

முனைவர் பொன்.திருமலைச்செட்டி புரட்சிக்கவி, கண்ணீர்த்துளி, நானும் மனிதன், ஆலெ ஊதுலெயே, இளமை பேசுகிறது எனப் பல நாடகங்களைத் தமிழுக்குத் தந்துள்ளார். மேலும் சுப்பையா பொன்னன், கதிர்வேல் சொர்ணம், கஸ்தூரி சின்னப்பன், இரேவதி சந்நியாசி போன்றவர்களும் இன்று தமிழ் நாடகக் கலையை வளர்த்தெடுத்து வருகிறார்கள்.

**பண்பாட்டு மையங்கள்**

**1. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்**

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் என்பது ஓர் அனைத்துலக அமைப்பு. தமிழர்கள் வாழும் நாடுகளில் எல்லாம் இதன் கிளைகள் பரவியுள்ளன. இவ்வமைப்பின் மொரிசியசு கிளையின் தலைவராகப் பெரியவர் மாணிக்கம் தங்கணமுத்து விளங்கினார். அவரது தலைமையில் எண்பதுகளில் நடந்த அனைத்துலகத் தமிழ் மாநாடு மற்றும் தமிழ்க்குடியேற்றத்தின் 250வது ஆண்டு நினைவுத்தூண் நிறுவுதல் ஆகியவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.



அவருக்குப் பின் வழிநடத்திச் செல்லும் ஆற்றல் படைத்தவர்கள் எவரும் இல்லாததால், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் செயற்பாடின்றி முடங்கியுள்ளது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கிளை மொரிசியஸில் தொடங்கப்பட்ட போது, தமிழ் மொழிப்பற்று பரவியது. இவ்வமைப்பின் சார்பில் மொரிசியசில் நடைபெற்ற அனைத்துலக மாநாட்டில் பங்கேற்க, பெரும்பாலான நாடுகளில் இருந்து பேராளர்கள் வருகை தந்தனர். மொரிசியஸ் அரசின் பேராதரவோடு நிகழ்ந்த அம்மாநாட்டில் தமிழில் அஞ்சல்தலை வெளியிடப்பட்டது. மொரிசியஸ் தமிழரிடையே மறுமலர்ச்சி விளைவித்த பெருமை இம்மாநாட்டுக்கு உண்டு.



*Fac simile of copper plate souvenir presented to delegates who attended the Conference.*

2, இந்திரா காந்தி பண்பாட்டு மையம்

இம்மையம் 1987 ஆம் ஆண்டிலிருந்து மொரிசியசு நாட்டில் இயங்கத் தொடங்கியது. இம்மையத்தில் உள்நாட்டுக் கலைஞர்களும் இந்திய நாட்டு இசைக் கலை வல்லுநர்களும் இசை வகுப்பை நடத்தி வருகின்றனர். 1994 ஆம் ஆண்டில் முனைவர் திருமதி ருக்மணி இரமணி அவர்கள் இந்திரா காந்தி பண்பாட்டு மையத்தில் கர்நாடக இசை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இவர் காலஞ்சென்ற பாபநாசம் சிவன் என்ற தமிழிசை மேதையின் புதல்வி ஆவார். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், திருமதி இராஜேசுவரி அவர்கள் தமிழிசை வகுப்பை நடத்தினார். அவர் இசைக்கருவி வாசிப்பதிலும் வல்லுநராகத் திகழ்ந்தார். ஐதராபாத் என்ற நகரத்திலிருந்து வருகை தந்த சீனிவாசு மூன்று ஆண்டு காலமாகக் கர்நாடக இசையைக் கற்பித்தார். இப்போது பரமேசுவரன் என்பவர் கர்நாடக இசையை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார். திங்கட்கிழமை தொடங்கி சனிக்கிழமை வரை கர்நாடக இசை வகுப்பு நடத்தப்படும். அது மட்டுமில்லாமல், கர்நாடக இசை தொடர்பாக அங்கே ஒரு சிறு நூலகமும் இருக்கிறது.

இந்திரா காந்தி பண்பாட்டு மையத்தில் அவ்வப்போது தமிழ் கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும். 2004 ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் அம்மையத்தின் அரங்கில் மூன்றாம் மெல்லிசை அமுதம் பாடல் போட்டி நிகழ்ந்தது. 2005 ஆம் ஆண்டில் கலைமாமணி பித்துக்குளி முருகதாசு ஒரு சிறந்த கலைநிகழ்ச்சியை வழங்கினார். 2009 ஆம் ஆண்டில் மொரிசியசு தமிழ்க் கோயில்கள் கூட்டிணைப்பின் ஒத்துழைப்பால் இந்திரா காந்தி பண்பாட்டு மையத்தில் ஒரு திருமுறைப் போட்டி நடந்தது. அந்தப் போட்டியில் சிறுவர் முதல் முதியோர் வரை பங்கு கொண்டார்கள். அப்போட்டி தமிழிசை ஆர்வலர்களுக்கு ஒரு நல்ல அனுபவமாக இருந்தது. மக்கள் தமிழிசை மீது மிகுந்த அக்கறை செலுத்துகிறார்கள் என்பது இப்போட்டியின் மூலமாக உறுதியானது.

3. மொரிசியசு தமிழ்ப் பண்பாட்டு மையம்

மொரிசியசு நாட்டில் பெரிய நிறுவனங்களைத் தவிர தமிழ் இசையைப் பரப்பச் சில அமைப்புளும் உண்டு. 2001 ஆம் ஆண்டில் மொரிசியசு தமிழ்ப் பண்பாட்டு மையம் தொடங்கப்பட்டது. இம்மையம் தமிழர்களுக்கு மிருதங்கம், வீணை, வயலின் கர்நாடக இசை முதலியவற்றைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு அளிக்கின்றது. அது மட்டுமல்லாமல், இசைக் கலையைப் பற்றிய கலைநிகழ்ச்சிகளையும் கருத்தரங்குகளையும் கண்காட்சிகளையும் அடிக்கடி நடத்துகின்றது. இன்று மிருதங்கம் மற்றும் வீணை

வகுப்புகளை அந்த மையத்தில் நடத்தப்படுகின்றன. 'திரு மாயவன் மருதை', திரு இராஜெசன் மருதை' என்பவர்கள் மொரிசியசு தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் இசை ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர்.

**மொரிசியசு தமிழ்ப் பண்பாட்டு மையம் நடத்துகின்ற இசை வகுப்புகள்**

| இசை | நாள் | மணி | இடம் |
|---|---|---|---|
| மிருதங்கம் | திங்கள்<br>செவ்வாய்<br>புதன்<br>வியாழன்<br>வெள்ளி | 15.00 முதல்<br>17.00 வரை | மொரிசியசு தமிழ்ப் பண்பாட்டு மையம் |
| | சனி | 09.00 முதல் 17.00 வரை | |
| | விடுமுறைநாட்கள் | 10.00 முதல் 17.00 வரை | |
| வீணை | திங்கள்<br>புதன்<br>வியாழன்<br>வெள்ளி | 13.00 முதல்<br>16.00 வரை | மொரிசியசு தமிழ்ப் பண்பாட்டு மையம் |
| | சனி | 09.00 முதல் 17.00 வரை | |
| | விடுமுறைநாட்கள் | 10.00 முதல் 17.00 வரை | |
| வீணை | செவ்வாய் | 15.00 முதல் 17.00 வரை | Rose-Belle மகா ஜன சங்கம் |

மொரிசியசு தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் இசையைக் கற்றுக் கொள்கின்ற மாணவர்களின் தொகை குறைந்து கொண்டே வருகின்றது. மாணவர்கள் இசையை வெறும் பொழுதுபோக்காக மட்டும் கருதும்போக்கே இதற்கு மூலகாரணம். தமிழிசை நம் பண்பாட்டின் வேர் என்ற புரிதல் மொரிசியசு மாணவர்களிடம் இன்னும் மலரவில்லை.

**மொரிசியசு தமிழர் ஐக்கியம்**

மொரிசியசில் தமிழர்களின் தனித்துவத்தையும் நலத்தையும் பேணிக்காக்கும் நோக்கில்1953ஆம் ஆண்டில் தமிழுள்ளம் படைத்தவர்கள் சிலர் சேர்ந்து மொரிசியசு

தமிழர் ஐக்கியம் என்ற அமைப்பை உருவாக்கிச் சமயப் பணிகளிலும் பண்பாட்டுப் பணிகளிலும் ஈடுபட்டனர்.

தமிழர்கள் ஊர்தோறும் தனித்தனிக் கோவில் அமைப்புக்களை ஏற்படுத்திச் சமூகப்பணி ஆற்றி வந்த சூழலில் பெரியவர் சுந்தரம் பெருமாள் அவர்கள் தலைமையில் மொரிசியசு தமிழர் ஐக்கியம் உருவானது, இந்த அமைப்பினர் பரிமாற்ற உதவி அமைப்பு என்ற பெயரில் தமிழ்ச் சமயத்தைத் தழுவியோருக்குப் பொருளுதவி செய்து வந்தனர்.

மொரிசியசு தமிழர் ஐக்கியச் சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் தமிழ்க் கல்வியைப் புகட்டும் பணி முதன்மையானது. ஏறக்குறைய நாற்பது கிளைகளை நாடுமுழுவதும் ஏற்படுத்தி அவற்றின் மூலம் மாலைப் பள்ளிகளை நடத்தினர். இதில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ்த் தேர்வு நடத்திச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் பள்ளி விழாக்களை நடத்துவதன் மூலம் தமிழ் மக்களிடம் தமிழ்ப் பற்றினையும் ஒற்றுமையினையும் வளர்த்து வருகின்றனர்.

இச்சங்கத்தில் உள்ள இளைஞர் அணியினரின் ஒத்துழைப்போடு நாடகப் போட்டி, இசைப்பாடல் போட்டி, சமயம் மற்றும் பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் பிற சங்கங்களுடன் இணைந்து ஆடி பதினெட்டாம் பெருக்கு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடி வருகிறது. எபன் ஆற்றங்கரையில் நடைபெறும் இவ்விழாவில் பெருந்திரளாக மக்கள் பங்கேற்று மகிழ்கின்றனர். தமிழ்ப் பண்பாட்டுப் பாதுகாவலனாக விளங்கும் இச்சங்கம் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வென்று 2013 ஆம் ஆண்டு மணிவிழா கண்டது.

இச்சங்கத்தைப் போலவே வடத்தமிழ்க் கூட்டிணைப்பு, அண்ணாதுரை பள்ளிக் கழகம், திராவிடப் பண்பாட்டுக் கழகம், சவான் தமிழ்க் கூட்டிணைப்பு, கிருட்டிணன் மேஸ்திரி நற்பணிச் சங்கம் போன்ற சங்கங்களின் தமிழ்ப் பண்பாட்டுப் பணிகளும் குறிப்பிடத்தக்கவை.

### தமிழ்ப் பேசுவோர் ஒன்றியம் (Tamil Speaking Union)

மொரிசியசில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மாலைப் பள்ளிகளைத் தவிர சில நிறுவனங்களும், உறுதுணையாய் நிற்கின்றன. அவற்றுள் தமிழ்ப் பேசுவோர் ஒன்றியம் ஒன்று. இது தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றி வருகின்றது. ஆண்கள், பெண்கள், முதியோர் என எல்லா வயதினரும் தமிழ் மொழியைப் பேச வேண்டும் என்ற கொள்கையை நாட்டளவில் பரப்புவது என்பது இவ்வமைப்பின் முதன்மை நோக்கமாகும்.




பொறுப்பாளர்கள் தமிழில் கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி ஆகியவற்றையும் நடத்தி வருகின்றனர். 2010 ஆம் ஆண்டில் சுப்பிரமணிய பாரதியார் கவிதை ஓதுதல் போட்டி நடத்தப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பின் கீழ் 21 நிறுவனங்கள் இயங்கின. தற்போது மொரிசியசு நாட்டின் நான்கு திசைகளிலும் தமிழ்ப் பேசுவோர் ஒன்றியத்தின் கீழ் முப்பத்தாறு நிறுவனங்கள் இயங்குகின்றன. இந்நிறுவனங்களில் பணிபுரியும் தமிழாசிரியர்களில் ஆண்களைவிட மகளிரின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளது.

இந்த முப்பத்தாறு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்ற இருபத்திரண்டு தமிழாசிரியர்களுள் பத்தொன்பது மகளிரும் மூன்று ஆண்களும் பேச்சுத் தமிழைக் கற்பிக்கின்றனர். சில வேளை ஒரே ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களில் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

**ஏழாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு**

உலகத் தமிழர்களை ஒன்றுகூடச் செய்து தமிழ்மொழி, தமிழினம், தமிழ்ப் பண்பாடு தழைத்திட உலகத்தமிழ மாநாடுகள் உதவி வருகின்றன. கடலாலும் நிலத்தாலும் பிரிக்கப்பட்டுள்ள பல்வேறு நாடுகளில் வாழும் தமிழ் மக்களிடையே ஒருமித்த தாய்மொழிப்பற்றை வளர்க்கவும் தமிழ்மொழி வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வடிவம் கொள்ளாமல் ஒரு பொது நிலையைப் பேணவும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாபம் தமிழ்ப் படைப்பாளிகளின் பணிகளையும் இணைத்து உலகத் தமிழிலக்கிய வரலாறு உருவாகவும் இம்மாநாடுகள் துணைநின்று வருகின்றன.

**உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள்**

| | | |
|---|---|---|
| முதல் மாநாடு | கோலாம்பூர், மலேசியா | ஏப்ரல் 16-23, 1966 |
| இரண்டாம் மாநாடு | சென்னை, தமிழ்நாடு | சனவரி 4-8, 1968 |
| மூன்றாம் மாநாடு | பாரிஸ், பிரான்சு | சூலை 15-18,1970 |
| நான்காம் மாநாடு | யாழ்ப்பாணம், இலங்கை | சனவரி 3-9, 1974 |
| ஐந்தாம் மாநாடு | மதுரை, தமிழ்நாடு | ஜூலை 4 - 10, 1981 |
| ஆறாம் மாநாடு | கோலாம்பூர், மலேசியா | நவம்பர் 15 - 19,1987 |
| ஏழாம் மாநாடு | மோக்கா, மொரிசியசு | திசம்பர் 4 - 7, 1989 |
| எட்டாம் மாநாடு | தஞ்சாவூர், தமிழ்நாடு | சனவரி 1-5, 1995 |

இம்மாநாடுகளைப் போலவே கோவையில் நடைபெற்ற உலகச் செம்மொழித் தமிழ் மாநாடு (சூன் 23 முதல் 27 வரை, 2010) குறிப்பிடத்தக்கது.

ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மொரிசியசு தமிழர்களிடையே ஒரு விழிப்புணர்வை உண்டாக்கிப் புதிய நம்பிக்கைகளை விதைத்தது. தமிழகத்திலிருந்து தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ஔவை நடராசன் அவர்கள் தலைமையில் ஒரு பெருங்குழு இம்மாநாட்டில் பங்கேற்றது. உலகெங்கும் வாழும் தமிழர்களோடு மொரிசியசு தமிழர்களும் காலத்திற்கேற்ற அறிவியல், பொருளியல், வாழ்வியல்களில் இணைந்தெழும் வாய்ப்புகளைக் கண்டறியும் வகையில் இம்மாநாடு அமைந்தது.





இம்மாநாட்டில் படிக்கப்பட்ட மூன்று ஆய்வுக் கட்டுரைகள் மொரிசியசின் மொழி-பண்பாடு குறித்த ஆய்வுரைகளாக அமைந்து சிறந்தன.

1. மொரீசியஸ் மொழிச் சூழமைபு - சு.இராசாராம்
2. மோரீசு நாட்டில் தமிழ்க்கல்வி - பா.வீரப்பன்
3. மொரீசியசில் தமிழ்த் திருமண முறைகள் - ஓர் ஒப்பிய்பார்வை - கே.சொர்ணம்

இவ்வாறே ஆங்கிலத்தில் படிக்கப்பட்ட மூன்று ஆய்வுக்கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை.

1. Social and Cultural Tamil Performance in Mauritius - L.P. Ramyead
2. The Preservation and Propagation of Tamil Culture overseas - Pyneesamy Padayachy
3. Aspects of Tamil Culture in Ile de France (Mauritius) 1803-1810- Sadasivam J. Reddi

இவற்றின் வழி மொரிசியசு தமிழர்கள் குறித்த ஒரு முழுமையான பார்வை உலகத் தமிழர்களுக்குக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது.

இம்மாநாட்டையொட்டி மோக்கா நகரில் இயங்கி வந்த ஒரு கண் மருத்துவமனைக்கு “சுப்பிரமணிய பாரதியார் கண் மருத்துவமனை” எனும்

பெயரிடப்பட்டது. அவ்வளாகத்தில் பாரதியாரின் மார்பளவுச் சிலையை மொரிசியசு நாட்டின் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கோபர்த்தன் அவர்கள் திறந்து வைத்தார்.

**அகில மொரிசியசு தமிழ்த்தேர்வுக்குழு**

மொரிசியசு தமிழ்வளர்ச்சியில் மாலைப்பள்ளிகளின் பங்களிப்பு மிகப்பெரியது. அம்மாலைப் பள்ளிகளுக்குத் தேர்வு நடத்தும் அமைப்பாக அகில மொரிசியசு தமிழ்த் தேர்வுக்குழு இருந்து வருகிறது. இதேர்வுக்குழு 1972இல் உருவாக்கப்பட்டது. 1973இல் மாணிக்கம் தங்கணமுத்து அவர்களின் முயற்சியால் பதிவு செய்யப்பட்டது. மொரிசியசில் தொடக்கநிலை முதல் பல்கலைக்கழகம் வரையிலான கல்விமுறையில் தமிழ்மொழி உரிய இடத்தைப் பெற அகில மொரிசியசு தமிழ்த் தேர்வுக்குழுவே மூலகாரணமாகும்.

கடந்த 40 ஆண்டுகளாக இத்தேர்வுக்குழு தொடக்க நிலை மற்றும் உயர்நிலையில் பல ஊர்களில் உள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பள்ளிகளுக்கான பாடத்திட்டத்தைத் தயாரித்துள்ளது. இத்தேர்வுக்குழுவின் வெற்றிகரமான தமிழ்க் கல்விப் பணிக்குப் பொன் திருமலைச்செட்டி, கேசவன் சொர்ணம், ஜெயராஜன் முருகேசன், கதிர்வேல் சொர்ணம், உமாதேவி அழகிரி போன்றோரின் உழைப்பு மூலகாரணமாகும்.

இத்தேர்வுக்குழுவின் வெற்றிக்குப் பின்புலமாக மாலைப்பள்ளிகள் இருந்து வருகின்றன. குறிப்பாக இப்பள்ளிகளின் சீரிய செயல்பாடுகளுக்குப் பெண்களின் பங்களிப்பு மிகப்பெரிது.

மொரிசியசு தெற்குப் பகுதியில் நடைபெறும் மாலைப் பள்ளிகளுள் 'திருவள்ளுவர் பள்ளி' முதன்மையானது. இப்பள்ளியில் தொடக்கநிலை வகுப்பு முதல் உயர்நிலை வகுப்பு வரையில் மாணவர்கள் தமிழ் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் இலட்சுமி வேலாயுதம் தமிழைக் கற்பித்து வருகிறார். இருபத்தேழு ஆண்டுகளாக இப்பணியைச் செய்துவரும் இவருடைய உழைப்பால்தான் இப்பள்ளி மிகச்சிறப்பாக இயங்கி வருகிறது.

பிரோவிதான்சு எனும் ஊரிலுள்ள ஈஸ்தன் தமிழ்ப் பள்ளியின் பணிகளும் தமிழ்க் கல்வியை வளர்த்தெடுத்து வருகின்றன. இப்பள்ளியில் இருபது ஆண்டுகளாகப் பணிபுரியும் இலட்சுமி செம்மன் தமிழ்த் தேர்வுக்குழு உறுப்பினராய் இருந்து தேர்வைச் சிறப்பாக நடத்தவும் தேர்வுத்தாள்களை உரிய காலத்தில் திருத்தவும் உழைத்து வருகிறார்.

சொக்கலிங்க மீனாட்சி அம்மன் கோயில் வளாகத்தில் உள்ள தமிழ்ப் பள்ளியில் 1986 முதல் தமிழ்ப் பணியாற்றி வரும் தேவி அப்பாசாமி அறுபது வயதைக் கடந்தும் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

கியூர்ப்பிபு நகரத்திலுள்ள திருஞானசம்பந்தர் பள்ளியை நடத்தி வருகிற ராவம்மா முருகன் பின்தங்கிய மாணவர்களுக்குத் தமிழ்க்கல்வியைக் கற்பிப்பதில் தனிக் கவனம் செலுத்தி வருகிறார்.

குட்லான்சு சிவ சுப்பிரமணியப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வரும் சரோஜா சஞ்சீவி அவர்களின் கல்விப்பணியும் குறிப்பிடத்தக்கது. பள்ளியில் மாணவர்கள் தொகை குறையும் சூழலில் பெற்றோருடன் தொடர்பு கொண்டு தமிழ்க் கல்வியின் தேவையை உணர்த்தி வருகிறார்.

கம்பர் முன்னேற்றப் பள்ளியில் தமிழைக் கற்பித்து வரும் மாலா சின்னராமன் தமிழ்மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் கற்றுத் தருவதில் வல்லவர்.

இவ்வாறு தமிழ்ப் பள்ளிகளை மிகுந்த தமிழுணர்வுடன் நடத்தி வரும் மகளிரின் அரிய உழைப்பால் அகில மொரிசியசு தமிழ்த் தேர்வுக்குழு தமிழ்ப் பண்பாட்டுப் பரவலுக்குத் தூண்டுகோலாய் விளங்கி வருகிறது.

**மகாத்மா காந்தி நிறுவனம்**

மொரிசியசு நாட்டில் இன்று தமிழ்மொழியும் தமிழிலக்கியமும் வளர ஒரு நம்பிக்கை வாய்ந்த நிறுவனமாகத் திகழ்வது மகாத்மா காந்தி நிறுவனம் ஆகும். மோக்கா நகரில் உள்ள இந்த நிறுவனம் இந்திய மொழிகளின் மையமாக இயங்கி வருகிறது.







பேராசிரியர் முனைவர் கேசவன் சொர்ணம்

இந்நிறுவனத்தின் இந்திய மொழிகள் புலத்தின் தலைவராகப் பேராசிரியர் முனைவர் கேசவன் சொர்ணம் பணியாற்றி வருகிறார். இவர் மாப்பசான் சிறுகதைகளையும் அறிஞர் அண்ணாவின் சிறுகதைகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். இங்குள்ள தமிழியல் துறை பின்வரும் வகுப்புகளை நடத்தி வருகிறது.

**தமிழியல் துறை நடத்தும் கல்விப் பயிற்சி வகுப்புகள்**

- தமிழியல் முதுகலைப்பட்ட வகுப்பு (M.A. Tamil)
- முதுநிலைக் கல்வியியல் சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பு (PGCE)
- தமிழியல் இளங்கலைப் பட்ட வகுப்பு (B.A. Tamil)
- தமிழியல் பட்டய வகுப்பு (Diploma in tamil Studies)
- ஆசிரியப் பயிற்சி வகுப்பு (Teacher Training Course)
- துணைத் தலைமையாசிரியர் பயிற்சி வகுப்பு (Deputy Headteacher's Course)
- மேற்பார்வையாளர் பயிற்சி வகுப்பு (DESI)
- கல்வியியல் மேல் நிலையான சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பு (ACE Course)
- தமிழ்மொழிக் கற்றல் அறிமுகப் பயிற்சி வகுப்பு (Introduction to tamil Course)
- பழக்கப்படுத்திக் கொள்ளும் அறிமுகப் பயிற்சி வகுப்புகள் (Orientation Courses).

மேற்கண்ட வகுப்புகளுக்குரிய பாடங்கள் கூட தமிழ்ப் பண்பாட்டை முன்னிறுத்துவனவாக அமைந்துள்ளன. தமிழ்மொழிக் கற்றல் அறிமுகப் பயிற்சி வகுப்புக்குரிய ஒரு பாடம் பின்வருமாறு அமைந்துள்ளது.

## ஆடைகளும் அணிகலன்களும்

**செல்வன்** : செல்வி, இந்தப் புடவையில் நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய், தெரியுமா? இது புதுப்புடவையா?

**செல்வி** : ஆமாம், இந்தப் பட்டுப்புடவை என் அண்ணனின் திருமணத்திற்குக் கிடைத்தது.

**செல்வன்** : அப்படியா? பரவாயில்லையே!

**செல்வி** : எங்கள் வீட்டில் எல்லாருக்கும் புது ஆடைகள் எடுத்தோம். என் தங்கைக்குப் பட்டுப் பாவாடை, தாவணி; என் தம்பிக்குப் புதுச்சட்டை; எங்கள் அப்பாவுக்குப் பட்டு வேட்டியும் துண்டும். எங்கள் அம்மாவுக்கும் பட்டுப் புடவைதான்.

**செல்வன்** : அது என்ன? காதில் ஜொலிக்கிறதே! புதுத்தோடா?

**செல்வி** : ஆம்! இது புதுத் தோடுதான்; நகைக்கடையில் வாங்கினோம். இந்த மூக்குத்தி பழைய மூக்குத்தி.

**செல்வன்** : கல்யாணத்தில் எல்லா வகையான நகைகளையும் பார்க்கலாம். ஒட்டியாணம், தோடு, ஜிமிக்கி, காசுமாலை (நெக்லஸ்), தங்க வளையல், மோதிரம் இப்படி எல்லா நகைகளையும் மக்கள் போடுவார்கள்.

**செல்வி** : இதோ! இந்தக் கொலுசுகூட புதியதுதான்.

**செல்வன்** : எனக்குக் கொலுசு ரொம்பப் பிடிக்கும். ஏனென்றால், அது நடக்கும்போது 'ஜல்ஜல்' என்று சத்தம் செய்யும். கேட்பதற்கும் அது இனிமையாக இருக்கும், அல்லவா?

**செல்வி** : செல்வா, நீ மெட்டி பார்த்திருக்கிறாயா?

**செல்வன்** : திருமணமான பெண்கள் காலில் இதை அணிவார்கள். நம் திருமணத்திற்கு நான் இதை உன் காலில் போடுவேன்.

இவ்வாறு தமிழைக் கற்பிக்கும் போதே தமிழ்ப் பண்பாட்டையும் கற்பிக்கும் கல்வி மையமாக மகாத்மா காந்தி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தமிழிசையை வளர்த்து தமிழ்ப் பண்பாட்டைக் காக்கும் பணியிலும் முழுமையாக ஈடுபட்டு வருகிறது.

இந்நிறுவனம் பல்வேறு கலைகளை வளர்த்து வருகின்றது. இக்கலைகளுள் இசைக் கலை ஒரு தனி இடம் பெற்றுள்ளது. மேலும், இந்நிறுவனத்தில் பலவகை இசைக்கருவிகள் இசைக்கலைஞர்களால் வாசிக்கப்படுகின்றன. அவை மிருதங்கம்,

தபலா, வயலின், வீணை முதலியனவாகும். மொரிசியசு நாட்டின் இசைத்துறையில் இந்த நிறுவனமே தலையாய நிறுவனமாக விளங்குகின்றது.

தமிழ் மாணவர்கள் மகாத்மா காந்தி நிறுவனத்தில் தமிழிசையும் மிருதங்கமும் பயின்று வருகின்றனர். கர்நாடக இசை இந்திய நாட்டின் தென்திசையில் வளர்ந்த ஒரு கலையாகும். தமிழிசை கர்நாடக இசையின் மூலமாகும்.

மகாத்மா காந்தி நிறுவனத்தில் தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் இசையைப் படிக்கும் வாய்ப்பு தரப்படுகிறது. பட்டய வகுப்பிலும் இளங்கலைப் பட்ட வகுப்பிலும் இசைக்கல்விக்குரிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பட்டய வகுப்பு மாணவர்கள் திருப்புகழ், தேவாரம், சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய பாடல்களைக் கற்றுக் கொள்கின்றனர். இளங்கலைப் பட்டப் படிப்பில் பன்னிரு திருமுறைகள் கற்பிக்கப்படுகின்றன.

இந்நிறுவனத்தின் ஒத்துழைப்பால் பல இடங்களில் தமிழிசை சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

**மகாத்மா காந்தி நிறுவனம் மற்ற இடங்களில் நடத்துகின்ற தமிழிசை வகுப்புகள்**

| இசை வகுப்பு | இடம் |
|---|---|
| மிருதங்கம் | மகாத்மா காந்தி உயர்நிலைப்பள்ளி |
| மிருதங்கம் | சர்மா ஜக்தம்பி உயர்நிலைப்பள்ளி |
| கர்நாடக இசை | நியுதன் கல்லூரி - தாயாக் |
| கர்நாடக இசை | லேடி சுசில் இராம்குலாம் உயர்நிலைப்பள்ளி |
| கர்நாடக இசை | ஸ்தன்லே நடராசன் மண்டபம் |

மகாத்மா காந்தி நிறுவனம் இசைக்கலைஞர்களுக்குப் பேருதவியாய் விளங்குகின்றது. கலைஞர்களை மேற்படிப்பு மேற்கொள்ள வெளிநாட்டுக்கு அனுப்புகின்றது. புதிய திட்டத்தின்படி, மகாத்மா காந்தி நிறுவனம் பிறதுறை மாணவர்களுக்காக வெள்ளிக்கிழமையிலும் சனிக்கிழமையிலும் தமிழிசை வகுப்பை நடத்தி வருகிறது .

மகாத்மா காந்தி நிறுவனம் சிறந்த ஆய்வு நிறுவனமாகவும் இன்று வளர்ந்து வருகிறது. இங்கு தமிழ்த் துறையில் பணியாற்றும் பேராசிரியர்கள் பலரும் தமிழ்நாடு சென்று முனைவர் பட்ட ஆய்வை முடித்துவிட்டு வந்துள்ளனர். எனவே இவர்களின் சீரிய வழிகாட்டுதலில் நல்ல ஆய்வேடுகள் இங்கு உருவாகி வருகின்றன.

சான்றெண் விளக்கம்

1. செ.வைத்தியலிங்கன், தமிழ்ப் பண்பாட்டு வரலாறு (முதல்பாகம்), ப.5.
2. களஆய்வில் நேரில் கண்டது (நாள் : 07.11.2013)
3. மா. கோதண்டராமன், நாட்டுப்புறவியலும் பண்பாடும், ப.29
4. கதிர்வேலன் சொர்ணம், "வடிவேலன் புகழ் பரப்பும் எங்கள் வானொலியும் தொலைக்காட்சியும்" முருக வழிபாடும் ஆய்வும் - இரண்டாவது அனைத்துலக மாநாடு, மொரீசியசு, 2001, ப.7.
5. அருணாசலம் புட்பரதம், " மொரீசியசில் தமிழ்க் கோவில்களின் பணிகள் அன்றும் இன்றும்" மொரீசியசு தமிழ்க் கோவில்களின் கூட்டிணைப்பு தலைமைச் செயலகத் திறப்புவிழா மலர், நவம்பர். 30, 1997. ப.22
6. களஆய்வில் நேரில் கண்டது (நாள் : 07.11.2013)
7. சு.இராசாராம், மொரீசியஸ் தமிழரும் தமிழும், ப.639
8. மேலது, ப.665
9. மேலது, ப.661
10. இராசரத்தினம் சங்கிலி, "வாழிய வாழிய வாழடா", இராசரத்தினம் சங்கிலி வாழ்க்கை வரலாறும் படைப்புகளும், ப.98
11. மேலது, ப.177
12. சிவப்பிரகாசன் முத்தையன், செதில்கள் (சிறுகதைகள்), 2012
13. நாகரத்தினம் கிருஷ்ணா, நீலக்கடல், (நாவல்) 2005.
14. சு.இராசாராம், மொரீசியசில் தமிழரும் தமிழும், ப.692.
15. இராசரத்தினம் சங்கிலி, "கும்மி" வசந்தம், (ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சிறப்பு மலர்), டிசம்பர் 1989, ப.73
16. மேலது. ப.77

# முடிவுரை



## பரிந்துரை

உலகமெங்கும் பரவியிருக்கும் தமிழ் மக்களின் நலன்காக்கும் பணிகளில் முழு கவனஞ் செலுத்தம் வகையில் தமிழக அரசு "புலம்பெயர் தமிழர் நலத்துறை" எனும் பெயரில் தனி அமைச்சகம் உருவாக்க வேண்டும்,

கலைகளின் வழியாகவே பண்பாட்டை எளிதில் தக்க வைத்துக் கொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். எனவே மொரிசியசு போன்ற தமிழர் புலம்பெயரந்த நாடுகளில் தமிழரின் மரபுக் கலைகள் மீண்டும் மீட்டுருவாகக்ம் செய்யப்பட வேண்டும்.

மொரிசியசு நாட்டின் வானொலி, தொலைக்காட்சி, இதழ்கள் போன்ற ஊடகங்களில் பேச்சுத் தமிழை வளர்த்தெடுப்பதற்கான சிறப்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்து இடம்பெற வழிவகைகள் காணவேண்டும்.

தமிழ்நாட்டுக்கும் மொரிசியசுக்குமான தொடர்புகள் மிகுதிப்படுத்த வேண்டும். மொழி, கல்வி, வணிகம், அறிவியல், அரசியல் போன்ற தொடர்புகளை விரிவுபடுத்துவதோடு அடித்தள உழைக்கும் தமிழ் மக்களும் தாய்த் தமிழகம் வந்து செல்ல வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

மொரிசியசு நாட்டில் தமிழ்க்கல்வி தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை செழித்துப் பரவ புதிய திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

மொரிசியசு நாட்டில தொடக்கக் காலத்தில் கோயில்களில் தமிழ்வழிபாடே நிலவி வந்தது. ஆனால் காலப் போக்கில் தமிழகத்திலிருந்து செல்லும் அர்ச்சகர்கள் பலரும் வடமொழி வழிபாட்டை முன்னிறுத்தி இயங்குவதால் கோயில்களில் தமிழுக்குரிய இடம் குறைந்து வருகிறது. எனவே சைவ, வைணவ இலக்கியங்களில் ஆழங்கால்பட்ட ஓதுவார்கள் பெருமளவில் மொரிசியசு கோயில்களில் பணியமர்த்தம் செய்யும் வண்ணம் குடியுரிமைச் சட்டங்களை எளிமைப்படுத்த வேண்டும்.

மொரிசியசில் உயர்கல்வி நிறுவனமாக விளங்கி வரும் மகாத்மா காந்தி நிறுவனத்தில் தமிழ்த்துறை மிக விரிவு செய்யப்பட வேண்டும், அத்துறை தமிழ் மொழித்துறை, தமிழ் இலக்கியத்துறை, தமிழ்ப் பண்பாட்டுத்துறை என மூன்று பிரிவுகளாக இயங்க வேண்டும், இதனால் இத்தீவுக்கு அருகில் உள்ள நீயூனியன், தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களும் இங்கு வந்து எழுத்துத்தமிழ், பேச்சுத்தமிழ், ஆய்வுத்தமிழ் பயில் வழிவகை ஏற்படும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களின் நம்பிக்கை நிலையமாக விளங்குவதால் இதன் விரிவாக்க மையங்களை மொரிசியசு, பிஜி, கனடா, ஆஸ்திரேரியா போன்ற நாடுகளில் நிறுவ வேண்டும். இதன் மூலம் புலம்பெயர் தமிழர்களின் மொழி, இலக்கியம், பண்பாடு சார்ந்த தேவைகள் நிறைவடையும்.

மொரிசியசு போன்ற தூர நாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கு தமிழ் நூல்களோ தமிழ் இதழ்களோ கிடைப்பதில்லை. எனவே புலம்பெயர் நாடுகளில் தமிழ் நூலகங்கள் உருவாக்க அரசும் தமிழ் அமைப்புகளும் முன்வரவேண்டும்.

மொரிசியசு நாட்டில் வாழும் தமிழ் மக்களிடையே பிரெஞ்சுமொழி, ஆங்கில மொழி புலமை மிகுந்துள்ளது. எனவே இவர்களைத் தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்க்கும் பணிகளில் ஈடுபடுத்தலாம் அல்லது பிரெஞ்சு இலக்கியங்களைத் தமிழுக்குக் கொண்டுவரப் பயன்படுத்தலாம். இதன் வழி தமிழுக்கும் அவர்களுக்குமான உறவு வலிமையடையும்.

மொரிசியசு நாட்டில் தமிழ் மரபுச் செல்வங்களை மக்கள் அறியும் வண்ணம் ‘அருங்காட்சியகம்’ அமைக்கலாம். இதன் மூலம் தமிழ்ப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்ய வாய்ப்பு உண்டாகும்.

இத்தீவில் ஆண்டுதோறும் தமிழ்க்கலை சார்ந்த போட்டிகளையும் தமிழர் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தவேண்டும்.

மொரிசியசு தமிழ்க் குடும்பங்களி உள்ள இளைய தலைமுறையினருக்குத் தமிழ்ப் பண்பாடு, இலக்கிய வளம் குறித்த எந்தப் புரிதலும் அறவே இல்லை. எனவே தமிழ்நாட்டுச் சூழலை அவர்கள் முழுமையாக உள்வாங்கிக் கொள்ளும்போதுதான் மொழி, இனம் சார்ந்த ஓர் ஈடுபாடு தோன்றும். எனவே ஆசிரியர், மாணவர் என அனைவரும் அடிக்கடி தமிழ்நாடு வந்து சிற்றூர்களுக்கும் சென்று தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் வண்ணம் வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் புலம்பெயரும் பிற நாட்டு மக்களிடம் பெற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள் மிகுதியாக உள்ளன. குறிப்பாக சீன மக்கள் உலகமெங்கும் பரவி வாழ்ந்தாலும் தன் மொழியையும் பண்பாட்டையும் இம்மியளவும் இழப்பதில்லை. அந்த உணர்வு தமிழினத்திடமும் வேரூன்ற வேண்டும்.

மொரிசியசு தமிழர்கள் மொழி இழப்பைப் பெரிதுபடுத்தாமல் பண்பாட்டை மட்டுமே தக்கவைத்துக் கொள்வதில் ஆர்வப்படுகின்றனர். மொழிவழி மலரும்

பண்பாட்டு அடையாளமே நிரந்தரமானது. மொழியை இழக்க நேர்ந்தால் பண்பாட்டு இழப்பும் காலப்போக்கில் தவிர்க்க முடியாது என்பதை மொரிசியசு மக்கள் தொலைநோக்கில் பார்வையில் உணரவேண்டும்.

தமிழர்கள் ஒற்றுமையின்மையும் பின்னடைவுக்கு ஒரு காரணமாகும். மொழியை மையப்படுத்தி ஒன்றிணைந்து பண்பாட்டைப் பாதுகாக்க தமிழை மொரிசியசு தமிழர்கள் வீட்டுமொழியாக மாற்ற உறுதியேற்க வேண்டும்.

# துணைநூற்பட்டியல்

## துணைநூற்பட்டியல்


1. அருந்தவராஜா ♣ புலம் பெயரும் மண்வாசம், கலை இலக்கியப் பேரவை, ஜெனிவா, சுவிட்சர்லாந்து, ஆ.இ

2. இராசமாணிக்கனார், ம. ♣ தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை, 2012.

3. இராசாராம், சு. ♣ மொரீசியஸ் தமிழரும் தமிழும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1991.

4. இராசேந்திரன், அ. ♣ நாட்டுப்புறப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள், வனிதா பதிப்பகம், சென்னை, 2006.

5. இராமகிருட்டினன், ஆ. ♣ தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 2011.

6. இராமநாதன், ஆறு. ♣ தமிழர் வழிபாட்டு மரபுகள் , மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2006.

7. உலகநாதன் சொர்ணம் ♣ மொரிசியசில் தமிழும் தமிழரும், கலைமகள் பதிப்பக வெளியீடு, போர்ட்லூயி, மொரிசியசு, 1989.

8. கேசவன் சொர்ணம் மற்றும் பலர் (ப.ஆ) ♣ படைப்புத் துளிகள், மகாத்மா காந்தி நிறுவனம், மொரிசியசு, 2009

9. கோதண்டராமன், மா. ♣ நாட்டுப்புறவியலும் பண்பாடும் , ஸ்ரீபாரதி புத்தகாலயம், சென்னை. 2011.

10. கோவிந்தன்,கா. ♣ பண்டைத் தமிழர் போர்நெறி, ராமையா பதிப்பகம், சென்னை, 2011.

11. சக்திவேல், சு. ♣ **தமிழர் பண்பாட்டில் கோலங்கள்,** மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2004.

12. சக்திவேல் முருகனார், மு.பெ. ♣ **வண்டமிழில் வாழ்வியல் சடங்குகள்,** உமா பதிப்பகம், சென்னை, 2012.

13. சதாசிவம், சு. ♣ **பழந்தமிழர் பண்பாட்டு நெறிகள்,** செம்மூதாய் பதிப்பகம், சென்னை, 2009.

14. சித்திரபுத்திரன், எச். ♣ **சங்கத் தமிழ் உறவுமுறைச் சொற்கள்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.

15. சிவப்பிரகாசன், முத்தையன். ♣ **செதில்கள்** (சிறுகதைத் தொகுப்பு) சிவப்பிரகாசன் முத்தையன் வெளியீடு, மொரிசியசு, 2012.

16. சுதர்மன், வி. ♣ **நினைவலைகள்** (மொரிசியசு ஏழாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு) பாரி நிலையம், சென்னை. 1990.

17. சுந்தர், எச். ♣ **புதிய வசந்தம், (சிறப்பு வெளியீடு)** தமிழ்த்துறை, மகாத்மா காந்தி நிறுவனம், மொரிசியசு 2011

18. சுந்தராசன், பூ. ♣ தமிழர் தேசிய அடையாளம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2002.

19. சுப்பிரமணியன், கே.எஸ். ♣ மரபும் ஆக்கமும், கணையாழி படைப்பகம், சென்னை, 2004.

20. செல்லம், வே.தி. ♣ தமிழக வரலாறும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2012.

21. சௌந்தரபாண்டியன்,சு. ♣ தமிழும் சமுதாயமும், பூங்காவனம் பதிப்பகம், இசையனூர், 2006.

22. தமிழ்மணி, ♣ இந்துக்களின் பழக்க வழக்கங்களும் சடங்குகளும் சீதை பதிப்பகம், சென்னை, 2012.

23. திருமலைச்செட்டி, சிவன். ♣ மொரிசியசு முருகன் பாமாலை தைப்பூச நன்னாள் வெளியீடு, மொரிசியசு, 1984.

24. நாகரத்தினம் கிருஷ்ணா ♣ நீலக்கடல், (புதினம்) சந்தியா பதிப்பகம், சென்னை, 2005

25. நாராயணன், இரா. ♣ மாற்றுப் பண்பாடும் சிற்பியின் கவிதைகளும், காவ்யா வெளியீடு, சென்னை, 2008.

26. நீலகண்ட சாஸ்திரி, க.அ. ♣ தமிழர் பண்பாடும் வரலாறும், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2011.

27. பக்தவத்சல பாரதி, ♣ தமிழர் மானிடவியல், அடையாளம் வெளியீடு, திருச்சி, 2008.

28. பக்தவத்சல பாரதி, ♣ பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.

29. பக்தவத்சல பாரதி, (தொ.ஆ.) ♣ தமிழர் உணவு, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2011.

30. பக்தவத்சல பாரதி, ♣ மானிடவியல் கோட்பாடுகள், அடையாளம் வெளியீடு, புத்தாநத்தம், திருச்சி, 2005.

31. பரம்சிவம், முத்துசாமி. ♣ மொரிசியஸ் தமிழர் மொழி - பண்பாடு - சமூகம், புத்ரா மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா, 2010.

32. பரமசிவன், தொ. ♣ பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2001.

33. பரமசிவன் வீரராகு ♣ இராசரத்தினம் சங்கிலி வாழ்க்கை வரலாறும் படைப்புகளும், முருகன் பவுண்டேஷன் வெளியீடு, மொரிசியசு, 2012

34. பெரியசாமி, மு. ♣ பண்பாட்டுப் பதிவுகள், முருகன் பதிப்பகம்,விழுப்புரம், 2004.

35. மயிலை சீனி வேங்கடசாமி ♣ பழங்காலத் தமிழர் வணிகம் ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை. 2011.

36. வரிசினி, ♣ தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரியம்,
அபி பதிப்பகம்,
பெரம்பலூர்,
2009.

37. விவேகானந்தன், வி. ♣ உலகம் கண்ட தமிழ்,
தமிழ் நேசன் அச்சகம்,
மலேசியா,
1993.

38. வேலுசாமி, ந. ♣ சர்க்கரைத் தீவுப் பயணம்,
(மொரிசியசு பயண நூல்)
சக்தி பிரிண்டர்ஸ்,
பள்ளிப்பாளையம், ஈரோடு,
1989.

39. வையாபுரிப்பிள்ளை, எஸ். ♣ தமிழர் பண்பாடு,
பிரானேஷ் பப்ளிகேஷன்,
சென்னை,
2009.

40. ஜெயமோகன், ♣ பண்படுதல் (பண்பாட்டு
விவாதங்கள்),
உயிர்மை பதிப்பகம்,
சென்னை,
2009.

## ஆங்கில நூல்கள்

41. Bissoondoyal, S ♣ **A Concise History of Mauritius**
Bharathiya Vidya Bhavan,
Bombay.
1965.

42. Burton, Benedict ♣ **Mauritius Problems of a Plural Society**
Pall Mall Press,
London,
1965.

43. Dinan, Monique ♣ **The Mauritioan Kaleidoscope**
(Languages and Keligions)
Best Graphics Ltd.,
Port Louis,
1986.

## சிறப்பு மலர்கள்

44 உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு - சிறப்புமலர், மொரிசியசு, 1980.

45 'வசந்தம்', ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சிறப்பு மலர், மகாத்மா காந்தி நிறுவனம் வெளியீடு, மொரிசியசு, 1989.

46 அருள்மிகு பழமுதிர்சோலை பால முருகன் திருக்கோயில், திருநெறிய தெய்வத்தமிழ்த் திருக்குடி நன்னீராட்டுப் பெருவிழா மலர், நுவெல் பிரான்சு, 24, அக்டோபர், 2004.

47 அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில் மகாகும்பாபிஷேக மலர், 13 நவம்பர், 2005, செந்த் ஆந்துவன் குட்லண்சு, மொரிசியசு.

48 அடியார் வான்புகழ், அருணாசலம் புட்பரதம் பவளவிழா மலர், சாந்தலிங்கனார் திருத்தொண்டர் கூட்டம், மொரிசியசு, 19 ஆகஸ்டு, 2012.

## English Magazines

49 Aadi padinettarm Perukku Vizha, Souvenir Magazine, 2 August 1996, Public Beach Flicen Flac, Mauritius.

50 All Mauritius Tamil Examination Syndicate, 40th anniversary magazine, 11th May 2013.

51 Arul mika subramania Swami kovil, Maha Kumbabhishegam, Souvenir Magazine, 24 June 2007, Derninghan Triolet, Mauritius.

52 Highlands Maariammen Tiroukkovil Mahakumbaabhishegum souvenir magazine, 16 September, 2007.

53 Inauguration of the Tamil Cultural Centre magazine. Maruitius Tamil Temples Federation, Moka, 30 November 1997

54 Proceedings of the Seventh international Conference - Seminar of Tamil Studies.

55 Tamil Culture 5000 years later - Souvenir Vadapalanai Murugankoyil Kuda Muzhaku Vizha, Grand Bay, 27 May 2001.

56 Thancanamootoo, M. 'Tamil in Mauritius', Proceedings of the fifth International Conference - Seminar of Tamil Studies, Madurai, 1981.

57 The Second International Conference Seminar on Murukan study and Worship - souvenir, 24-28 April 2001, Mauritius.

58 Tirumurai Isai - Sauvenir, 21st September 2000, Indira Gandhi Cultural Center, Phoenix, Mauritus

# மொரிசியசு நாட்டில் வெளியான
# சில சிறப்பு மலர்களின்
# அட்டைப்படத் தொகுப்புகள்

மொரிசியசு நாட்டில் வெளியான சில சிறப்பு மலர்களின்
அட்டைப்படத் தொகுப்புகள்




ஓம்
அருள் மிகு
திரௌபதியம்மன்
திருக்கோவில்
ARUL MIGOU
DRAUPADEE AMMEN
TIRUKOVIL
மகாகும்பாபிஷேகம்
MAHA KUMBABISHEGAM
SUNDAY 13 NOV. 2005

உ



வேலும் மயிலும் துணை்

அருள்மிகு பழமுதிர் சோலை பால முருகன் திருக்கோவில்-நுவெல் பிரான்ச்



# ARULMIGU PAZAMUTHIR SOLAI BAALA MURUGAN THIRUKKOVIL

## திருநெறிய தெய்வத் தமிழ்த் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

## THIRUKKUDA NANNEERAATTUP PERUVIZHAA

MAHA KUMBABHISHEGAM

SUNDAY 24TH OCTOBER 2004

7.00 a.m. to 12.00 (Noon)

Tayenaye Kovil Koottam

NOUVELLE FRANCE


SEMINAR ON MURUKAN STUDY AND WORSHIP
April 2001
Mauritius
Souveni
Organised by:
The National Organizing Committee
The International Centre for the Study of Murukan-Skanda
&
The Mahatma Gandhi Institute

வாழ்க சைவம்

வாழ்க தமிழ் மொழி

வாழ்க தமிழர்




# தொண்டன்
# THONDAN



"என் கடன் பணி செய்து கிடப்பதே"

அப்பர்


*Price : Rs 10*

Issue No 8

திருவள்ளுவர் ஆண்டு 2040. தீர்ப்பகை (விரோதி) கடகம் (ஆடி) மடங்கல் (ஆவணி) 2009

**Official organ of the SAANTHALINGAR THIRUTHTHONDAR KOOTTAM (Mauritius)**


## EDITORIAL

THONDAN has set itself a mission. Most members of our TAMIL community lack knowledge of our religious practices. This makes them easy prey to the charlatans who under the garb of the priest pretend to cure the gullible people's ills. If such be the case Kovils have no meaning and the presence of the Divine is questionable. THONDAN features articles mostly on religion, beliefs and practices. These articles are thoroughly investigated before being published. THONDAN's articles will enable each and everyone to become aware of those practices which are not to be taken for granted and at the same time to free them from the clutches of the charlatans. The community willingly squanders money and time upon meaningless practices. This has got to stop. Kovil is the only place, par excellence, where one can communicate with the Divine directly without an intermediary at no cost. An appeal is made to every reader of THONDAN to purchase several copies of THONDAN and to pass it on to relatives and friends in order to ensure dissemination. Remember THONDAN is a non-profit making journal

*Thiruththondar Nandrudaiyaan*
*G.Thanthanee*

## KÂLI AMMEN



## BELL VILLAGE


TAMIL CULTURE
5000 Years later
குடமுழுக்கு
விழா
Vada Palani Murugan Koyil
Grand Bay - 27 May 2001

புதிய

# வசந்தம்

சிறப்பு வெளியீடு

சனவரி 2011

Mahatma Gandhi Institute

# வசந்தம்

டிசம்பர் 1989



சிறப்பு மலர் ஏழாவது உலகத்
தமிழாராய்ச்சி மாநாடு

